




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:201 | 05-02-2026 | வியாழக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

05.02.2026 தை 22
வியாழக்கிழமை

சூரிய உதயம் 6.36

திதி:
இன்று அதிகாலை 2.50 வரை திரிதியை பின்பு சதுர்த்தி.

நட்சத்திரம்:
இன்று அதிகாலை 2.49 வரை பூரம் பின்பு உத்திரம்.

யோகம் :
இன்று அதிகாலை 3.38 வரை அதிகண்டம் பின்பு சுகர்மம்.

கரணம் :
இன்று அதிகாலை 2.50 வரை பத்திரை பின்பு மாலை 3.00 வரை பவம் பின்பு பாலவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.35 வரை அமிர்த யோகம் பின்பு யோகம் சரியில்லை.

சந்திராஷ்டமம்
இன்று அதிகாலை 12.49 வரை திருவோணம் பின்பு அவிட்டம்..

நல்ல நேரம்
காலை 10.30 – 11.30.
மாலை 12.30 – 1.30
இராகு காலம்
பிற்பகல் 1.30 – 3.00.
எமகண்டம்
காலை 6.00 – 7.30.

குளிகை
காலை 9.00 – 10.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# மத்திய அரசு தொடர்ந்து வஞ்சித்தாலும் தமிழகத்தில் மீண்டும் திமுக ஆட்சி அமைவது உறுதி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்



**விழுப்புரம், பிப்.5:**
விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் கொள்ளார பகுதியிலுள்ள சிப்காட் வளாகத்தில் புதன்கிழமை நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் 10 ஆயிரம் முகாம்கள் நிறைவு விழாவில் பங்கேற்று, 1,82,967 பயனாளிகளுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்ட நல உதவிகளை வழங்கி, இளைஞர்களின் கனவுகளைப் பதிவு செய்யும் என் கனவு - என் எதிர்காலம் திட்டத்தின் கீழ் புதிய இணையதளத்தை தொடங்கிவைத்து, முதல்வா மு.க.ஸ்டாலின் மேலும் பேசியது:

கடந்த சட்டப் பேரவைத் தேர்தலின்போது தொலைநோக்குப் பார்வையுடன் தேர்தல் அறிக்கையில் வழங்கிய வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றியும், தேர்தல் வாக்குறுதிகளில் சொல்லப்படாத பல திட்டங்களை முத்திரைத் திட்டங்களாக செய்து கொடுத்தும், தமிழக மக்களின் கனவுகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

**உங்களுடன் ஸ்டாலின் திட்டம்:** இந்தத் திட்டமும் பொதுமக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றால், உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்தை தொடங்கி, 10 ஆயிரம் முகாம்கள் நடத்த திட்டமிட்டோம்.

இந்தத் திட்டம் தொடங்கியவுடன், இதை செயல்படவிடக் கூடாது என்று சில பேர் உச்ச நீதிமன்றம் வரை சென்றார்கள். இந்த மாவட்டத்தைச்சார்ந்தவர்களுக்கு உச்ச நீதிமன்றமே அபராதம் விதித்து அனுப்பியது. யார், பெயர் எல்லாம் சொல்லத் தேவையில்லை. உங்களுக்கே தெரியும். அதையெல்லாம் கடந்துதான் இந்தத் திட்டம் வெற்றி பெற்றிருக்கிறது.

உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் பெறப்பட்ட 38.50 லட்சம் மனுக்களில் 38.44 லட்சம் மனுக்களை இறுதி செய்திருக்கிறோம். இந்த முகாம்களில் குடும்ப அட்டையில் திருத்தம், சொத்து வரி பெயர் மாற்றம், மின் இணைப்பு பெயர் மாற்றம் போன்ற கோரிக்கைகள்தான் அதிகமாக வந்திருக்கின்றன. இந்த மனுக்களுக்கு 30 முதல் 45 நாள்களுக்குள் தீர்வு காணப்பட்டது.

மேலும், உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்களில் மகளிர் உரிமைத் தொகை கோரி அளிக்கப்பட்ட மனுக்களை பரிசீலித்து, மீதியிருந்த விதிகளைக்கூட தளர்த்தி மேலும் 16 லட்சத்து 94 ஆயிரத்துக்கு 339 பேருக்கு கூடுதலாக கடந்த 2 மாதங்களாக மகளிர் உரிமைத் தொகையை வழங்கிக்கொண்டிருக்கிறோம்.

இந்த விழா மூலம் 1,82,967 பேருக்கு பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் வழங்கப்பட இருக்கிறது. இத்துடன் 35.45 லட்சம் பேருக்கு திமுக அரசு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத்தை வழங்குகிறது.

> உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் பெறப்பட்ட 38.50 லட்சம் மனுக்களில் 38.44 லட்சம் மனுக்களை இறுதி செய்திருக்கிறோம். இந்த முகாம்களில் குடும்ப அட்டையில் திருத்தம், சொத்து வரி பெயர் மாற்றம், மின் இணைப்பு பெயர் மாற்றம் போன்ற கோரிக்கைகள்தான் அதிகமாக வந்திருக்கின்றன. இந்த மனுக்களுக்கு 30 முதல் 45 நாள்களுக்குள் தீர்வு காணப்பட்டது.

**'நம்ம அரசு' வாட்ஸ்ஆப் சேவை:** இப்போது எண்ம (டிஜிட்டல்) யுகம். அதுவும் செயற்கை நுண்ணறிவு கோலோச்சும் காலம். அதற்கேற்றார்போல, அரசும் தன்னை மேம்படுத்திக்கொள்ள வேண்டும், மக்களின் அலைச்சல் குறைய வேண்டும், நேரத்தை சேமிக்க வேண்டும். அதற்காகத்தான், அரசு அலுவலகங்களுக்கு செல்லாமலேயே அரசு சேவைகளை இருந்த இடத்திலேயே பெறும் வகையில், 'நம்ம அரசு' என்ற பெயரிலான வாட்ஸ்ஆப் சேவையை கடந்த மாதம் தொடங்கியிருக்கிறோம்.

இதன்படி, 78452-52525 என்ற கைப்பேசி எண்ணுக்கு நீங்கள் வாட்ஸ்ஆப்பில் தகவல் அனுப்பினால், 16 துறைகளின் 51 சேவைகள் உங்கள் கைப்பேசி எண்ணிலேயே கிடைக்கும்.

இப்படி இன்னும் முன்னோக்கி ஓடும் அரசாக திராவிட மாடல் அரசு இருக்கிறது. இதெற்கெல்லாம் அடுத்த கட்டமாக ஒவ்வொருவரின் தேவைகளைக் கேட்டு, தமிழகத்தின் எதிர்காலத்தை வடிவமைக்கும் பணிகளின் அடுத்தகட்டப் பாய்ச்சலாகத்தான் கடந்த மாதம் 9-ஆம் தேதி திருவள்ளூர் மாவட்டம், பாடியநல்லூரில் உங்க கனவ செல்லுங்க திட்டத்தை தொடங்கி வைத்திருக்கிறேன். உங்கள் கனவுகளை உங்கள் வீட்டுக்கு வந்து கேட்பதற்காக 50 ஆயிரம் தன்னார்வலர்கள் களத்தில் இருக்கிறார்கள். இதை இன்னும் விரைவுப்படுத்த வேண்டும்.

**இளைஞர்களின் கனவுகளை அறிய...:** இளைய தலைமுறையினரின் எண்ணங்களை அறிந்து, அவர்களின் கனவுகளை சேகரிப்பதற்காக இந்த நிகழ்ச்சி மூலமாக என் கனவு - என் எதிர்காலம் என்ற இணையதளத்தை தொடங்கி வைத்துள்ளேன். இளைஞர்கள் அனைவரும் இந்த சமூகம் முன்னேற, நீங்கள் வாழும் பகுதி முன்னேற, நாட்டின் எதிர்காலம் சிறப்பாக அமைய உங்களின் எண்ணங்களை, ஆலோசனைகளை, கனவுகளை இந்த இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும்.

இப்படி நாம் ஒரு பக்கம் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகத் திட்டமிட்டு வந்தால், மற்றொருபுறம் மத்திய பாஜக அரசும், அதனுடைய கூட்டாளிகளும் தமிழகத்தின் வளர்ச்சியை கெடுப்பதற்கு அனைத்து செயல்களையும் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறார்கள்.

அதற்கு சமீபத்திய உதாரணம்தான் மத்திய நிதிநிலை அறிக்கை. இதில் தமிழகத்துக்கு எதுவுமே இல்லை. இதுவரைக்கும் ஒப்புக்கு திருக்குறளாவது சொல்லிக் கொண்டுவந்தார்கள். அதுவும் நிகழாண்டு கிடையாது. பெயருக்குக்கூட தமிழகத்துக்கு எந்த வளர்ச்சித் திட்டமும் கிடையாது. நம்முடைய பல்லாண்டு கோரிக்கைகள் எதுவும் கிடையாது.

**தந்திரத்தை செயல்படுத்தவில்லை:** பொதுவாக தேர்தல் நடைபெறும் மாநிலங்களுக்கு அந்தாண்டிலாவது மத்திய பட்ஜெட்டில் நிதி ஒதுக்குவதுதான் பாஜகவின் தந்திரமாக இருக்கும். அந்த தந்திரத்தைக்கூட தமிழகத்துக்கு செய்யவில்லை. அந்தளவுக்கு தமிழ் மீதும், தமிழகத்தின் மீதும் அவர்களுக்கு வெறுப்பு. இந்தியாவிலேயே தமிழகம்தான் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக இருக்கிறது. இப்படிப்பட்ட மாநிலத்தில் புதிய நெடுஞ்சாலைகள், புதிய ரயில் வழித்தடங்கள், மெட்ரோ ரயில்கள் என்று ஏராளமான உள்கட்டமைப்பு வசதிகள் தேவைப்படுகின்றன. ஆனால், மத்திய அரசுக்கு வருவாய் வாரி வழங்குகின்ற நம்முடைய மாநிலத்துக்கு மிக சொற்பமான பங்கைத்தான் திரும்பி வழங்குகிறார்கள்.

**சிறப்புத் திட்டங்கள் இல்லை:** 11 ஆண்டுகளாக சிறப்புத் திட்டங்களை அறிவிக்காமல் வஞ்சிக்கிறார்கள். ஏன் இப்படி, ஒரு வேளை தேர்தல் முடிவுகள் முன்கூட்டியே அவர்களுக்குத் தெரிந்து எப்படியும் தோற்கத்தான் போகிறோம், இவர்களுக்கு எதற்கு நிதி ஒதுக்க வேண்டும் என்று அப்படி நினைத்திருக்கலாம். அதுதான் உண்மை.உண்மைதான், நாம்தான் வெற்றிப் பெறப் போகிறோம். அதில் எந்த மாற்றமும் கிடையது.

அடுத்து உங்கள் ஆதரவுடன் அமையப் போகிறது திராவிடமாடல் 2.0 அரசுதான். அடுத்த அமையவுள்ள ஆட்சியில் இன்னும் பல திட்டங்களை நிறைவேற்றுவோம். உங்கள் கனவுகளை மு.க.ஸ்டாலின் நிறைவேற்றித் தருவான். தமிழகத்தை இந்தியாவின் முதல் மாநிலமாக முன்னேற்றுவோம் என்றார் ஸ்டாலின்.

இந்த விழாவில் அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சி.வெ.கணேசன், முன்னாள் அமைச்சர்களும், எம்.எல்.ஏ.க்களுமான க.பொன்முடி, செஞ்சி கே.எஸ்.மஸ்தான், எம்.பி.க்கள் துரை.ரவிக்குமார், தரணிவேந்தன், எம்.எல்.ஏ.க்கள் இரா.லட்சுமணன், அன்னியூர் அ.சிவா, ஆ.ஜெ.மணிக்கண்ணன், சமூகப் பாதுகாப்புத் திட்ட ஆணையர் கிரண் குராலா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முன்னதாக, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலர் பெ.அமுதா வரவேற்றார். மாவட்ட ஆட்சியர் ஷே.ஷேக் அப்தல் ரஹ்மான் நன்றி கூறினார்.

## மணிப்பூரில் குடியரசுத்தலைவர் ஆட்சி வாபஸ்!

**புதுடெல்லி, பிப்.5:**
மணிப்பூரில் இரு சமூகத்தினருக்கு இடையே ஏற்பட்ட மோதல் வன்முறையாக மாறியதைத் தொடர்ந்து 2 ஆண்டுகளுக்கும் மேலாக (2023 -25) அங்கு பதற்ற சூழ்நிலை நிலவியது. இதில் 250க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர். எனினும் அங்கு அவ்வப்போது வன்முறை ஏற்பட்டு வருகிறது.

இந்த தொடர் வன்முறைக்கு பொறுப்பேற்று 2 ஆண்டுகளுக்குப் பிறகு, 2025 பிப். 9 அன்று பிரேன் சிங் தனது முதல்வர் பதவியை ராஜிநாமா செய்தார். இதைத் தொடர்ந்து அங்கு குடியரசுத்தலைவர் ஆட்சி அமலில் உள்ளது. முதலில் 6 மாதங்கள் குடியரசுத்தலைவர் ஆட்சி இருந்த நிலையில், மேலும் 6 மாதங்கள் நீட்டிக்கப்பட்டது.

வரும் பிப்.12 ஆம் தேதியுடன் நிறைவடைய உள்ள நிலையில் ஆளுநர் அஜய்குமார் பல்லாவைச் சந்தித்து ஆட்சியமைக்க உரிமை கோரியுள்ளது பாஜக.

புது தில்லியில் உள்ள பாஜக தலைமையகத்தில் மணிப்பூர் பாஜக எம்எல்ஏக்களின் கூட்டம் நேற்று நடைபெற்ற நிலையில் பாஜக சட்டப்பேரவைக் குழு தலைவராக யும்நாம் கெம்சந்த் சிங் தேர்வு செய்யப்பட்ட நிலையில், அவர் மணிப்பூரின் புதிய முதல்வராக இன்று(பிப். 4) மாலை பதவியேற்க வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

# மணிப்பூர் முதல்வராக யும்நம் கேம்சந்த் சிங் பதவியேற்பு

**புதுடெல்லி, பிப்.5:**
மணிப்பூர் முதல்வராக பாஜகவின் யும்நம் கேம்சந்த் சிங் இன்று மாலை பதவியேற்றார். அவருடன் இருவர் துணை முதல்வர்களாகவும், ஒருவர் அமைச்சராகவும் பதவியேற்றனர்.

முதல்வராக பொறுப்பேற்றுள்ள யும்நம் கேம்சந்த் சிங் மைதேயி சமூகத்தைச் சேர்ந்தவர். துணை முதல்வராக பொறுப்பேற்றுள்ள நெம்சா கிப்ஜென் குகி சமூகத்தைச் சேர்ந்தவர். மற்றொரு துணை முதல்வரான லோசி திக்கோ, நாகா பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர். இவர்களோடு, கோவிந்ததாஸ் கொந்தவ்ஜம் என்பவர் மாநில உள்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ளார்.

பதவியேற்ற பிறகு செய்தியாளர்களிடம் பேசிய 61 வயதான முதல்வர் யும்நம் கேம்சந்த் சிங், “மணிப்பூரில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான ஒரு பெரிய பொறுப்பை பாஜக தேசிய தலைமை எனக்கு வழங்கியுள்ளது. நாங்கள் அனைத்து சமூகத்தினரின் விருப்பங்களையும் நிறைவேற்றியுள்ளோம். இனியும் நிறைவேற்றுவோம்” என தெரிவித்தார்.



அரசு பொறுப்பேற்ற உள்ளதை முன்னிட்டு மணிப்பூரில் அமலில் இருந்த குடியரசுத் தலைவர் ஆட்சி விலக்கிக் கொள்ளப்பட்டது.

முன்னதாக, புதிய மணிப்பூரில் கடந்த 2023 மே மாதம் மைதேயி, குகி சமூகத்தினர் இடையே இனக் கலவரம் மூண்டது. இதில் 260 பேர் உயிரிழந்தனர். ஆயிரக் கணக்கானோர் இடம் பெயர்ந்தனர். பல மாதங்களாக வன்முறை நீடித்ததால் கடந்த 2025 பிப்ரவரியில் பாஜகவை சேர்ந்த முதல்வர் பிரேன் சிங் பதவி விலகினார்.

இதையடுத்து மணிப்பூர் சட்டப்பேரவை முடக்கி வைக்கப்பட்டு, அம்மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப் பட்டது. பிறகு இது மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிப்ரவரி 12-ம் தேதி முடிவுக்கு வர இருந்த நிலையில், தற்போது புதிய அரசு பொறுப்பேற்றுள்ளது.






# மத்திய மந்திரி - ராகுல் காந்தி நேருக்கு நேர் வாக்குவாதம்: துரோகி, எதிரி என விமர்சித்ததால் பரபரப்பு

**புதுடெல்லி, பிப்.5:**
பாராளுமன்ற வளாகத்தில் இன்று இடைநீக்கம் செய்யப்பட்ட 8 எம்.பி.க்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பாராளுமன்ற மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்திக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், அவர் சிறிது நேரம் அந்த ஆர்ப்பாட்டத்தில் உடன் இருந்தார். அப்போது மத்திய இணை அமைச்சர் ரவ்னீத் சிங் பிட்டு அந்தப் பகுதியை கடந்தார். இதைப் பார்த்த ராகுல் காந்தி, “இதோ ஒரு துரோகி. பக்கத்திலேயே செல்கிறார். அந்த முகத்தை பாருங்கள்” என்று கூறினார்.

இதனைத் தொடர்ந்து, “வணக்கம் சகோதரரே, எனது துரோகி நண்பரே. கவலைப்படாதீர்கள். நீங்கள்



மீண்டும் காங்கிரசுக்கு வருவீர்கள்” என்று ராகுல் காந்தி கூறியபடி அவருடன் கை குலுக்க முயன்றார். அதற்கு பதிலளித்த மத்திய இணை அமைச்சர் ரவ்னீத் சிங் பிட்டு, “நாட்டின் எதிரி” என்று கூறியபடி ராகுல் காந்தியுடன் கை குலுக்க மறுத்துவிட்டார்.

இருவரும் கடுமையான வார்த்தைகளை பரிமாறிக்கொண்ட சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியது.




## திருக்குறள் குறள்-521

பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள



ஒருவன் வறியவனான காலத்திலும் அவனுக்கும் தமக்கும் இருந்த உறவைப் பாராட்டிப் பேசும் பண்புகள் சுற்றத்தாரிடம் உண்டு.

## சிந்திக்க ஒரு நொடி



விடையறிந்து
எழுத செல்வது
தேர்வு....
விடை அறியாமல்
எழுதிக்
கொண்டிருப்பது
வாழ்க்கை ...

உஷா முத்துராமன்

## சிறப்பு அலங்காரத்தில் இளங்கிளியம்மன் உடனுறை ஆட்சீஸ்வரர் தெப்பலில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார்



அச்சிறுப்பாக்கத்தில் நடந்த தைப்பூசவிழாவில் இளங்கிளியம்மன் உடனுறை ஆட்சீஸ்வரர் சிறப்பு அலங்காரத்தில் தெப்பலில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

## தெப்ப உற்சவத்தில் சுவாமி கள்ளபிரான் மோகினி அவதாரத்தில் எழுந்தருளினார்



ஸ்ரீவைகுண்டம் கள்ளபிரான் சுவாமி கோயிலில் தை திருவிழாவை முன்னிட்டு நடந்த தெப்ப உற்சவத்தில் சுவாமி கள்ளபிரான் மோகினி அவதாரத்தில் எழுந்தருளினார்.

## மாணவிகளுக்கு இலவச சைக்கிள்



ஈரோடு வீரப்பன் சத்திரம் அரசுமகளிர் மேல்நிலைப் பள்ளியில் மாணவிகளுக்கு இலவச சைக்கிள்களை அமைச்சர் முத்துசாமி வழங்கினார். உடன் கலெக்டர் கந்தசாமி, சந்திரகுமார் எம்எல்ஏ.

## கோவில்பட்டியில் நலத்திட்ட உதவிகள்



தமிழ்நாடு தேவேந்திரகுல மக்கள் இயக்கம் சார்பில் கோவில்பட்டியில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

## அண்ணா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா




சென்னை அண்ணா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கவர்னர் ரவி பட்டங்களை வழங்கினார்.

## பழனி முருகன் கோயிலுக்கு காவடிகளுடன் பாதயாத்திரை



தைப்பூசத்தையொட்டி, பழனி முருகன் கோயிலுக்கு காரைக்குடி நகரத்தார், காவடிகளுடன் பாதயாத்திரையாக வந்தனர்.

## உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயிலில் மகா ஆரத்தி தரிசனம்



**செய்யாறு பிப்.5:**
செய்யாறு அடுத்த உக்கல் அருள்மிகு மடாவளம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயில் மகா ஆரத்தி நிகழ்வு நேற்று நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம் ,காஞ்சிபுரம் -வந்தவாசி சாலையில் கூழமந்தல் அடுத்து உள்ளது உக்கல்.

இங்கு எழுந்தருளி உள்ள மடாவளம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோயிலில் நேற்று யாக வேள்வி பூஜையை ஆலய குரு சங்கர் குருஜி நடத்தினார். அதனைத் தொடர்ந்து கலச புறப்பாடும், சிறப்பு அபிஷேகம், ஆராதனையும் நடைபெற்றது.

பின்னர் சிறப்பு அலங்காரத்தில் ஸ்ரீகாமாட்சி அம்பாள் அருள் பாலித்தார். மகா ஆரத்தி நிகழ்வில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

## நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு உலக புற்றுநோய் தின விழிப்புணர்வு..!



**வந்தவாசி, பிப் 05:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த அம்மையப்பட்டு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் உலக புற்றுநோய் தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியை சத்யபாமா (பொறுப்பு) தலைமை தாங்கினார். ரெட் கிராஸ் சங்க செயலாளர் பா.சீனிவாசன் முன்னிலை வகித்தார். பள்ளி ஆசிரியை த.சாந்தி வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக, இரும்பேடு நகர ஆரம்ப சுகாதார மைய மருத்துவர் ஜெ.ஜெயக்குமார் பங்கேற்று புற்றுநோய் ஏற்படுவதற்கான காரணங்களையும், அதிலிருந்து விடுபட வேண்டிய வழிவகை முறைகளையும் விளக்கினார்.

மேலும் மாணவர்களுக்கு புற்றுநோய் விழிப்புணர்வு பற்றிய பேச்சுப் போட்டிகள் நடைபெற்று, சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. மேலும் வெங்கடேஸ்வரா மெட்ரிக் பள்ளி முதுகலை ஆசிரியர் எம்.எஸ்.கார்த்திகேயன் பங்கேற்று புற்றுநோயின் அறிகுறிகள் பற்றிய கருத்துரைகளை வழங்கினார். ஆசிரியை மணிமேகலை வாழ்த்துரை வழங்கினார். இறுதியில் பள்ளி ஆசிரியை மேரி நன்றி கூறினார்.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## ஸ்ரீ துர்கா தேவி சஹஸ்ரநாம பூஜை





**பொள்ளாச்சி, பிப்.05:**
பொள்ளாச்சி ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் தை செவ்வாய் முன்னிட்டு மூலவர்க்கும், உற்சவருக்கும், முருகர் அனைத்து தெய்வங்களுக்கும் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், வெட்டிவேர் மாலைகளால் அலங்கரித்து, உற்சவருக்கு வண்ண வண்ண கலர் கற்களால் ஸ்ரீ துர்காதேவியை அலங்கரிக்கப்பட்டு, துர்காதேவி சஹஸ்ரநாம பூஜை செய்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகாதீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான ஆர்ய வைஸ்ய ஆண்கள்,பெண்கள் அனைவருக்கும் பூஜையில் கலந்து கொண்டு அனைவரும் ஸ்ரீதுர்கா தேவியை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு இ பேப்பர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## திருக்குறளுக்கு சிறப்பான தெளிவுரை சொன்ன 11ம் வகுப்பு மாணவிகள்



**நெல்லை, பிப்.05:**
பாளையங்கோட்டை குழந்தை இயேசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 04.02 .2026 புதன்கிழமை அன்று நடைபெற்ற திருக்குறள் திருப்பணிகள் திட்ட 27- ஆவது பயிலரங்கில் திருக்குறளுக்கு சிறப்பான தெளிவுரை சொன்ன பதினொன்றாம் வகுப்பு மாணவிகள் சுமையா, மது ராஜஸ்ரீ, சிவானி ஆகியோருக்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் அருட் சகோதரி அற்புதம் மேரி பரிசுகள் வழங்கினார்.

உடன் உதவி தலைமை ஆசிரியர் அருட்சகோதரி செல்வ தெரஸ், திருக்குறள் திருப்பணிகள் திட்டக் கண்காணிப்புக் குழு உறுப்பினர் கவிஞர் பேரா ஆகியோர் உள்ளனர்.

## நீயே வெற்றியாளன், போதை ஒழியட்டும் பாதை ஒளிரட்டும்



**திருவண்ணாமலை, பிப்.05:**
திருவண்ணாமலை எஸ்.ஆர்.ஜி.டி.எஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற ’ நீயே வெற்றியாளன், போதை ஒழியட்டும் பாதை ஒளிரட்டும்’ என்ற போதை விழிப்புணர்வு நிகழ்ச்சியில் உயர்திரு. மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப அவர்கள் கலந்து கொண்டார். உடன் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம்



திருப்பத்தூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் V.சியாமளா தேவி., தலைமையில் நடைபெற்றது. இக்குறைதீர்வு கூட்டத்தில் பொதுமக்களிடம் மொத்தமாக 40 மனுக்கள் பெறப்பட்டன. மனுக்களை விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

## தன்முனைக் கவிதைகள் ‘நாற்றிசையும் நற்றமிழும்’ தொகுப்பு நூலினை முனைவர் கா.ந.கல்யாணசுந்தரம் வெளியிட்டார்




**சென்னை, பிப்.05:**
சென்னை பட்டாபிராம் - கே.கே.ஆர் மஹாலில் கவிதைச் சாரல் சங்கத்தின் ஆறாம் ஆண்டு விழா மேடையில் குழும நிறுவனர் கவிஞர் பேச்சியம்மாள் தொகுத்த நாற்றிசையும் நற்றமிழும் என்கிற தன்முனைக் கவிதை நூலினை தன்முனைக் கவிதைகளின் தந்தை கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம் அவர்கள் வெளியிட தன்முனைக் குழும செயல் தலைவர் கவிஞர் ந.வேலாயுதம் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

நூலினை வெளியிட்டு முனைவர் கா.ந.கல்யாணசுந்தரம் அவர்கள் நிறுவுனர் பேச்சியம்மாள் அவர்களின் தமிழ்த்தொண்டினைப் பாராட்டிப் பேசினார்.

விழா மேடையில்குழும நிறுவனர் பேச்சியம்மாள், கவிஞர்கள் தனராஜ் பாப்பணன் , சின்ன இளங்கோ,அன்புச்செல்வி, தங்கத்தமிழ் வளையாபதி, ஜெ.விஜயன், யாதுமறியான், எஸ்.பூர்ணேஸ்வரி, செல்வநாயகி மற்றும் பலர் உள்ளனர். தொகுப்பு நூலில் 25 கவிஞர்களின் தன்முனைக் கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

கவிதைகளைத் தேர்வுசெய்து முனைப்புடன் தொகுப்பில் உதவிய கவிஞர் ந.வேலாயுதம் அவர்களுக்கு பாராட்டும் விருதும் மேடையில் வழங்கப்பட்டது. காலை முதல் மாலை வரை நடைபெற்ற கவிதைச் சாரல் சங்க ஆண்டு விழாவில் 40க்கும் மேற்பட்ட நூல்கள் வெளியிடப்பட்டன.

விழாவில் சொல்லின் செல்வர் ஆவடி குமார், பேச்சாளர்கள் விக்டர்தாஸ், வெற்றிப்பேரொளி, ஈழவேங்கை தம்பி மற்றும் கவிஞர்கள் கா.கணேசன், இராசகுமாரன்,தமிழன் திருவண்ணாமலை,செந்துறை மதியழகன், சிராசெல்வகுமார், மறுமலர்ச்சி பாலகுருசாமி, பஞ்சநாதன் சின்னா, அனுராதா சௌரிராஜன்,அசோகன், சுப்புராஜு , செல்வநாயகி, இரா.சாந்தி, இந்திராணி,சாந்தி பிரபு,ஐயப்பன், மற்றும் பல தமிழ் ஆளுமைகள், கவிஞர்கள் கலந்து கொண்டனர். கவிதைச் சாரல் விழாக் குழுவினர் சிறப்பாக ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நான் முதல்வன் உயர்வுக்கு படி என்ற நிகழ்ச்சி



**திருவண்ணாமலை, பிப்.05:**
திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நான் முதல்வன் உயர்வுக்கு படி என்ற நிகழ்ச்சி நடைபெற்றது. புதிய தலைமை ஆசிரியர் ராமமூர்த்தி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

தலைமை ஆசிரியர் முனைவர் மு. பிரசன்னா அவர்கள் தலைமையில் அரசு கலைக் கல்லூரி கணிதத் துறை தலைவர் பெ. ஏழுமலை அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் உயர் கல்வி வாய்ப்புகளை பற்றியும் 7.5 உயர்கல்வி நிறுவனங்களில் அரசு பள்ளி மாணவர்களுக்கான வாய்ப்பு பல்வேறு பாடப்பிரிவுகள் பெற்றோர்களுடைய குடும்ப சூழல் போன்றவற்றை தெளிவாக விளக்கிய சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

பல்வேறு உயர் கல்வி வாய்ப்பு பதாகைகள் மற்றும் மாணவருடைய எதிர்கால கனவுகள் போன்றவை விவாதிக்கப்பட்டது. விழாவில் வழிகாட்டி ஆசிரியர்கள் ஆறுமுகம் பரசுராமன் சங்கீதா முத்துக்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தனர். வடிவேல் உதவி தலைமை ஆசிரியர் கேசவன் அவர்கள் நன்றி உரையாற்றினார். 11-ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டு மகிழ்ச்சியோடு சென்றார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் வருவாய் கடந்தாண்டு அதிகரிப்பு

சென்னை, பிப்.5:

சென்னையில் 2 வழித்தடங்களில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. 3 லட்சத்துக்கும் மேற்பட்டோர் தினமும் பயணம் செய்கின்றனர். மெட்ரோ ரயில் நிறுவனம் டிக்கெட் கட்டண வருவாய் மட்டுமின்றி, இதர வழிகளிலும் வருவாயை திரட்டும் பணிகளை கடந்த சில ஆண்டுகளாக மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, வாகன நிறுத்தும் இடம் அதிகரிப்பு, மெட்ரோவுக்கு சொந்தமான இடங்களை தனியாருக்கு நீண்ட காலத்துக்கு குத்தகை விடுவது, ரயில்கள், ரயில் நிலையங்களில் தனியார் விளம்பரம் செய்ய அனுமதிப்பது உட்பட பல்வேறு வகைகளில் வருவாயை ஈட்டுகிறது. இதனால் அந்நிறுவனத்தின் வருவாய் கணிசமாக அதிகரித்து வருகிறது. இதற்கிடையே, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் 2024-25-ம் நிதியாண்டின் அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதன்படி சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மொத்த வருவாய் ரூ.369.49 கோடியிலிருந்து ரூ.425.64 கோடி ஆக உயர்ந்துள்ளது.

இது 15 சதவீதம் அதிகமாகும். பயணக் கட்டண வருவாய் மட்டுமின்றி, இதர பிரிவுகளில் வருவாய் அதிகரித்துள்ளது. இதர பிரிவு வருவாய் ரூ.104.30 கோடியிலிருந்து ரூ.135.39 கோடியாக அதிகரித்துள்ளது. இது 30 சதவீதம் அதிகமாகும். வரும் ஆண்டுகளில் பயணிகள் எண்ணிக்கையும், இதர பிரிவுகளில் பயன்பாடுகளும் அதிகரிக்கும் என்பதால், வருவாய் மேலும் அதிகரிக்கும் என்று சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சென்னை விமான நிலையத்தில் ரூ.1¼ கோடி தங்கம், ரூ.2¾ கோடி வெளிநாட்டு பணம் சிக்கியது

சென்னை, பிப்.5:

சென்னை, மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையத்திற்கு துபாயிலிருந்து வந்த விமானத்தில் பெருமளவு தங்கம் கடத்தி வரப்படுவதாக சுங்க இலாகா அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து துபாயிலிருந்து திரும்பிய 30 வயது வாலிபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் நிறுத்தி விசாரிக்கப்பட்டார். அவரின் உடைமைகளை சோதனை செய்தபோது எதுவும் கிடைக்காத நிலையில், எக்ஸ்-ரே பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் அவர் ஆசனவாயில் மறைத்து வைத்திருந்த ரூ.1 கோடியே 37 லட்சம் மதிப்புடைய 24 காரட் தூய்மையுள்ள 940 கிராம் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. அந்த வாலிபரை சுங்க இலாகா அதிகாரிகள் கைது செய்து விசாரணை நடத்தினர்.

அப்போது சென்னை விமான நிலைய வெளியே நிற்கும் 2 பேரிடம் இதை கொடுத்தால் பணம் தருவார்கள் என கூறினார். சுங்க இலாகா அதிகாரிகள் கடத்தல் வாலிபருடன் வெளியே வந்து அந்த 2 பேரையும் கைது செய்தனர். இவர்களிடம் தங்கம் கடத்தல் கும்பல் குறித்து விசாரித்து வருகின்றனர். மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து துபாய்க்கு புறப்படத் தயாராக இருந்த விமானத்தில், பாதுகாப்பு சோதனையின் போது சென்னையைச் சேர்ந்த 30 வயது பெண் ஒருவர் பிடிபட்டார். அவரது சூட்கேஸை திறந்து பரிசோதனை செய்ததில் அடிப்பகுதியில் ரகசிய அறை அமைத்து, அதில் அமெரிக்க டாலர் மற்றும் யூரோ கரன்சி கட்டுக்கட்டாக மறைத்து வைத்திருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. ரூ. 2 கோடியே 73 லட்சம் மதிப்புடைய வெளிநாட்டு பணம் பறிமுதல் செய்யப்பட்டது.

## தமிழக, காரைக்கால் மீனவர்கள் 9 பேர் விடுதலை

ராமேசுவரம், பிப்.5:

தமிழக, காரைக்கால் மீனவர்கள் 9 பேரை விடுதலை செய்து இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கடந்த டிசம்பர் 28-ம் தேதி நெடுந்தீவு அருகே பாக் நீரிணை கடற்பகுதியில், ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது, சந்தியா ஜோசப் என்பவரது விசைப்படகை இலங்கை கடற்படையினர் சுற்றிவளைத்தனர்.

படகில் இருந்த மீனவர்கள் அமோஸ்டின், ஜெனிடாஸ், ஜெபஸ்டின் ஆகியோரைக் கைது செய்த இலங்கை கடற்படையினர், அவர்களை ஊர்க்காவல் துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். பின்னர் மீனவர்கள் யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டனர். மேலும், கடந்த 2-ம் தேதி காரைக்கால் மீனவர்களின் 2 படகுகளை சிறைபிடித்த இலங்கை கடற்படையினர், 11 மீனவர்களை கைது செய்தனர். அவர்களும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டனர். மீனவர்களின் காவல் செவ்வாய்க்கிழமையோடு நிறைவடைந்தது. தொடர்ந்து 12 மீனவர்களும் ஊர்க்காவல் துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி நளினி சுபாஸ்கரன், 12 மீனவர்களில் 9 மீனவர்களை நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்தார்.

## “கமலின் பெயர், புகைப்படம் வணிக ரீதியாக பயன்படுத்த விதிக்கப்பட்ட தடை நீட்டிப்பு

சென்னை, பிப்.5:



நாடாளுமன்ற உறுப்பினரும், மக்கள் நீதி மய்யம் தலைவருமான கமல்ஹாசனின் புகைப்படம் மற்றும் பெயரை வணிக ரீதியாக பயன்படுத்த விதிக்கப்பட்ட தடையை சென்னை உயர் நீதிமன்றம் நீட்டித்துள்ளது.

சென்னையைச் சேர்ந்த ‘நீயே விடை’ என்ற பெயருடைய நிறுவனம், தனது புகைப்படம், பெயர், உலக நாயகன் என்ற பட்டத்தையும், தனது பிரபல வசனத்தையும் தனது அனுமதியின்றி பயன்படுத்தி, டிசர்ட்களையும், சர்ட்களையும் விற்பனை செய்து வருவதாகக் கூறி, நடிகர் கமல்ஹாசன், சென்னை உயர் நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் வர்த்தக ரீதியில் கமல்ஹாசனின் அனுமதியின்றி அவரின் பெயர், புகைப்படங்களை பயன்படுத்த இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது.

இந்நிலையில், இந்த வழக்கு நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, கமல்ஹாசன் சார்பில் ஆஜரான வழக்கறிஞர், எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்ட நோட்டீஸ் தவறான முகவரி என திரும்ப வந்துள்ளதாக கூறினார்.

அதன் காரணமாக மின்னஞ்சல் மூலமாக நோட்டீஸ் அனுப்ப அனுமதிக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார். வழக்கு தொடர்பாக தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதாகவும் கமல்ஹாசன் தரப்பில் கூறப்பட்டது.

இதனையடுத்து நீதிபதி, எதிர்மனுதாரருக்கு மின்னஞ்சல் மூலம் நோட்டீஸ் அனுப்ப கமல்ஹாசன் தரப்புக்கு அனுமதி அளித்தார்.

மேலும், கமல்ஹாசன் தரப்பு விரும்பும்பட்சத்தில் மனு குறித்து செய்தி தாள்களில் இன்னும் விரிவாக விளம்பரம் செய்ய அறிவுறுத்தி வழக்கை பிப்ரவரி 25-ம் தேதிக்கு தள்ளிவைத்து உத்தரவிட்டார்.

## வெளிநாடுகளுக்கு சென்று ஸ்கேன் பரிசோதனை செய்து கருவின் பாலினத்தை தெரிவித்தால் கடும் நடவடிக்கை

சென்னை, பிப்.5:

வெளி நாடுகளுக்கு சென்று ஸ்கேன் பரிசோதனை மேற்கொண்டு, கருவின் பாலினத்தை தெரிவித்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்புக்கு முந்தைய கருவின் தன்மை அறியும் தொழில்நுட்ப முறைகள் (பாலினதேர்வை தடை செய்தல்) சட்டத்தின்படி அமைக்கப்பட்ட மாநில மேற்பார்வை குழு கூட்டம் சென்னை தலைமைசெயலகத்தில் நேற்று நடந்தது.

சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நடந்த கூட்டத்தில் துறையின் செயலர் இந்த சட்ட செயல்பாடுகளின் ஆய்வு நடைபெற்றது. சுகாதாரத்துறையின் அதிகாரிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதுதொடர்பாக சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறியதாவது: கடந்த 1994-ல் பெண் குழந்தைகள் கருக்கலைப்பை தடுக்கும் நோக்கில் இயற்றப்பட்ட இந்த சட்டமானது 2003 -ல் திருத்தம் செய்யப்பட்டு கருவுறுதலுக்கு முன் பாலின தேர்வைதடை செய்யும் முறைகளும், சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

இந்த சட்டத்தின்படி பதிவு பெற்ற அரசில் 1,727, தனியாரில் 7,343 என மொத்தம் மொத்தம் 9,070 ஸ்கேன் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழகம் முழுவதும் மண்டல வாரியாக திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம்கள் நடத்த முடிவு செய்யப்பட்டது.

முதல்கட்டமாக சென்னை, கோவை, மதுரை, கன்னியாகுமரி ஆகிய 6 மண்டலங்களில் நடைபெற்றதில், 2,492 தனியார், அரசு மருத்துவர்கள் பயிற்சி பெற்றனர். மாநிலத்தில் செயல்பட்டு வரும் உரிய அதிகாரிகள் மேற்கொள்ளும் செயல்பாடுகளை பரிசீலனை செய்து உரிய ஆலோசனைகளை இக்குழு வழங்கியது. சட்டத்தை பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வழிவகைகள் ஆய்வு செய்யப்பட்டது.

வெளிநாடுகளுக்கு சென்று ஸ்கேன் பரிசோதனை மேற்கொண்டு, கருவின் பாலினத்தை தெரிவிக்கும் இந்தியர்கள் மீது சட்ட ரீதியாக கடும் நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு 2025-ல் சட்ட விதிமீறல்கள் கண்டறியப்பட்ட 15 ஸ்கேன் மையங்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், 38 மாவட்டங்களில் உள்ள ஆலோசனை குழுக்கள் மூலம் 1,747 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு 1,608 மையங்கள் 2025-ம் ஆண்டில் மட்டும் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

பாலினம் விகிதம் 2021-22 -ம் ஆண்டில் 934 என இருந்தது. தற்போது 2025-26-ம் ஆண்டில் 941 என உயர்ந்துள்ளது. மாநில மேற்பார்வைக் குழுவினை வலுப்படுத்தி, அதன் செயல்பாடுகளை பயனுள்ளதாக அமல்படுத்துவதன் மூலம், மாநிலத்தின் பெண்சிசுக்கொலைகள் குறைந்து பெண்களின் பாலின விகிதம் மேம்படும். இவ்வாறு அவர்கள் தெரி வித்தனர்.

## அஜித்குமார் மரணம்: ஒன்றுமே இல்லாத வழக்கில் கொலை; மனம் பதறுகிறது - நீதிபதி வேதனை

மதுரை, பிப்.5:

சிவகங்கை மடப்புரம் கோவில் காவலாளி அஜித்குமார் கடந்த ஆண்டு ஜூன் 27-ல் போலீசாரால் அடித்து கொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் கைதான 5 காவலர்களும் தங்களுக்கு ஜாமீன் வழங்க கோரி மதுரை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்து இருந்தனர்.

இந்த வழக்கு இன்று நீதிபதி ஸ்ரீமதி முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, சிபிஐ பதில் மனு தாக்கல் செய்தது. அதில், அஜித்குமாரின் மரணம் காவல் மரணம் என்பது உறுதியாகி இருக்கிறது. நிகிதா அளித்த நகைதிருட்டு புகாரில் உண்மை இல்லை என்பதால் புகார் முடிக்கப்பட்டு அறிக்கை தயாராகிறது. டிஎஸ்பி, காவல் ஆய்வாளர், தலைமைக்காவலர், தனிப்படை காவலர்கள் என 10 பேருக்கு தொடர்பு உள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனை தொடர்ந்து நீதிபதி கூறுகையில்,

புகார் அளித்தவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதுதானே; அவர்தானே எல்லாவற்றிற்கும் காரணம். ஒரு நபரை இத்தனை பேர் சேர்ந்து தாக்குவதற்கு என்ன காரணம்? ஒன்றுமே இல்லாத வழக்கிற்கு ஒருவரை அடித்தே கொலை செய்துவிட்டனர்.

ஏதும் இல்லாத விஷயத்திற்கு ஒருவரை இப்படி அடித்திருக்கிறீர்கள். காவல்துறையின் செயலை பார்த்தால் மனமே பதறுகிறது. அஜித்குமார் மரண வழக்கில் முடியும் வரை யாராக இருந்தாலும் சிறையிலேயே இருக்கட்டும். காவல்துறையினருக்கு பாடம் புகட்ட வேண்டும் என கூறி விசாரணையை பிப்.17க்கு ஒத்தி வைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

## விஜய்க்கு நாட்டுநடப்பு தெரியவில்லை! இபிஎஸ்

தஞ்சாவூர், பிப்.5:



தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய்யின் விமர்சனங்களுக்கு அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி பதிலளித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களை சந்தித்த எடப்பாடி பழனிசாமி, அதிமுகவின் இரண்டாம் கட்ட தேர்தல் வாக்குறுதிகளை வெளியிட்டார்.

அப்போது தேசிய ஜனநாயக கூட்டணி தொடர்பாகவும், அதிமுக குறித்து விஜய்யின் விமர்சனங்கள் குறித்து செய்தியாளர்களின் கேள்விகளுக்கு எடப்பாடி பழனிசாமி பதிலளித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

“தேசிய ஜனநாயக கூட்டணி பலமான கூட்டணியாக உள்ளது. அதிமுக, பாஜக, பாமக, அமமுக உள்ளிட்ட கட்சிகள் இருக்கின்றன. விஜய் பொதுவெளியில் வந்து பார்த்தால்தான் தெரியும். ஒரு சம்பவத்துக்குப் பிறகு வெளியவே வரமால், நாட்டில் என்ன நடக்கிறது எனத் தெரியவில்லை, எந்தக் கட்சி யாருடன் கூட்டணி எனத் தெரியவில்லை. கூட்டணிக்கு யார் தலைமைத் தாங்குகிறார் என்றும் தெரியவில்லை.

உள்துறை அமைச்சர் அமித் ஷா கலந்துகொண்ட முதல் பேட்டியிலேயே அதிமுகதான் கூட்டணிக்கு தலைமை தாங்கும் எனத் தெரிவித்தார். இந்த கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும், முதல்வர் வேட்பாளர் இபிஎஸ் என்று தெளிவாக கூறப்பட்டது. இதை விஜய் தொலைக்காட்சியில் பார்க்கவில்லை, பார்ப்பதற்கு நேரம் இல்லை. மக்களையும் பார்ப்பதில்லை, தொலைக்காட்சியையும் பார்ப்பதில்லை. அவர் பேசுவதை கேள்வி கேட்க வேண்டாம். ஒருமுறையாவது பத்திரிகையாளர்களை சந்திக்கட்டும்.

எங்களை எப்படி ஊழல் கட்சி என்று கூறமுடியும்? ஜெயலலிதாவையும் எம்ஜிஆரையும் முன்னுதாரணமாக கூறியுள்ளார். எனது ஆட்சியில் சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டை நீதிமன்றம் வரை சென்று குற்றமற்றவர் என்று நிரூபித்துள்ளேன். எங்கள் கட்சியில் இருந்து சென்றவர் (செங்கோட்டையன்) ஊழல் குற்றச்சாட்டில் சிறை சென்று வந்தவர். அவரைதான் விஜய் கட்சியில் சேர்த்துள்ளார்”


எனத் தெரிவித்தார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389



## நலம் தரும் மருத்துவம்

## தலைவலி தானேன்னு விடாதீங்க..! இது பேராபத்தாகலாம்! எப்போது அலர்ட் ஆகணும்?



நாள்பட்ட தலைவலி (CHRONIC HEADACHE) நம் அன்றாட வாழ்க்கையை பெரிதும் பாதிக்கும். எளிய பணிகளைக் கூட பெரிய சவால்களாக உணர வைக்கும். நாள்பட்ட தலைவலி என்பது 15 நாட்கள் அல்லது அதற்கு மேல் தொடர்ச்சியாக ஏற்படும் தலைவலியை குறிக்கும். இவை நம் தூக்கத்தையும், வேலை செய்யும் திறனையும் குறைக்கும்.

நாள்பட்ட தலைவலிக்கான அறிகுறிகள் மற்றும் காரணங்கள்:

தலைவலிக்கான காரணங்கள் நபருக்கு நபர் மாறுபடும். பதற்றம் மற்றும் மன அழுத்தம். தலை மற்றும் கழுத்துப் பகுதியில் இறுக்கத்தை ஏற்படுத்தி வலியை உண்டாக்கும். மோசமான தோரணை, குறிப்பாக நீண்ட நேரம் உட்கார்ந்து இருக்கும்பொழுது அல்லது மீண்டும் மீண்டும் செய்யும் செயல்களில் ஈடுபடும்போது, தசைகளில் அழுத்தத்தை ஏற்படுத்தி தலைவலியை தூண்டும். ஒற்றைத் தலைவலி, சைனஸ் தொற்றுகள் காரணமாகவும் ஏற்படலாம். நீரிழப்பு காரணமாக அதாவது போதுமான அளவு தண்ணீர் குடிக்காததால் ஏற்படும் தலைவலி.

பெண்களுக்கு ஏற்படும் ஹார்மோன் மாற்றங்கள்.

காஃபின், ஆல்கஹால் போன்றவை சிலருக்கு தலைவலியை தூண்டும். சில மருந்துகள் பக்கவிளைவுகளாக தலைவலியை ஏற்படுத்தலாம். சுற்றுச்சூழல் காரணிகள் அதாவது உரத்த சத்தம், வலுவான வாசனை, பிரகாசமான விளக்குகள் போன்றவை. வானிலை மாற்றங்கள் கூட காரணமாகலாம்.

எப்போது மருத்துவரை அணுக வேண்டும்:

திடீரென மிகக் கடுமையான வலி ஏற்பட்டால் (THUNDERCLAP HEADACHE).

வலிவழக்கத்தை விட தீவிரமாக இருந்தாலோ, அடிக்கடி அல்லது நம் தினசரி வாழ்க்கையை பாதிக்கும் வகையில் இருந்தாலோ, சாதாரண வலி நிவாரண மருந்துகளால் குறையாத போதோ மருத்துவரை கலந்தாலோசிக்க வேண்டியது அவசியம். குமட்டல், வாந்தி, காய்ச்சல், பார்வை மாற்றங்கள் போன்ற அறிகுறிகளுடன் தலைவலி வந்தால் மருத்துவரை கலந்தாலோசித்து சரியான சிகிச்சையை பெற வேண்டியது அவசியம்.

நாள்பட்ட தலைவலிக்கான வீட்டு வைத்தியம்:

தலைவலியிலிருந்து உடனடி நிவாரணம் பெறுவதற்கு கைவைத்தியமாக சில முறைகளை பின்பற்றலாம். நெற்றியில் அல்லது கழுத்தில் குளிர்ந்த துணியைக் கொண்டு ஒத்தடம் போல் வைத்தெடுப்பது வலியை குறைக்கும். உச்சந்தலையில், கழுத்தில், நெற்றிப் பகுதியில் மெதுவாக மசாஜ் செய்வது சதை இறுக்கத்தை போக்கும். நிறைய தண்ணீர் குடிப்பது குறிப்பாக நீரிழப்பால் ஏற்படும் தலைவலிக்கு உதவும். யூகலிப்டஸ் (EUCALYPTUS) அல்லது மிளகுக் கீரை எண்ணெயை சிறிது முகர்ந்து பார்ப்பது தலைவலியை குறைக்கும்.

போதுமான தூக்கம் மற்றும் மன அழுத்தத்தை போக்குவதற்கு தியானம், யோகா அல்லது ஆழ்ந்த சுவாசப் பயிற்சி உதவும். கணினி அல்லது மொபைல் திரைகளை பார்ப்பது குறைப்பதும் பலன் தரும்.

இஞ்சி டீ குடிக்கலாம். லவங்கப்பட்டை பொடி சேர்த்த சூடான பால் அருந்தலாம். கிராம்பின் வாசனையை முகர்வதும், சரியான நேரத்துக்கு உணவை எடுத்துக் கொள்வதும் நல்ல பலன் தரும்.

## சென்னை விமான நிலையத்தில் ரூ.4.09 கோடி கடத்தல் தங்கம் பறிமுதல்!

**நாகப்பட்டினம், பிப்.5:**

துபையிலிருந்து பெண் பயணியொருவர் கடத்தி வந்த ரூ. 1.37 கோடி மதிப்பிலான பசை வடிவிலான தங்கத்தை சென்னை விமான நிலையத்தில் பறிமுதல் செய்த சுங்கத்துறை அதிகாரிகள், இது தொடர்பாக பெண் பயணிடம் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

துபையில் இருந்து சென்னை வரும் விமானத்தில் தங்கம் கடத்தி வரப்படுவதாக புலனாய்வுத் துறை அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதனடிப்படையில், செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் சென்னை பன்னாட்டு விமானநிலையத்துக்கு வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகளை ரகசியமாக கண்காணித்தனர். அப்போது, துபையிலிருந்து சென்னை பன்னாட்டு விமான நிலையத்துக்கு வந்த சந்தேகத்துக்கிடமான பெண் பயணி ஒருவரை மத்திய வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகள் சோதனையிட்டனர். அதில், அவர் மறைந்து வைத்திருந்த ரூ. 1.37 கோடி மதிப்பிலான பசை வடிவிலான தங்கத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதையடுத்து, அடுத்தடுத்து சென்னை பன்னாட்டு விமானநிலையத்துக்கு வந்த விமான பயணிகளில் சந்தேகத்தின்பேரில் 3 பேரை நிறுத்தி மத்திய வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகள் சோதனையிட்டனர். அதில், அவர்கள் மறைத்து வைத்திருந்த தங்க நகைகள், வெளிநாட்டு ஹவாலா பணத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இதன்படி, சென்னை பன்னாட்டு விமானநிலையத்தில் அடுத்தடுத்து விமான பயணிகளிடம் நடத்தப்பட்ட சோதனையில் ரூ.4.09 கோடி மதிப்பிலான தங்கத்தை பறிமுதல் செய்த அதிகாரிகள் ஒரு பெண் உள்பட நான்கு பேரை கைது செய்து தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். .

## இடைக்கால பட்ஜெட்டுக்காக பிப்.12-ல் கூடுகிறது புதுச்சேரி பேரவை!

**புதுச்சேரி, பிப்.5:**

புதுச்சேரி சட்டப்பேரவை வரும் 12-ம் தேதி கூடுகிறது என்று பேரவைத் தலைவர் செல்வம் அறிவித்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "15-வது புதுச்சேரி சட்டப்பேரவையின் 6-வது கூட்டத் தொடர் கடந்தாண்டு மார்ச் 10-ம் தேதி அன்று கூட்டப்பட்டு, 2025-26-ம் ஆண்டுக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது. துணைநிலை ஆளுநர் உரையுடன் தொடங்கிய இக்கூட்டத் தொடர் 13 நாட்கள் நடைபெற்று பின்னர் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது. அதன் 2-ம் பகுதி கடந்த செப்டம்பர் 18-ம் தேதி அன்று கூட்டப்பட்டு பேரவையின் அனைத்து அலுவல்களும் அன்றைய தினத்திலேயே நிறைவேற்றப்பட்டு மீண்டும் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து 6-வது கூட்டத்தொடரின் 3-வது பகுதி வரும் 12-ம் தேதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சட்டப்பேரவை வளகத்தில் உள்ள பேரவைக் கூட்டத்தில் மீண்டும் கூட்டப்படும்.

# திருப்பதி ஏழுமலையான் கோவிலில் 26-ம் தேதி தெப்போற்சவம் ஆரம்பம்

**திருமலை, பிப்.5:**



திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் தெப்போற்சவம் விமரிசையாக நடப்பது வழக்கம். அதன்படி இந்த ஆண்டுக்கான தெப்போற்சவம் பிப்ரவரி 26-ம் தேதி தொடங்கி மார்ச் 2-ம் தேதி வரை 5 நாட்கள் நடக்கிறது. கோவில் அருகே உள்ள சுவாமி புஷ்கரணியில் தினமும் இரவு 7 மணியில் இருந்து இரவு 8 மணி வரை தெப்போற்சவம் நடக்கிறது.


முதல் நாளான 26-ம் தேதி சுவாமி புஷ்கரணியில் (தெப்பக்குளம்) உள்ள அலங்கரிக்கப்பட்ட தெப்பத்தில் உற்சவர்களான சீதா, ராமர், லட்சுமணர், ஆஞ்சநேயர் எழுந்தருளி 3 சுற்றுகள் பவனி வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றனர். 27-ம் தேதி ஸ்ரீகிருஷ்ணர், ருக்மினி தேவியுடன் தெப்பத்தில் எழுந்தருளி 3 சுற்றுகள் பவனி வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்க உள்ளார். 28-ம் தேதி உற்சவர்களான மலையப்ப சுவாமி, தாயாருடன் எழுந்தருளி 3 சுற்றுகள் பவனி வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றனர்.

மார்ச் 1-ம் தேதி உற்சவர்களான மலையப்ப சுவாமி, ஸ்ரீதேவி, பூதேவி தாயார்களுடன் எழுந்தருளி 5 சுற்றுகள் பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றார். நிறைவு நாளில் (மார்ச் 2) உற்சவர்களான மலையப்ப சுவாமி 7 சுற்றுகள் தெப்பத்தில் பவனி வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றார்.

தெப்போற்சவத்தை முன்னிட்டு பிப்ரவரி 26 மற்றும் 27 ஆகிய தேதிகளில் சஹஸ்ர தீபாலங்கார சேவையை திருமலை திருப்பதி தேவஸ்தானம் ரத்து செய்துள்ளது. இதேபோல் பிப்ரவரி 28, மார்ச் 1 மற்றும் மார்ச் 2 ஆகிய தேதிகளில் ஆர்ஜித பிரம்மோத்ஸவம் மற்றும் சஹஸ்ர தீபாலங்கார சேவையை ரத்து செய்துள்ளது.

# ஸ்ரீவைகுண்டம் கள்ளபிரான் கோவில் தெப்ப உற்சவ விழா

**தூத்துக்குடி, பிப்.5:**



தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் தாமிரபரணி நதிக்கரையோரம் அமைந்துள்ள நவதிருப்பதி பெருமாள் கோவில்களில் முதலாவது கோவிலாக ஸ்ரீவைகுண்டம் கள்ளபிரான் சுவாமி கோவில் உள்ளது. இக்கோவிலில், ஆண்டுதோறும் தை மாதம்12 நாட்கள் திருவிழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி இந்த ஆண்டிற்கான தெப்ப உற்சவத்திற்கான கொடியேற்றம் ஜனவரி 24ஆம் தேதி நடைபெற்றது.

திருவிழா நாட்களில் தினமும் காலையில் சுவாமி கள்ளபிரான் கொடி மரம் சுற்றி புறப்பாடும் மாலையில் தோளிக்கினியானில் மாடவீதி வீதி புறப்பாடும் நடைபெற்றது. ஜனவரி 28ம் தேதி இரவு கருடசேவை நடைபெற்றது.

விழாவின் சிகர நிகழ்வான தெப்ப உற்சவம் நேற்று இரவு நடைபெற்றது. இதனை முன்னிட்டு காலை 7 மணிக்கு விஸ்வரூப தரிசனம், 8 மணிக்கு திருமஞ்சனம், 9 மணிக்கு கொடிமரம் சுற்றி புறப்பாடு நடைபெற்றது.

நத்தம் எம்இடர் கடிவான், திருப்புளிங்குடி காய்சினிவேந்தன் ஆகியோர் ஸ்ரீவைகுண்டம் வந்தனர். பின்னர் மூன்று பெருமாள்களுக்கும் பகல் 11 மணிக்கு சிறப்பு திருமஞ்சனம், 12 மணிக்கு தீபாராதனையைத் தொடர்ந்து நாலாயிர திவ்வியப் பிரபந்தம் சேவிக்கப்பட்டது. பின்னர் தீர்த்தம், சடாரி, பிரசாதம் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. மாலை 5 மணிக்கு சாயரட்சை, உற்சவர் கள்ளப்பிரான், உற்சவர் எம்இடர் கடிவான், உற்சவர் காய்சினிவேந்தன் ஆகியோர் தோளிக்கினியானில் 7.30 மணிக்கு தெப்பக்குளம் நோக்கி புறப்பட்டனர். இரவு 8 மணிக்கு ஸ்ரீவைகுண்டம் கள்ளபிரான் சுவாமி, நத்தம் எம்இடர்கடிவான் திருப்புளியங்குடி காய்சினி வேந்தப் பெருமாள் ஆகிய சுவாமிகள் தெப்பத்தில் எழுந்தருளி 3 சுற்றுகள் வலம் வந்தனர். தெப்பக்குளக்கரையில் திரண்டிருந்த ஏராளமான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

# கன்னியாகுமரி குகநாதீஸ்வரர் கோவிலில் பால்குடம்- காவடி ஊர்வலம்

**குமரி, பிப்.5:**



கன்னியாகுமரி ரயில் நிலைய சந்திப்பில் குகநாதீஸ்வரர் கோவில் உள்ளது. இந்தக் கோவில் 1000 ஆண்டு பழமையான கோவில் ஆகும். தஞ்சை பெரிய கோவிலை கட்டுவதற்கு முன்பே மாமன்னன் ராஜராஜ சோழன் இந்த கோவிலை கட்டி உள்ளார் என்று வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. குகன் என்ற முருகக்கடவுள் ஈஸ்வரன் என்ற சிவனை இங்கு வழிபட்டதால் இந்த கோவிலுக்கு குகநாதீஸ்வரர் கோவில் என்று பெயர் வர காரணமாயிற்று. இந்த கோவில் மூலஸ்தான கருவறையில் அமைந்து உள்ள சிவலிங்கம் ஐந்தரை அடி உயரம் கொண்டதாகும்.

இப்படிப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க இந்த கோவிலில் சுப்பிரமணிய சுவாமி வள்ளி -தெய்வானையுடன் வீற்றிருக்கும் தனி சன்னதி அமைந்துள்ளது. இங்கு தைப்பூச திருவிழா கொண்டாடப்பட்டது.

இதையொட்டி சாஸ்தா சன்னதியில் இருந்து ஏராளமான பக்தர்கள் பால்குடம் மற்றும் காவடி எடுத்து கோவிலை சுற்றி மேளதாளங்கள் முழங்க ஊர்வலமாக வந்தனர். பின்னர் சுப்பிரமணியசாமி, வள்ளி, தெய்வானைக்கு எண்ணெய், பால், மஞ்சள் பொடி, மா பொடி, பன்னீர், இளநீர், தேன், பஞ்சாமிர்தம், தயிர், களபம், சந்தனம், குங்குமம், விபூதி மற்றும் புனித நீரால் சிறப்பு அபிஷேகம் நடந்தது. அதைத்தொடர்ந்து அலங்கார தீபாராதனை நடந்தது. அதன்பிறகு சுப்பிரமணிய சுவாமி வள்ளி, தெய்வானையுடன் பல வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட மயில் வாகனத்தில் எழுந்தருளி கோவிலை சுற்றி மேளதாளம் முழங்க பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## ஈரோட்டில் சட்டவிரோதமாக தங்கியிருந்த வங்காளதேசத்தினர் 4 பேர் கைது

**ஈரோடு, பிப்.5:**

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் வங்காளதேசத்தினர் சட்டவிரோதமாக தங்கியுள்ளனர். இவர்களை கைது செய்யும் பணியில் போலீசார் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஈரோடு மாவட்டம் பெருந்துறையையில் சட்டவிரோதமாக தங்கி இருப்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. தகவலின் அடிப்படையில், பெருந்துறையை அடுத்த பணிக்கம்பாளையத்தில் போலீசார் நேற்று திடீர் சோதனை நடத்தினர். சோதனையில் பணிக்கம்பாளையத்தில் சட்டவிரோதமாக தங்கி இருந்த வங்காளதேசத்தினர் 4 பேரை போலீசார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட வங்காளதேசத்தினர் 4 பேரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் அனைவரும் பாஸ்போர்ட்டு, விசா இன்றி பெருந்துறையில் சட்டவிரோதமாக தங்கி இருந்தது தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட இஸ்லாம் (30), ஷபான்மல்லி (27), முகமத் ஷாதிம் (30), மஜான் மொண்டல் (30) ஆகிய 4 பேரும் பெருந்துறையில் உள்ள ஜவுளி ஆலையில் வேலை செய்து வந்தது தெரியவந்தது. இதையடுத்து வங்காளதேசத்தினர் 4 பேரும் கைது செய்யப்பட்டு சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

## பிப். 13 - சேலத்தில் விஜய் பிரசாரம்!

**சேலம், பிப்.5:**

சேலத்தின் தவெக தலைவர் விஜய்யின் பிரசாரத்துக்கு அனுமதி கோரி அக்கட்சியின் மாவட்டச் செயலாளர் காவல் ஆணையரிடம் மனு அளித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், அரசியல் கட்சிகள் பிரசாரத்தை தொடங்கியுள்ளன.

இந்த தேர்தலில் முதல்முறையாக தமிழக வெற்றிக் கழகம் போட்டியிடவுள்ள நிலையில், கடந்த சில மாதங்களாக தீவிரப் பிரசாரத்தில் அக்கட்சியின் தலைவர் விஜய் ஈடுபட்டு வந்தார்.

இந்த நிலையில், கடந்த செப். 27 அன்று கரூரில் விஜய் பங்கேற்ற பொதுக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் பலியாகினர். அதன்பிறகு விஜய் கலந்துகொள்ள திட்டமிடப்பட்டிருந்த பிரசாரக் கூட்டங்கள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டன. இந்த சம்பவத்துக்குப் பிறகு முதல்முறையாக பெருந்துறை அருகே விஜயமங்கலம் பகுதியில் திறந்தவெளி திடலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக் கூட்டத்தில் பங்கேற்று விஜய் பேசினார். தற்போது சேலத்தில் வருகின்ற பிப். 13 ஆம் தேதி விஜய்யின் பிரசாரத்துக்கு அனுமதி கோரி மாநகரக் காவல் ஆணையரை சந்தித்து சேலம் மத்திய மாவட்ட தவெக செயலாளர் தமிழன் பார்த்திபன் மனு அளித்துள்ளார்.

இந்த கூட்டத்துக்கு அனுமதி வழங்கப்படுவது குறித்தும், நிபந்தனைகள் குறித்தும் விரைவில் காவல் ஆணையர் தெரிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# லேப்டாப்பில் நம் கண்ணுக்குத் தெரிந்தே ஒரு ரகசியம் ஒளிந்திருக்கிறது: 99% பேருக்கு இது தெரியாது!

இன்றைய டிஜிட்டல் உலகில் லேப்டாப் (laptop) என்பது நம் உடலின் ஒரு அங்கமாகவே மாறிவிட்டது. அலுவலக வேலை முதல் பொழுதுபோக்கு வரை அனைத்திற்கும் இதையே சார்ந்திருக்கிறோம். ஆனால், இதே லேப்டாப்பில் நம் கண்ணுக்குத் தெரிந்தே ஒரு ரகசியம் ஒளிந்திருக்கிறது.

பெரும்பாலானோர் லேப்டாப்பை ஆன் செய்ய, ஆஃப் செய்ய மற்றும் டைப் செய்ய மட்டுமே பயன்படுத்துகிறோம். ஆனால், விசைப்பல கையில் இருக்கும் ஒரு குறிப்பிட்ட பட்டன், உங்களின் வேலையை பாதியாகக் குறைக்கும் வல்லமை கொண்டது. அது எந்த பட்டன்? வாருங்கள் தெரிந்துகொள்ளலாம்.

அதுதான், கீபோர்டின் இடதுபுறம் கீழே இருக்கும் 'Fn (Function)' பட்டன். "இது எல்லாருக்கும் தெரியுமே!" என்று நினைக்கலாம். ஆனால், இந்த Fn பட்டனை மற்ற கீகளுடன் சேர்த்துப் பயன்படுத்தும்போது கிடைக்கும் குறுக்குவழிகள் பலருக்குத் தெரிவதில்லை.

பலரும் அறியாத Fn பட்டனின் ஷார்ட்கட்ஸ்;

1. ப்ரொஜெக்டர் செட்டிங்ஸை மாற்ற:

'Fn + F7' பட்டன்களை அழுத்தினால் உங்கள் லேப்டாப் (laptop) திரை ப்ரொஜெக்டர் செட்டிங்ஸைத் திறக்கும். ஆனால், இது சில மாடல்களில் மட்டுமே மாறும். எல்லா லேப்டாப்பிலும் F7 ஆக இருக்காது. இதன் நோக்கம் திரையை லேப்டாப்பிலிருந்து ப்ரொஜெக்டருக்கோ அல்லது மற்றொரு மானிட்டருக்கோ மாற்றுவதுதான்.



2. மவுஸ் இல்லாமல் ஸ்க்ரோலிங்:

உங்கள் மவுஸ் வேலை செய்யவில்லையா? கவலை வேண்டாம். 'Fn + Up/Down Arrow' பட்டன்களைப் பயன்படுத்தி பக்கங்களை வேகமாக ஸ்க்ரோல் செய்ய முடியும். இது சாதாரண ஆரோ கீகளை விட வேகமாகச் செயல்படும்.

3. எண்கள்:

சிறிய லேப்டாப்களில் தனியாக 'Numeric Pad' இருக்காது. ஆனால் 'Fn + Num Lk' அழுத்தினால், உங்கள் கீபோர்டில் உள்ள சில எழுத்துக்கள் எண்களாக மாறிவிடும். இது கணக்கு வழக்குகளை வேகமாக முடிக்க உதவும்.

4. உங்கள் லேப்டாப்பில் Fn Lock வசதி இருந்தால், அதை ஆன் செய்து வைப்பதன் மூலம் ஒவ்வொரு முறையும் Fn பட்டனை அழுத்தாமலேயே மல்டிமீடியா கீகளைப் பயன்படுத்தலாம். இதற்கு 'Fn + Caps Lock' அல்லது 'Fn + Esc' முயற்சி செய்து பாருங்கள். வால்யூம் அல்லது பிரைட்னஸ் குறைக்க ஒவ்வொரு முறையும் Fn அழுத்தத் தேவையில்லை.



மற்றுமொரு ரகசிய பட்டன்: 'Windows' கீ

Fn பட்டனைப் போலவே Windows + V பட்டனை அழுத்திப்பாருங்கள். நீங்கள் இதற்கு முன்பு Copy செய்த பல விஷயங்களின் லிஸ்ட் அங்கே இருக்கும். இது பலருக்குத் தெரியாத ஒரு விஷயம். சட்டென திரையை மறைக்க Windows + D அழுத்தினால் டெஸ்க்டாப் வந்துவிடும்.

பொதுவாக லேப்டாப் (laptop) வாங்கும்போது அதன் ரேம் (RAM), ப்ராசஸர் மற்றும் கேமரா தரத்தை மட்டுமே பார்க்கிறோம். அதன் 'User Manual' படிக்கும் பழக்கம் நம்மிடம் இல்லை. இதனால், உற்பத்தியாளர்கள் நம் வசதிக்காகக் கொடுத்திருக்கும் பல நுணுக்கமான விஷயங்களை நாம் பயன்படுத்துவதில்லை. இந்தச் சிறிய Fn பட்டன் உங்கள் நேரத்தை மிச்சப்படுத்துவதுடன், உங்களை ஒரு 'டெக் எக்ஸ்பர்ட்' ஆகவும் மாற்றும்.

# இரு கோணங்கள்.!



மயிலாடுதுறை தற்காலிக பேருந்து நிலையம்.மக்களின் மனநலன்..பொதுநலன் நெருக்கடிகளை மறந்து.. தேர்தல் கால நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் விதமாக மாவட்ட நூலகக் கட்டடம் கட்டப்பட்டு வருவதால் ஏகப்பட்ட நெரிசலை சந்தித்து பிதுங்கி வழிகிறது. பயணிகள் மட்டுமல்ல.. டாஸ்மாக் விரும்பிகளும் அதற்குள்ளாகவே ஊடுபாவி ஊர்வலம் நடத்தியாக வேண்டும்.. ஆட்டோ.. வேன்..வெளியூர் பயணிப்பவர்களின் இருசக்கர வாகனங்கள் என பல இடையூறுகளுக் கிடையே..வரும் ஆனா வராது கணக்காக நகரப்பேருந்துக்கான காத்திருப்பு. ஒரு பேருந்து வந்து நின்று பயணிகளை ஏற்றி இறக்குவதற்குள்.. அடுத்த பேருந்து பின்நின்று ஒலி எழுப்பி வழி கேட்கும் தர்ம சங்கடம்...வறுகடலை.. சுண்டல்...சுக்குக்காப்பி... சோன்பப்டி வியாபாரிகள் அலைகழிப்பின் விரக்தியை.. வியாபார முகத்தை மறைத்துக்கொண்டு.. பயணிகளிடமே சிடுசிடுப்பாய் இறக்கி வைக்கும் இன்னல். இறைச்சலும்..கூச்சலும்.. மண் புழுதியும் சாக்கடை நெடியுமாக அலையும் காற்று.. தேசிய உயிரினமான கொசுவின் ரீங்காரத்துடன் கூடிய நலவிசாரிப்பு இவற்றிலிருந்து விலக்கி...இரண்டு ஆட்டோ ஓட்டுனர்களின் அங்கலாய்ப்பு சற்றே ஆசுவாசப்படுத்தியது."இங்க பாருடா பரமா..தினம் நூறு ருபா நகைச்சீட்டு கட்டி...மூனரை மாசத்துல ரெண்டு கிராம் காயின் வாங்கி வீட்டுக்காரிகிட்ட கொடுத்துடுவேன்.. ஏதோ நம்ம சத்துக்கு அது ஒரு பொருளாதார தன்னிறைவுன்னு வச்சுக்கயேன்..இப்ப அதுக்கும் வச்சுட்டானுங்க ஆப்பு..இப்ப ஒருலட்சத்தி முப்பதை தாண்டுது சவரன்..ரெண்டு லட்சத்துக்கு மேல போகுமாம்..நம்ம இனி வெள்ளிநகைக்கு தான் சீட்டு போடனும் போல..."என அலுத்துக்கொண்ட அதே நேரம்...எழுந்து போய் வெற்றிலை எச்சிலை சாக்கடை வாய்க்காலில் உமிழ்ந்துவிட்டு வந்த குப்பை பொறுக்கும் பார்வதியம்மாள்.."ஏ.. அண்ணாத்த..சுத்தமான பவுனுல செப்பு கலக்காம உருவம் செய்ய முடியாதாமே நெஜமாலுமா..பவுனு வெல ரெக்ககட்டி பறக்குறதுல யாருக்கு பாதிப்போ என்னவோ...எனக்கு ஒரே குஜாலிப்பு தான்..ரொம்ப லாபந்தான் ..பாத்துக்க.. பொறுக்கி தேத்துன பழைய ஒயருங்கள சேத்து வச்சு கொளுத்தி சுத்தம்பண்ணி எடைக்கு போடுவனா.. அப்ப செப்புக்கம்பி..கிலோ முந்நூத்தி இருவதுக்கு எடுப்பாங்க..இப்ப வல்லிசா நாநூறு ரூபா தர்றாங்க.. இன்னும் பவுனு ஏறட்டும்.. கிலோ ஐநூறு பார்க்காம விடமாட்டாால்ல..இந்த பார்வதி"என்றபடி நடக்க வாயடைத்து நின்றனர் ஆட்டோ ஓட்டுநர்கள்.ஏன் பயணிகளான நாங்களும் தான்.!..

**-அரும்பூர்.க.குமாரகுரு,**
மயிலாடுதுறை

# அப்பா! எனக்கொரு சந்தேகம்!




ஏன் அப்பா, வருடத்தில் மற்ற மாதங்கள் 30 அல்லது 31 நாட்கள் கொண்டிருக்க. பிப்ரவரி மாதம் மட்டும் ஏன் 28 அல்லது 29 நாட்களாக உள்ளது?

நல்ல கேள்வி. முதலில் நீ நாள்காட்டி பிறந்த கதையைத் தெரிந்து கொள்ள வேண்டும். ரோமானியர்கள், விவசாயத்திற்கான பருவ நிலை மாற்றம் பற்றி அறிய நாட்காட்டியை உருவாக்கினார்கள். முதலில் உருவாக்கிய நாட்காட்டியில் 304 நாட்கள் மட்டும் தான் இருந்தது. இது பத்து மாதங்களாக, ஆறு மாதங்கள் முப்பது நாட்களாகவும், மீதி நான்கு மாதங்கள் முப்பத்து ஒன்று நாட்களாகவும் வடிவமைக்கப்பட்டது. ஒன்றிலிருந்து பத்து வரையான ரோமானிய எண்களின் பெயர்கள் மாதங்களுக்கு சூட்டப்பட்டன. முதல் மாதம்-மார்ஷியஸ், இரண்டு-ஏப்ரலியஸ், மூன்று-மையஸ், நான்கு-ஜூனியஸ், ஐந்து-க்வின்டிலிஸ், ஆறு-செக்ஸிடிலிஸ், ஏழு-செப்டம்பர், எட்டு-அக்டோபர், ஒன்பது-நவம்பர், பத்தாவது மாதம்-டிசம்பர்.

பூமி சுழற்சிக்கு 365.25 நாட்கள் ஆகிறது. ஆனால் நாட்காட்டியில் 304 நாட்கள் மட்டுமே. ஆகவே நுமா பாம்ப்லியஸ் என்ற அரசர் ஜனவரி, பிப்ரவரி என்ற இரு மாதங்களை முறையே பதினொன்றாவது, பன்னிரெண்டாவது மாதங்களாகச் சேர்த்து 355 நாட்கள் கொண்ட நாட்காட்டியாக மாற்றினார். இப்போதும் பூமி சுற்றுகைக்கும், நாட்காட்டிக்கும் பத்து நாட்கள் வித்தியாசம் இருந்தன.

கிறிஸ்து பிறப்பதற்கு 46 ஆண்டுகளுக்கு முன்னால் ஜூலியஸ் சீசர் என்ற ரோம அரசர் இந்த 10 நாட்களைச் சேர்த்து புதிய நாட்காட்டியை வடிவமைத்தார். அதன்படி ஜனவரி 31 நாட்கள், பிப்ரவரி 30 நாட்களாகியது. ரோமப் பேரரசரர் ஜூலியஸ் சீசர் ஐந்தாவது மாதத்தில் பிறந்தவர். ஆகவே ஐந்தாவது மாதமான க்வின்டிலிஸ் என்ற பெயரை ஜூலை என்று மாற்றினார். தான் பிறந்த மாதத்தில் மற்ற மாதங்களை விட குறைவான நாட்கள் இருக்கக் கூடாது என்று, பிப்ரவரி மாதத்திலிருந்து ஒரு நாள் எடுத்து ஜூலையில் சேர்த்தார். ஆகவே, ஜூலை 31 நாட்கள் ஆக, பிப்ரவரி 29 நாட்களாகக் குறைந்தது. ஜூலியஸ் சீசருக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த அகஸ்டஸ் சீசர் செக்ஸிலிடிஸ் மாதத்தில் பிறந்தவர். அதனால் ஆறாவது மாதத்தின் பெயரை ஆகஸ்ட் என்று நாமகரணம் செய்தார். நான் என்ன ஜூலியஸூக்கு சளைத்தவனா என்று பிப்ரவரியிலிருந்து ஒரு நாளைப் பிடுங்கி ஆகஸ்ட் மாதத்தில் சேர்த்தார். இதனால் ஆகஸ்ட் 31 நாள் ஆக மாற பிப்ரவரி, 28 நாளாக குறைந்தது. சில வருடங்களுக்குப் பிறகு ஜனவரி முதல் மாதமாகவும், பிப்ரவரி இரண்டாவது மாதமாகவும் மாறியது. டிசம்பர் வருடத்தின்ட கடைசி மாதமாகியது.

நாம் இப்போது பயன்படுத்தும் நாட்காட்டிக்கு கிரிகோரியன் என்று பெயர். 1582 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

**-கே.என்.சுவாமிநாதன்,**
சென்னை

# Boomer to Gen Z

பாகம் 17



**வி.பிரபாவதி**
**மடிப்பாக்கம்.**

வாதியார் எல்லாம் வந்தாச்சு வாசு. நீ ரெடியாகனும். யாத்ரா தானம், நாந்தி விரதம்னு ஒவ்வொன்னா ஆகணும்.

"இதோ குளிச்சுடறேன். அம்மா என்னோட துணிமணி எங்க வச்சிருக்கான்னு தெரில"

"நா கொண்டு வந்துருக்கேன். கெணத்தடிக்கு போ. பொம்மனாட்டிகள் போய்ட்டா கஷ்டம்" ஹரி சொன்னதும் சிரித்துக் கொண்டே வாசு கிணற்றடிக்குப் போனான்.

"சொல்லுவே டா சொல்லுவ, நாங்களும் குளிச்சுக் கௌம்பனுமே. ஒத்த வேட்டியக் கட்டிண்டுடுவேள். ஒம்போது கஜம்னா கட்டிக்கணும்?!" அங்கலாய்த்தாள் ஒரு மாமி. சுத்தி ரெண்டு மூனு பொண்டுகள் சிரிப்பலைகளை எழுப்பியதோடு கொஞ்ச நஞ்சம் கண்ணசந்தவாளையும் எழுப்பிட்டா.

இதோ யாத்ரா தானம் ஆரம்பித்து விட்டது. வாசுவிற்கு கல்யாணக்களை கூடிவிட்டது.

தெரு முழுக்க ரெண்டாங்காப்பியும் குடிச்சுட்டு டிபனுக்காக காத்துண்டுருக்கா.

மல்மல் வேட்டியும், மயில்கண் வேஷ்டியும், ஜிப்பாவும், அங்கவஸ்திரமுமாய் ஆண்கள் பளபளவென அமர்ந்திருக்க, இரண்டு மூன்று மாமாக்கள் கையில் ஒரு பையில் சீட்டுக்கட்டுகளை வைத்துக் கொண்டு அணியில் ஆள்சேர்க்க ஆரம்பிச்சாச்சு.

பொம்மனாட்டிகள் கேக்கவே வேண்டாம். பத்மினி ஸ்டைல், சரோஜா தேவி ஸ்டைல்னு தழைய பிண்ணி பூ வச்சுண்டு பட்டுப் புடவையும் பஃப் கையுமாய் வளையவர சில மாமாக்களும் லுக் விட கல்யாண வைபவம் களை கட்டியது.

குழந்தைகள் பூவரச மர இலையில் பீப்பி செஞ்சு ஊதிண்டு பந்தலுக்காக நடப்பட்ட கழிகளை சுற்றிக்கொண்டு விளையாடிக் கொண்டிருந்தனர்.

வச்சுப் போடணும்னு வாங்கின தொள தொள உடைகளுடன் இளசுகள் இலைமறை காய்மறையாய் சுற்றின.

விரதம் முடிந்து கையில் காப்பு கட்டியாயிற்று. பொண்ணாத்து வாதியார், புள்ளையாத்து வாதியார்னு தனித்தனியா மனைல ஒக்காத்தி சம்பிரதாயப்படி ஒவ்வொன்றாய் நடந்தது.



பஞ்சு ஐயரும் பர்வதமும் பப்பளபளவென பத்து வயது கொறஞ்சாப்பில தெரிஞ்சா.

பஞ்சு ஐயரின் சகோதர சகோதரிகள் குடும்ப சகிதம் வந்திருந்தார்கள்.

அற்புதமாய் ஊரே கூடிய திருவிழாவாய் நடந்து கொண்டிருந்தது.

மூதாதையர்களை, பித்ருக்களை வணங்கித் துவங்கும் விதமாக 'நாந்தி' நடந்தது.

பங்காளிகள் ஒன்று கூடி சுற்றி வந்தது ஊர் கூடி தேர் இழுப்பது போல் அருமையாக இருந்தது. ஒற்றுமை ஒளி வீசியது.

டிபன் ஆயாச்சு. காலையின் நிகழ்ச்சிகள் முடிந்தன. இனிமே சாய்ங்காலம் அஞ்சு மணிக்கு நிச்சிதார்த்தம்.

அதுவரைக்கும் பொழுது போகணுமே என்ற கவலை வெளியூரிலிருந்து வந்தவர்களுக்கு.

பந்தலிலேயே தார்ப்பாய், ஜமுக்காலங்கள் விரிக்கப்பட்டு வாடகைத் தலாணிகளில் படுத்து பாதிபேர் குறட்டை விட ஆரம்பிச்சாச்சு.

பெண்கள் துணி துவைப்பது, காயவைப்பது, பைகளை பத்திரமாகப் பார்த்துக்கொள்வது என்று நேரம் போய்க் கொண்டிருந்தது.

இதோ ஒரு மணி ஆயிற்று. மதிய சாப்பாடு பரிமாறப்பட்டு ரெண்டாம் பந்தி, மூணாம் பந்தி என்று போய்க் கொண்டிருந்தது.

வாசுவிற்கு மகிழ்ச்சி அளவிட முடியாமல் இருந்தது. சுந்தரியும் அனுவும், மேலும் சில இளவட்டங்களும் வாசுவையும் மாலுவையும் கலாய்த்துத் தள்ளினர்.

கோமளம் துளிக்கூட ஓய்வில்லாமல் வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். நாலு மணிக்கு சுப்புடு வாத்யார் ஏற்கெனவே சொன்ன மாதிரி ஜவுளி வகையறாக்களை முக்கியப்பட்டவாளுக்கு ஓதியிட்டுக் கொடுத்தார். மலர் மாலையை மாணிக்க மாலை என்பதுபோல் 'பதினாறுங்கட்டி வராகன்' என்று சொல்லிக் கொடுத்தார்.

ஜவுளி வாங்காதவாளுக்கு கோமளம் எவர்சில்வர் சம்படங்கள் வாங்கியிருந்தாள். முகூர்த்தம் முடிஞ்சு கொடுப்பதற்காக முகூர்த்தப் பையில் ஒருசிலர் வட்டமாக உட்கார்ந்து சாத்துக்குடி, வெத்தல சீவல், ரவிக்கை குட்டை, சம்படம்னு போட்டு ஒரச்சாக்குல மூட்டை கட்டி வைக்க, அடுக்களையில் பக்ஷணங்கள் அஞ்சு சுத்து முறுக்கு, அதிரசம், முள்ளுத்தேங்கொழல், லட்டு, மைசூர் பாகு என கவரில் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஒவ்வொரு வேலையாக நடந்த வண்ணம் இருந்தன. நாலரைக்கு எல்லாருக்கும் அசோகாவும் குணுக்கும் காபியும் தந்தார்கள்.

இதோ எல்லாரும் பரபரப்புடன் நிச்சயதார்த்தத்திற்கு தயாராக ஆரம்பித்தாயிற்று.

தொடரும்...

# குளிக்கும் போது நாம் பின்பற்ற வேண்டிய ஒரு சில விதிமுறைகள்

* குளிக்கும் போது ஒரு சில விதிமுறைகளை நாம் பின்பற்ற வேண்டும் என்பது ஐதீகம்.

* குளிக்கும் போது வடக்கு அல்லது கிழக்கு திசை நோக்கி நின்று குளிக்க வேண்டும்.

* கர்மம் செய்த பின்னும், மயானத்திற்கு சென்று வந்தால் மட்டும் தெற்கு நோக்கி நின்று குளிக்கலாம்.

* மேற்கு திசை நோக்கி நின்று குளித்தால் உடல் நோவு வரும்.

* தினமும் கங்கா ஸ்நானம் செய்ய முடியும்.

* குளிக்கும் முன் ஒரு குவளை தண்ணீரில் மோதிர விரலால் ஓம் என்று தியானம் செய்து எழுதுங்கள்.

* அந்த நீர் அப்போது முதல் கங்கை நீராக மாறிவிடும். ஒரு நிமிட தியானத்தில் "இந்த உடலுக்குள் நீங்களே வந்திருந்து, இதை உங்களுக்கு செய்யும் அபிஷேகமாக ஏற்று கொள்ளுங்கள்" என்று இறையிடம் வேண்டி கொண்டு குளித்தால், உள்பூசையின் அங்கமாக இறைவனுக்கு அபிஷேகமும் ஆகிவிடும்.

* அக்னி எப்போதும் மேல்நோக்கியே பயணிக்கும்.

* உடலுக்குள் இருக்கும் அக்னி கீழிருந்து மேல் ஏறுவதுதான் சரி.

* தண்ணீரை கால் முதல் மேல் நோக்கி நனைத்து வந்து கடைசியில் தலையில் ஊற்றி கொள்ள வேண்டும்.

* நமது மண்டை ஓடுக்கு எப்படிப்பட்ட அக்னியின் வேகத்தையும் தாங்குகிற சக்தி உண்டு.

* காலில் இருந்து பரவும் குளிர்ச்சி மேல் நோக்கி பயணிக்கும் போது உள் அக்னியானது தலையை நோக்கி பயணிக்கும். அதுவே சரியான முறை.

* தலை முதல் கால் வரை உள்ள பின் பாகத்தை "பிரஷ்டம்" என்பர்.

* அதில் நம் முதுகு பாகம் தான் மிகப்பெரியது. அங்கு தான் அக்னியின் வீச்சம் கூடுதல் வேகமாக பரவும்.

* ஆதலால், குளித்து முடித்தவுடன், முதலில் முதுகு பாகத்தைதான் துவட்ட வேண்டும்.

* குளிக்கும் நீரிலே டவலை நனைத்து பிழிந்து துவட்டுவது தான் உத்தமம்.

* அனேகமாக, அனைவரும் ஈரம் படாத துண்டைத்தான் உபயோகிப்பீர்கள்.





* உலர்ந்த துணியானது உள் சூட்டை வேகமாக பரவ செய்து பல வித உள் நோவுகளை உருவாக்கும்.

* பிறருடன் வாய் திறந்து பேச கூடாத மூன்று நேரங்களில் ஒன்று குளிக்கும் நேரம்.

* மௌனத்தை கடைபிடிக்கலாம், அல்லது மனதளவில் தெரிந்த ஜெபத்தை செய்யலாம்.

* குளிப்பதினால், பஞ்ச இந்த்ரியகளால் செய்த தவறுகளினால் நமக்குள் சேர்த்து வைத்துள்ள கர்மாக்கள் களைய பெறுகிறது.

* குளிக்கும் போது, வாயில் கொள்ளளவு நீரை வைத்து குளித்தபின் துப்புவதால், கண்டத்துக்குமேல் (கழுத்துக்கு) வருகிற நீர் சம்பந்தமான கட்டுகளை, நோய்களை தவிர்க்கலாம்.

* வாயில் இருக்கும் நீர் மேல் நோக்கி எழும்பும் அக்னியின் வேகத்தை எடுத்துவிடும்.

* நீர் நிலைகள், குளம், ஆறு, கடல் இவைகளில் எல்லா தேவதைகளும், பெரியவர்களும் அரூபமாக ஸ்நானம் செய்வதாக கூறுகிறார்கள்.

* நாரம் என்கிற தண்ணீரில் நாராயணன் வாசம் செய்வதாகவும் சொல்வார்கள்.

* ஆதலால், ஓடி சென்று அதில் குதிக்காமல், கரையில் நின்று, சிறிது நீரை எடுத்து தலையில் தெளித்தபின், நீர் கலங்காமல், ஒரு இலை நீரில் விழுகிற வேகத்தில் மெதுவாக இறங்கி சென்று குளிக்க வேண்டும்.

* நீரில் காரி உமிழ்வதோ, துப்புவதோ கூடாது.

* நீரின்றி ஒரு உயிரும் இல்லை.நீரை விரயம் செய்ய கடன் அதிகரிக்கும்.

* உப்பு நீர் ஸ்நானம் திருஷ்டி தோஷங்களை அறுக்கும்.

* மேற்குறிப்பிட்ட அனைத்தும் குளிக்கும் போது நாம் பயன்படுத்த கூடிய நல்ல முறைகள் என்பது குறிப்பிடத் தக்கது.



**ப.கோபிபச்சமுத்து**
புதுப்பேட்டை,
கிருஷ்ணகிரி - 1

## தினம் ஒரு தலைவர்கள்

# சந்திர ராஜேஸ்வர ராவ் வரலாறு

சந்திர ராஜேஸ்வர ராவ் (ஜூன் 6, 1914 - ஏப்ரல் 9, 1994) ஒரு இந்திய கம்யூனிஸ்ட் அரசியல்வாதி ஆவார். அவர் தெலுங்கானா கிளர்ச்சியின் (19461951) தலைவர்களில் ஒருவராக இருந்தார் . 1992 ஆம் ஆண்டு உடல்நலக் காரணங்களுக்காகப் பதவி விலகுவதற்கு முன்பு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (சிபிஐ) பொதுச் செயலாளராகவும் 28 ஆண்டுகள் பணியாற்றினார்.

வாழ்க்கை

ராவ் ஒரு வசதியான விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் ஜூன் 6, 1914 அன்று இந்தியாவின் ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ள மங்களபுரம் கிராமத்தில் பிறந்தார். வாரணாசியில் உள்ள பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்திலும் விசாகப்பட்டினத்தில் உள்ள ஒரு மருத்துவக் கல்லூரியிலும் மருத்துவக் கல்வியைப் பெற்றார் . 1931 இல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் (சிபிஐ) சேர்ந்தார். ராவ் 1954 மற்றும் 1955 இல் அகில இந்திய கிசான் சபாவின் (விவசாயிகள் சங்கம்) துணைத் தலைவராக இருந்தார். டிசம்பர் 1964 இல் அவர் சிபிஐ தேசிய கவுன்சிலின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு 1974 இல் ஆர்டர் ஆஃப் லெனின் வழங்கப்பட்டது .

அவரது மகன் சந்திர சந்திரசேகர் மற்றும் பேரன் சந்திர ஜெய்தீப் ஆகியோர் ஆந்திரப் பிரதேசத்தில் அரசியலில் ஈடுபட்டுள்ளனர்.

தெலுங்கானா கிளர்ச்சியில் பங்கேற்பு
1946 ஆம் ஆண்டு ஹைதராபாத்தில் நிலைமை மேலும் மேலும் பதட்டமாக மாறியது. இதற்கு பதிலளிக்கும் விதமாக, ஆந்திர மகாசபாவும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் (சிபிஐ) ஆயுதமேந்திய எதிர்ப்பைத் தேர்ந்தெடுத்தன, அதுதான் மக்களுக்குத் திறந்திருக்கும் ஒரே நடவடிக்கை என்று நம்பின. பி.சி. ஜோஷியின் தலைமையில் , சிபிஐ நிஜாமின் ஆட்சியை அகற்றும் குறிக்கோளுடன் ஆயுதமேந்திய போராட்டத்தைத் தொடங்கியது. இந்த மோதல் 1946 முதல் 1948 வரை நீடித்தது.

இந்தக் காலகட்டத்தில் இந்தியா சுதந்திரம் பெற்றது, ஹைதராபாத்தில் ஒரு கம்யூனிஸ்ட் இந்தியக் கொடியை ஏற்றினார். இருப்பினும், நிஜாம் இந்தியாவுடன் இணைய மறுத்துவிட்டார், இதனால் மாநில ஒருங்கிணைப்புக்கான பேச்சுவார்த்தைகள் தேவைப்பட்டன. இதற்கிடையில், பிப்ரவரி 1948 இல் கல்கத்தாவில் நடந்த சிபிஐயின் இரண்டாவது மாநாட்டில் இடதுசாரி பிரிவினைவாத மற்றும் சாகசவாதத் தலைமையின் எழுச்சி காணப்பட்டது, இது பி.சி. ஜோஷியை நீக்கி, பி.டி. ரணதிவே பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டதற்கு வழிவகுத்தது. தெலுங்கானா ஆயுதப் போராட்டத்தில் முக்கிய நபரான ரணதிவேவின் கொள்கைகள் கட்சிக்குள் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை, ஆனால் ஆந்திராவைச் சேர்ந்தவர்கள் உட்பட பலர் ஆயுதப் போராட்டத்தை ஆதரித்தனர். பொதுவான கருத்து இருந்தபோதிலும், அவர் 1948 இல் மத்திய குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார், பொலிட்பீரோவிற்கு அல்ல.



கட்சிக்குள், பெரும்பாலும் 'ரஷ்ய வழி' மற்றும் 'சீன வழி' என்று அழைக்கப்படும் மாறுபட்ட கருத்துக்கள் இருந்தபோதிலும், இரு பிரிவுகளும் ஆயுதப் போராட்டம் குறித்து ஒன்றிணைந்தன. செப்டம்பர் 13, 1948 வாக்கில், இந்தியப் படைகள் நிஜாமை வீழ்த்தி ஹைதராபாத்தை இந்தியாவுடன் இணைத்தன, விவசாயிகளுக்கு சலுகைகளையும் வழங்கின. ஆயுதப் போராட்டத்தின் முதன்மை நோக்கங்கள் இவைதான், அவை தர்க்கரீதியாக முடிவுக்கு வந்திருக்க வேண்டும். இருப்பினும், மத்தியத் தலைமை போராட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டது.

இந்தக் கொள்கையின் பேரழிவு விளைவுகள் 1950 ஆம் ஆண்டு வாக்கில் தெளிவாகத் தெரிந்தன, இதன் விளைவாக ஜூன் 1950 இல் கல்கத்தாவில் நடந்த மத்தியக் குழுக் கூட்டத்தில் ரணதிவேக்குப் பதிலாக சி.ராஜேஸ்வர ராவ் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார். புதிய 'ஆந்திரக் கோட்டின்' சிற்பியான ராவ், நெருக்கடியைத் தீர்க்கத் தவறிவிட்டார், இது இந்த அணுகுமுறையும் குறைபாடுடையது என்பதை உணர வழிவகுத்தது. இதன் விளைவாக, சி. ராஜேஸ்வர ராவ், எஸ்.ஏ. டாங்கே, கே. கோவிந்த ராவ், சி.ஆர். வல்லபன் ஐயர் (மணி ஐயர்), பசவ்புன்னையா மற்றும் அஜோய் கோஷ் உள்ளிட்ட நான்கு பேர் கொண்ட சிபிஐ குழு, மூலோபாயம் மற்றும் தந்திரோபாயங்கள் குறித்து ஸ்டாலினுடன் கலந்தாலோசிக்க சோவியத் யூனியனுக்குச் சென்றது. இது ஏப்ரல் 1951 இல் வரைவு கட்சித் திட்டங்கள் மற்றும் கொள்கை அறிக்கைகளை வெளியிடுவதற்கும், 1951 இல் கல்கத்தாவில் நடந்த ஒரு சிறப்பு மறைமுகக் கட்சி மாநாட்டில் அஜோய் கோஷ் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் வழிவகுத்தது.

# தனுஷ் படத்தில் இணைந்த மலையாள மெகாஸ்டார் மம்மூட்டி



தனுஷ், இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி இணையும் படத்திற்கு 'D55' என தற்காலிகமாக பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் படத்தை தனுஷின் வுண்டர்பார் ஸ்டுடியோ நிறுவனம் தயாரிக்கிறது. இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி 'D55' படத்தை பெரிய அளவில் ஆக்ஷன் அதிரடி படமாக எடுக்க திட்டமிட்டுள்ளார் என கூறப்பட்டது.

இதனை தொடர்ந்து, இந்தப் படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைக்க உள்ளதாக சில தினங்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்டது. மேலும், 'D55' படத்தில் தனுஷுக்கு ஜோடியாக ஸ்ரீலீலா, சாய் பல்லவி நடிக்கிறார் என்று படக்குழு ஏற்கனவே அறிவித்து இருந்தது. இந்நிலையில், 'D55' படத்தில் மெகாஸ்டார் மம்மூட்டி முக்கிய கதாபாத்திரத்தில் நடிப்பது உறுதியாகி இருக்கிறது.

இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி இதனை தனது X தளப் பதிவில் தெரிவித்துள்ளார். தனுஷ் 55-வது படத்தின் நடிகர், நடிகைகள் விவரம் தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்டு வரும் நிலையில், இந்தப் படத்தின் பூஜை இன்று நடைபெற்றது.



# நட்பில் சந்தேகம் கூடாது- நடிகை பூஜா ஹெக்டே



தெலுங்கு சினிமாவின் முன்னணி நடிகையான ஸ்ரீலீலா, தமிழில் சிவகார்த்திகேயன் ஜோடியாக 'பராசக்தி' படத்தில் நடித்து கவனம் ஈர்த்தார். தற்போது ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் தனுஷ் நடிக்கும் புதிய படத்தில் நடித்து வருகிறார்.

இதற்கிடையில் ஸ்ரீலீலா மும்பையில் நடந்த ஒரு பேஷன் நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். நிகழ்ச்சியில் அவர் அணிந்த உடை அனைவரையும் ஈர்த்தது. இடுப்பில் கூடை அணிந்தது போன்று காணப்பட்ட அந்த உடை இருந்தது. அந்த உடையின் விலை மட்டுமே ரூ.2¼ லட்சம் என்று கூறப்படுகிறது.

இதற்கிடையில் 'கோவில்' படத்தில் இடுப்பில் கூடையை வைத்து வடிவேலு நடக்கும் புகைப்படத்தையும், ஸ்ரீலீலாவின் தற்போதைய புகைப்படத்தையும் ஒப்பிட்டு சில குறும்புக்கார ரசிகர்கள் 'கமெண்ட்' அடித்து வருகிறார்கள். ஸ்ரீலீலாவின் ரசிகர்கள் பதில் கருத்துகளை வீசி வருகிறார்கள். இது சமூக வலைதளங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# "நீங்கள் இல்லாமல் நான் இல்லை வாழ்த்திய ரசிகர்களால் நெகிழ்ந்து போன சிலம்பரசன்



இயக்குநர் பொன்ராம் இயக்கத்தில் மறைந்த விஜயகாந்தின் இளைய மகனான சண்முக பாண்டியன் நடிப்பில் வெளியான படம் 'கொம்புசீவி'. இப்படத்தில் சரத்குமார் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து இருந்தார். இதனை தொடர்ந்து தற்போது நடிகர் சரத்குமார் 'ஆழி' படத்தில் நடித்துள்ளார்.


இந்தப் படத்தை இயக்குநர் மாதவ் தாசன் இயக்கியுள்ளார். இந்தப் படம் கடலை மையமாக கொண்டு வித்தியாசமான கதைக்களத்தில் உருவாகி உள்ளதாக கூறப்படுகிறது. 'ஆழி' படத்தில் தேவிகா சதீஷ், இந்திரஜித் ஜெகன், தாமரை செல்வி, வையாபுரி மற்றும் ஸ்ரீஜித் ரவி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். 888 புரொடக்சன்ஸ் நிறுவனம் சார்பில் பொன்னு கண்ணன் தயாரித்துள்ள இந்தப் படத்தின் படப்பிடிப்பு பணிகள் நிறைவடைந்து, வெளியீட்டிற்கு தயாராகி உள்ளது. இதனிடையே, 'ஆழி' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தது.இந்த நிலையில், 'ஆழி' திரைப்படத்தின் டீசர் இன்று (பிப்.4) மாலை வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. ஆழி திரைப்படம் வருகிற 27ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜய் தொலைக்காட்சியில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் சீரியல் அய்யனார் துணை. இந்த சீரியலில் கதாநாயகியாக நடித்து வருபவர் நடிகை மதுமிதா.

இவர் இதற்கு முன் சன் டிவியில் ஒளிபரப்பான எதிர்நீச்சல் சீரியலில் கதாநாயகியாக நடித்து தமிழக மக்களின் மனதில் இடம்பிடித்தார். தற்போது சின்னத்திரையில் முன்னணி நடிகைகளில் ஒருவராக வலம் வருகிறார்.



# அடுத்த சிம்பொனியை எழுதி முடித்த இளையராஜா!



லண்டனில் 'வேலியண்ட்' (Valiant) என்ற தனது சிம்பொனியை இளையராஜா அரங்கேற்றம் செய்தார்.

இசைஞானி இளையராஜா தனது நீண்ட இசைப்பயணத்தில் சுமார் ஆயிரம் திரைப்படங்களுக்கு மேல் இசையமைத்து சாதனை படைத்துள்ளார்.

மேற்கத்திய இசை மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவரான இளையராஜா மொசார்ட் உள்ளிட்ட மேற்கத்திய இசை ஜாம்பவான்களின் சிம்பொனி இசைக் கூறுகளை தனது பாடல்களில் பயன்படுத்தி பாமர மக்களும் அவற்றை ரசிக்கும் வகையில் மெட்டுகளை அமைத்தார்.

அவரது இசையால் பல திரைப்படங்கள் வெற்றிப் படங்களாக மாறியுள்ளன. அவரது பாடல்கள் அனைத்தும் இன்றைய தலைமுறையையும் கவரும் வகையில் அமைந்துள்ளன.

கடந்த ஆண்டு லண்டனில் 'வேலியண்ட்' (Val-iant) என்ற தனது சிம்பொனியை இளையராஜா அரங்கேற்றம் செய்தார்.

'சிம்பொனி சிகரம் தொட்ட தமிழன் இசைஞானி இளையராஜா பொன்விழா ஆண்டு 50' என்ற தலைப்பில் தமிழக அரசு அவருக்கு பாராட்டு விழா நடத்தியது.

இதற்கிடையே தனது அடுத்த சிம்பொனியை எழுதி வருவதாக கடந்த ஆண்டு தீபாவளி வாழ்த்துடன் இளையராஜா வீடியோ வெளியிட்டு தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் அடுத்த சிம்பொனியை எழுதி முடித்துவிட்டதாக இளையராஜா அறிவித்துள்ளார்.


தனது எக்ஸ் பக்கத்தில், பிப்.3, 2026 உடன் புதிய ஸ்டுடியோவிற்கு வந்து, ஐந்தாண்டுகள் நிறைவடையவிருக்கிறது. என்னுடைய இரண்டாவது சிம்பொனியையும் கிட்டதட்ட எழுதி முடித்துவிட்டேன் எனக் கூறியுள்ளார்.

ஒரு கதை அல்லது ஒரு சம்பவம் அல்லது ஒரு நிகழ்ச்சியை இசை வடிவத்தில் நான்கு பகுதிகளாக சொல்வதற்கு பெயர்தான் சிம்பொனி. சிம்பொனி என்பது ஒரு ஆர்கஸ்ட்ரா வகை ஆகும்.

சின்னத்திரையில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் சீரியல் பாண்டியன் ஸ்டோர்ஸ் 2. இந்த சீரியலில் கதிர் மனைவியாக ராஜி என்கிற கதாபாத்திரத்தில் நடித்து வருபவர் நடிகை ஷாலினி. இவர் விஜய் டிவியில் ஒளிபரப்பான கதாநாயகி என்கிற நிகழ்ச்சியில் பங்கேற்று பிரபலமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் நடிகை ஷாலினி தனது லேட்டஸ்ட் புகைப்படங்களை அவ்வப்போது பதிவு செய்வார். அந்த வகையில் தற்போது இவர் வெளியிட்டுள்ள லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்கள் வைரலாகி வருகின்றன.

# ஆழி படத்தின் புதிய அப்டேட்



இந்திய சினிமாவின் முன்னணி நடிகையாக திகழும் பூஜா ஹெக்டே, தமிழில் 'முகமூடி', 'பீஸ்ட்', 'ரெட்ரோ' படங்களில் நடித்துள்ளார். 'கூலி' படத்தில் கவர்ச்சி குத்தாட்டம் போட்டு கலக்கியிருந்தார்.

35 வயதாகும் பூஜா ஹெக்டே தற்போது பாலிவுட் படங்களில் பிசியாக நடித்து வருகிறார். முன்னணி நடிகர்களின் படங்களிலும் குத்தாட்டம் போட தயார் என்றும் அறிவித்துள்ளார்.

இதற்கிடையில் நிகழ்ச்சி ஒன்றில் அவர் பேசிய விஷயங்கள் கவனம் ஈர்த்துள்ளது. "வாழ்க்கையில் நட்பு என்பது ஒவ்வொருவருக்கும் வரும் அற்புதமான உறவு. அந்த உறவை கொண்டாடுங்கள். பாதுகாத்து கொள்ளுங்கள். நட்பில் சந்தேகம் என்றும் கூடாது.

உண்மையான நம்பிக்கைதான் நட்பை தாங்கி பிடிக்கும். அப்படிப்பட்ட உண்மையான நட்பு கிடைத்த அத்தனை பேரும் அதிர்ஷ்டசாலிகளே", என்றார்.

**ROYAL GARMENTS**
044-4210 5041
988430 5041
988458 2270



Wholesale Dealers in :
**Banian, Jutty, Mat, Towels, Lungies Etc.,**
#6/18 Rajagopal Street, Opp to Police Quarters,
(M.C.Road) Old Washermenpet, Chennai - 21.

**Landbazzar**
பகுதி நேர வேலைவாய்ப்பு
PART TIME JOB
SALARY
20,000/- Rs
NO SALES TARGET
- Retired person's / VRS
- Self Employee / Busniess Man
- Extra Income Needers / House wifes

5 APPOINTMENTS ONLY
97900 21367

**ஸ்ரீ கிருஷ்ணர் உபாசகர் பரிகார புகழ்**
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US 9597887308, 63804 53463
EXPERT IN VEDIC ASTROLOGY
- PREDICTION & SOLUTIONS
- MONEY
- LOVE
- HEALTH
- FAMILY
- BUSINESS
- CAREER
- MARRIAGE

**WANTED**
CNC & VMC OPERATOR, SETTER
LINE INSPECTOR
SHIFT SUPERVISOR
HI-TEK ENGINEERING INDUSTRIES
Survey No. 472/2A, SPH Road, Sengadu
Ayakolathur, Thiruvallur. - 602 105
99419 11817 / 99416 98979

**WANTED**
- MARKETING MANAGER
- ACCOUNTANT
- CNC LATHE MILLING OPERATOR & PROGRAMMER
- PLASMA & BENDING OPERATOR
- LATHE MILLING MACHINERY OPERATOR

AMBATTUR TAPSTIA,KATTUR
Contact: 95660 61750

Looking for CCTV Network ENGINEERS & TECHNICIANS for a 2000 plus Camera - CCTV Project across Tamilnadu and Kerala.
Apply with your Biodata to 8086660679 via whatsapp or Mail id: jobs.groupdivine@gmail.com
We are also looking for SUB-CONTRACTORS
Send details to 8086660679 via whatsapp or Mail id: info@groupdivine.in

Sanjay
Cell: 90032 64920
**Real Choice**



Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple) Sowcarpet, Chennai-600 079.
YouTube Real Choice Chennai | Facebook Real Choice Chennai | Instagram Real Choice Chennai

**PHARMACIST REQUIRED**
Diploma in Pharmacy with Tamilnadu Pharmacy Council Registration Certificate with 3 yrs exp.
Maya Nursing Home Ashoknagar, Chennai
Call: 98413 83989

**ஆட்கள் தேவை**
மருத்துவமனையில் பராமரிப்பு வேலைக்கு 40 வயதுக்குள் உள்ளவர்கள் அணுகவும்
RK சிறப்பு மருத்துவமனை
93457 81110

அசோக்நகரில் உள்ள மாயா நர்சிங் ஹோம்க்கு அருகில் வசிக்கும்
**வார்டு பாய் ஆயாக்கள் தேவை**
சம்பளம் ரூ.18,000
ஆண் / பெண் - வயது: 35க்குள்
9361390688 / 9841383989

**MOUNT HOSPITAL**
@ Adambakkam & Thoraipakkam Req.
- HOSPITAL ADMIN with Insurance Experiance
- STAFF NURSES
- RECEPTIONIST
- LAB TECHNICIAN
- PHARMACIST
- DRIVERS

730 530 5231

அசோக்நகரில் உள்ள மாயா நர்சிங் ஹோம்க்கு அருகில் வசிக்கும்
**வார்டு பாய் ஆயாக்கள் தேவை**
சம்பளம் ரூ.18,000
ஆண் / பெண் - வயது: 35க்குள்
9361390688 / 9841383989

**POWERCARE SOLUTIONS PVT. LTD**
(Manufacturer of Diesel Generator)
Requires
BDM, AREA, SALES MGR
(Exp. min 3yrs.Good Sal + Inc)
Fresh/ Exp ITI/ DIP/ ENGG
(MECH, EEE )
Ct: 89259 93101, 91766 85440

கேரளாவில் உள்ள பிரபல ஹோட்டலுக்கு அனுபவமுள்ள
**தோசை மாஸ்டர் & டீ மாஸ்டர் தேவை**
உணவு, தங்குமிடம் இலவசம்
விருப்பமுள்ளவர்கள் ஆதார் கார்டு / அடையாள சான்றுடன் நேரில் வரவும்
8711 808080

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில்
**பூச்சி மருந்து அடிக்க ஆட்கள் தேவை.**
உணவு, தங்குமிடம் மற்றும் ESI, PF உண்டு
சம்பளம் அனுபவத்திற்கேற்ப
பள்ளி சான்றிதழ், 2 போட்டோ, ஆதார் எடுத்துவரவும்,
சிட்டி பெஸ்ட் கன்ட்ரோல் சர்வீஸஸ்
2/7, வேலாயுதம் காலனி, சாலிகிராமம்
Ct: 9994843057 / 9384725836

**SHANMUGA PRIYA**
TOURS & TRAVELS
Porur, Chennai
நிறுவனத்திற்கு அனுபவமுள்ள
TELE CALLERS
பெண்கள் தேவை
Salary: 15,000/- TO 20,000/-
99412 44226

**ST COURIER®**
The People's Choice
Domestic-International-Cargo-E commerce
சென்னை போரூரில் பணிபுரிய கீழ்கண்டவர்கள் தேவை
- நைட் / மார்னிங் - டியூட்டி
Full / Part Time ஆட்கள் தேவை.
(ஸ்கேனிங், லோடிங், அன்லோடிங்)
- வேன் டெலிவரி ஆட்கள்
(குறிப்பு: பைக் தேவையில்லை)

தகுதி: 10 வது,12 வது, டிகிரி.
சம்பளம்: Upto Rs. 20,000 + Perks
Ct: 99406 11849

**Aruvi SUPERMART**
Shop Smart, Shop Smiles.
ACCOUNTANT
STOCK INVENTORY
DELIVERY BOY
Min 3 yrs Experience
SF No. 138/9A2, Kundrathur Main Rd, Mangadu, Chennai-122.
9087411008, 9087982000

**Breaking News Card.com** www.breakingnewscard.com
We Create Professional Breaking News Cards
Daily 4 Cards Plus get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY




1.யாரை ரொம்ப நம்புறீங்க
என்று கேட்டால் ரொம்ப
நேரம் யோசிப்போம் ஆனால்
நம்மைப் பற்றி ஒரு நொடியும்
யோசிக்க மாட்டோம்அதுதான்
நமது முதல் தோல்வி

2.அமைதி என்பது சத்தம்
இல்லாத இடத்தில்
இருப்பது அல்ல எவ்வளவு
சத்தங்களுக்கு நடுவிலும்
உங்கள் மனதை அமைதியாக
வைத்து இருப்பதே
உண்மையான நிம்மதி

3. வாழத் தெரிந்தவனிடம்
வாழ்க்கை இருப்பதில்லை
பாசம் தெரிந்தவன் இடம்
உறவுகள் இருப்பதில்லை
உழைக்கத் தெரிந்தவனிடம்
பணம் இருப்பதில்லை

4. வானமும் பூமியும்
இறைவன் சொத்து இன்பமும்
துன்பமும் மனிதனின்
சொத்து அன்பு ஒன்றே
நட்பின் சொத்து

5. நன்றாக பேசி பழகுபவன்
எல்லாம் நமக்கு நல்லது
செய்வான் என நினைக்காதே

தேளின் கொடுக்கில்
மட்டுமல்ல
தேனியில்
கொடுக்கிலும்
விஷம் உள்ளது

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

---

என்னை விட்டு விலகுவதாக
எண்ணமிருந்தால்
என்னை கொன்று விட்டு
போடி நிலவில்லாத வானம்
நீயில்லாத நான்
காண்கின்ற காட்சிகளின்
கருப்பு –வெள்ளை நிறைந்த
கருவிழி நாம்
ஒன்றையொன்று பிரிந்து
எப்படி வாழும் ? துடிக்கும்
இதயம் நொடிக்கு ஒரு முறை
உன் பெயரை உச்சரிப்பது
உனக்கு கேட்கவில்லையா
என்ன ? கடைசியாய்
ஒன்றே ஒன்று சொல்லிக்
கொள்கிறேன் இந்த
ஜென்மம் மட்டுமல்ல இன்னும்
பிறக்கப்போகும்
ஒவ்வொரு ஜென்மமும்
உன்னை காதலித்து
கொண்டே இருப்பேன்
நீ காதலிக்காத போதும் !

கத்தி கூப்பாடு போட்டு
சொல்கிறேன் சத்தியமாய்
என் புத்தி கூட
நான் சொல்வதை
கேட்பதில்லை
நான் காண்பது நீ
நான் சிந்திப்பது நீ
நான் பேசுவது நீ
நான் திட்டுவது நீ
நான் புகழ்வது நீ
என் உறக்கத்தில் நீ
என்னை உறங்க விடாமல்
செய்வது நீ கனவில் நீ –என்
கண்ணீர் நீ யாரடி நீ ?
ஷைத்தானும் –கடவுளும்



கலந்த கலவை நீ !

நீ தான் என் மனைவியென
ஆயிரம் கனவுகள்
வளர்த்தேன் ஏனோ
என் கனவுகளை போல
அதுவும் கானலாய் தான்
போனது உன்னை என்
கண்ணில் பட வைத்து
என்னை காதலில் விழ
வைத்து என்னை காயப்படுத்தி
அணு ,அணுவாய்
கண்டு இரசிக்கும்
அந்த ஈவு இரக்கமற்ற
கடவுளை நெஞ்சில்
ஈரமில்லாத அந்த கடவுளை
என்னை போல மனிதனாய்
பிறக்க சபிக்கிறேன்

கண்கள் கலந்து கைகள்
கோர்த்து ஊர் வியக்க
உன்னோடு வாழணும்ன்னு
ஆசைப்பட்டேனடி ஆசைகள்
எல்லாம் நிராசைகளாக
தான் போகுமா என்ன ?
வாழ்க்கையொன்றும்
சினிமா இல்லை சுபம் போட்டு
முடிப்பதற்கு இல்லையென
கடவுள் தீர்மானித்து
விட்டானோ ? அதனால்
என்னவோ என்னில் இருந்து
உன்னை திரும்ப எடுத்து
கொண்டு விட்டானோ ?
முதலும் முடிவுமாய் நான்
இரசித்த முகம் நீ தானடி
அழுகை அறியாதவன்

கண்ணீரை உணர்ந்து
கொண்டதும் உன் பிரிவால்
தானடி வலிகள் நிறைந்தது
இந்த வாழ்க்கையென
இரணங்களுடன்
உணர்த்தியது வாழ்வது
மட்டும் வாழ்க்கையல்ல
இறப்பதும் வாழ்வென
உன்னால் உணர்ந்து
கொண்டேனடி !

உயிர் உதிர்த்து உனக்காக
எழுதிய காதல் கடிதங்கள்
எல்லாம் உனக்கு
கொடுக்கப்படாமலே
என்னோடு சேர்ந்து
உறங்கி கொண்டிருக்கின்றன
என் கல்லறையில் !

என்னை எப்படியெல்லாம்
காதலிப்பாய் என
கேள்வி வினவுகிறாய்?
உன்னை அனுதினமும்
காதலிக்க தெரியாது–ஆனால்
அணு,அணுவாய்
காதலிக்க தெரியுமென்றேன்!!

என் கவிதையின் பிறப்பிடம்?
உன் கண்கள் தான்!!

துருப்பிடிக்காமல்
உன் மேல் காந்தமாய்
ஈர்த்து கொண்டிருக்கிறது
'என் இரும்புக் காதல்'

கடன் அன்பை முறிக்குமாம்
மரியாதையாக முத்தங்களாக
திரும்ப கொடுத்து விடு
எனது பெருங்காதலை!

என்னுள் பாதியாய் நீ
இருப்பதால்
நானும் சிவன் தான்!!

தூணில் மட்டுமல்ல
துரும்பிலும் இருப்பானாம்
கடவுள் என்னுள்
எப்போதும் இருக்கின்ற நீ
என் கடவுள் தான்!!

பிப்ரவரி 14 காதலர்
தினமென்று யார் சொன்னது?
தினம்,தினம் காதலை
கொண்டாடுபவனுக்கு
எல்லா நாளும்காதலர்தினமே!!

உன் அம்மாவிடம் சொல்லி
திருஷ்டி சுத்தி போட்டுக்கோ
அழகே அழகாய் பிறந்தால்
என்ன செய்ய?!

முகம் பார்க்கும் கண்ணாடி
கூட கண் வைத்து விடும்
உன் அழகின் பிம்பம் பட்டு!!

உன்னை காணும்
போதெல்லாம் இன்பமும்,
துன்பமும் சேர்ந்தே வருகிறது.
ஒரு பகல் நிலவை போல!

நீ என்ன பிரம்மாவா?
நான் என்ன எழுத வேண்டும்
என்பதை என் எழுதுகோலை
விட என் கற்பனையை விட
நீயே தீர்மானிக்கிறாய்!

**லி.நௌஷாத் கான்**

---

## நெய்தல் நாடனே..
## நீடு வாழி.!

பொங்கு கடல்.. சங்கு முத்து..
பரவி நின்ற நாடு

எங்கும் தமிழ் நெய்தல் நாடு
நீடு வாழப் பாடு!

மீன்கள் துள்ளி மேவி யாடும்
கரையில் சிந்துப் பாடு!

மீனவர்கள் வாழ்வு நிலை
உணர்ந்து கவியாடு!

பரதவர்கள் வலை விரித்து
கெண்டை மீன்கள் பிடிப்பர்!

பாவையர்கள் கரையிருந்து
பொங்கல் வைத்து அழைப்பர்!

இரவுப்பகல் கடல்மாதா
காத்து நின்றுஅருள்வாள்!

இன்று யோல என்றும்
வாழ இனிய வாழ்க்கை
தருவாள்!

வலைநிறைய கயல்கள்
துள்ளி மகிழ்ந்து
விளையாடும்!
கலை வளர படகுதுறையில்
கைகள் கொட்டிப் பாடும்.!

கச்சத் தீவு கரையில்
ஒதுங்கும் மீன்களென
ஆனோம்..

காளையர்கள் படகு ஏறி
மீன் பிடிப்பார் பாரும்..

வீரம் எங்கே.? விடியல்
எங்கே? தேடும் எங்கள்
வாழ்வே..

நெய்தல் நிலம தமிழர் இனம்
யாதும் எமது ஊரே..

ஒற்றுமையாய் கடலாடி
திரைக் கடலைக் கடந்து



வெற்றி மாலை
சூடுகின்றோம்!
நெய்தல் நாடே வாழி!

**வே.கல்யாண்குமார்.**

---

## வந்தநாள் முதல்!

நிலைமண்டில ஆசிரியப்பா!

தோற்றம் பெற்றநாள்
முதலாய்த் தொடரும்
கூற்றம் போகும்
வரையில் கொண்ட

ஏதும் மாறவில்லை
ஏற்றமும் இறக்கமும்
ஓதும் வாழ்விலே
ஒழுங்காய் நடக்குதே!

வானம் வையகம்
வண்ண நிலவு
கோளம் கொள்கை
குவலயம் மாறவில்லை!

நீதி நேர்மை குணமும் மனமும்
ஆதியில் இல்லா

அடிப்படை சாதி
விதியுடன் சதியும் வீரம்
ஒழுக்கம் மதியுடன் மாண்பும்
ஏதும் மாறவில்லை!

இன்பம் துன்பம் இனிய காதல்
மண்ணும் மலரும்
நீரும் காற்றும்

அன்புடன் பண்பு அருளுடன்
கருணை உண்மையுடன்
பொய்யும் உன்னத மாக

ஏதும் மாறவில்லை ஏற்றம்
காணவில்லைஆதிப்பழக்கம்
அங்ஙனம் தானே!

## ஈரநிலங்களைக் காப்போம்!

(சதுப்பு நிலங்கள்)
நேரிசை வெண்பா

சதுப்பு நிலங்களைச்
சார்ந்த நிலங்கள்
எதிர்காலத் திற்காக
ஏற்றே..இதயத்தை
ஈரமாக்கிக் காத்திடுவோம்
ஈரமான புல்வெளியைச்
சீருடன் காப்பமே சேர்ந்து!

நிலத்தடிநீர் சேமிப்பு
நேர்ந்த சதுப்பு
நிலங்களைக் காத்திடுவோம்
நெஞ்சில்...நலங்களை
முன்வைத்தே மேன்மையாய்



முன்வந்தே
நின்றிடுவோம்
நன்முறையில்
காண்போம் நனி!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

---

## மனிதப்பிறவியின் மாற்றம்

இப்பிரபஞ்சத்தில் "மாற்றம்"என்பதில் மனிதனுக்கு
நல்லதுமுண்டு! கெட்டதுமுண்டு !
இயல்பானதுமுண்டு ! இறுதியானதுமுண்டு !

அதில் பணத்தினால் வரும் "நிலைமாற்றம்" மனிதனை
தன்னிலை மறந்து ஆடச்செய்கிறது ! இது "கெட்டதே"

அடிக்கடி பதவியாலும் பணியாலும் வரும் "இடமாற்றம்"
என்பது சில மனிதனர்களின் மனதிற்கு சில சூழ்நிலையில் !
இது "நல்லதே"

வயதின் உடல்நிலையால் வரும் "தடுமாற்றம்" மனிதனாகப்
பிறந்தால் அனைவருக்கும் வருமென்பதால் !
இது "இயல்பானதே"

மனிதப்பிறவியில் காலத்தின் கோலத்தால்
சந்திக்கக்கூடிய "ஏமாற்றும் சில உறவுகள் "
"அன்பைக்காட்டி" "ஆதரவுப்பேசி" நன்மைகள் அனைத்தையும்
பெற்றுத்தன்னிலையை உயர்த்தியப் பிறகு
"தூக்கி எரியும்" உறவுகள் "அன்பிற்கு" கிடைத்த "ஏமாற்றமே"
இது "கெட்டதே"

இத்தகைய மாற்றத்தில் நம் "பெற்றோர்" உற்றார் உறவினர்களை
நாம் "இழக்கும்" போது "தடுமாற்றம்" "நிலைமாற்றம்"



"இடமாற்றம்" வந்தாலும் இதில் நாம் அடையும்
"ஏமாற்றம்" தான் மனம் ஏற்க மறுக்கிறது
!வாழ்க்கை வெறுக்கிறது!
இந்த "ஏமாற்றம் "
இயல்பானதே ! இறுதியானதே !
இறைவனாலானதே !

**G.A.கோவிந்தராஜ் (எ)சுரேஷ்குமார்**
திருப்புவனம் புதூர்

---

## வெற்றி !

வெற்றி பெற வேண்டும் என்று வேண்டும் வெறி !
வெற்றி எளிதில் கிடைத்து விடாது என்பதை அறி !

வெற்றி எட்டும் கனி என்றே நீ நினைத்திடு !
வெற்றி எட்டாக்கனி என்று நீ நினைக்காதே !

விவேகமாகச் சிந்தித்து வேகமாகச் செயல்படு !
வேறு சிந்தனை விடுத்து ஒரே சிந்தனை செய்திடு !

தோல்வி நேருமோ ? பயத்தை விட்டுவிடு !
தோல்வியைத் துரத்துவேன் துணிவுடன் முடிவெடு !

பயிற்சி முயற்சி தளர்ச்சியின்றித் தொடர்ந்திடு !
அயற்சி இன்றி ஆர்வத்துடன் நடந்திடு !

என்றும் இஸ்டப்பட்டு செயலில் இறங்கு !
என்றும் கஷ்டப்பட்டு செயலில் இறங்காதே !

எனக்கு வரும் என்றே நீ நினைத்திடு !
எனக்கு வராது என்று நீ நினைக்காதே !

என்னால் முடியும் என்றே நீ நினைத்திடு !
என்னால் முடியாது என்று நீ நினைக்காதே !

முடியாது என்று எடிசன் நினைத்து இருந்தால் !
முற்றிலும் இருட்டாகவே இருந்திருக்கும் உலகம் !

முடியாது என்று காந்தியடிகள் நினைத்து இருந்தால் !
முழுசுதந்திரம் இன்றி அடிமையாகவே இருந்திருக்கும்!

முடியாது என்று பெரியார் நினைத்து இருந்தால் !
மூட நம்பிக்கையில் நாடு மூழ்கியே இருந்திருக்கும்!

முடியாது என்று ஆம்ஷ்டிராங் நினைத்து இருந்தால் !
முழு நிலவு மனிதன் கால் படாமலே இருந்திருக்கும்!

முடியும் என்று முயன்றதால்தான் எல்லோருக்கும்
முடிந்தது சாதனைகள் எளிதாக சாத்தியமானது !

முடியும் என்று நீயும் உடன் முயன்றால்தான் !
முடியும் உன்னால் உலகில் சாதிக்க முடியும் !

தாழ்வு மனப்பான்மையைத் தகர்த்து எறி !
தன்னிகரில்லாதவன் நீ என்பதை அறி!

தன்னம்பிக்கை மலையளவு இருக்கட்டும் !
நன் நம்பிக்கை கடலளவு இருக்கட்டும் !

இறுதி செய்யப்பட்ட வெற்றி உனக்கு உறுதி !
பரிதியாகப் பயணம் தொடரு சிகரம் உனது !

**கவிஞர் இரா .இரவி !**

---

1. அமைதியாக இருக்க
பழகிக் கொள்ளுங்கள்
சில இடங்களில் கருத்து
சொல்வதை விட கடந்து
போகவே அதிக பக்குவம்
தேவைப்படுகிறது

2.முடிவைப் பற்றி சிந்திக்காதே
முயற்சியை பற்றி சிந்தித்தால்
வானம் உன் வசப்படும்

3.அனுபவம் சொல்லித் தரும்
பாடத்தை ஆயிரம்
ஆசிரியர்களாலும்
கோடிக்கணக்கான
புத்தகங்களாலும்
கூட சொல்லித் தர முடியாது

4.வாழ வேண்டும் என்று
நினைக்காதீர்கள் வாழ்ந்தே
ஆக வேண்டும் என்று
முடிவெடுங்கள் துன்பமும்
தூசியாக தெரியும்

5. ஒரு வழக்கறிஞரால்
அதன் நிரபராதிகளை
காப்பாற்ற முடியும்ஒரு
மருத்துவரால் பல
நோயாளிகளை காப்பாற்ற



முடியும்
ஆனால் ஒரு
ஆசிரியரால்
மட்டுமே பல
தலைமுறைகளை
காப்பாற்ற
முடியும்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

---

## வடலூர் தை பூசம்

விவசாயின் முதன்மை பயிர்
வடலூர் வீதிகளில்
அன்னதானம்மாய்...

தெருவெங்கும் காகித பிளேட்
உண்டு மகிழ்ந்த பின்.

தண்ணிரில் விளக்கு
ஏற்றியவர் அன்னதானம்
மூலம் பசியை போக்கினார்
ஏழை முதல்
பணக்காரன் வரை.

**சுரேஷ்,** திருச்சிற்றம்பலம்

---

## மாற்றம் !

திருமண வீட்டிலும் இறப்பு வீட்டிலும்
கூட்டம் சேர்கிறது !

திருமண வீட்டில்... பந்தியை பற்றியும்,
கவனிப்புகள் பற்றியும் ஜோடி
பொருத்தம் பற்றியும்...
குறைகளே அதிகம் பேசப்படுகின்றன.

இறப்பு வீட்டில்... இறந்தவர்
இல்லாவிடினும் "ரொம்ப நல்ல



மனுஷன் ... !' என்கிற
பேச்சு
பெரும்பாலும் பலர்
வாய்களில் இருந்தும்
கேட்கத்தான்
செய்கிறது !.

**எம்.பி.தினேஷ்.**
கோவை

---



## வசந்தம் வீசட்டுமே

ஒத்த ரோஜா உன் தலையில் இருக்க
உன் முகம் ஆனந்தத்தில் மலர்ந்திருக்க
உன் மனம் மட்டும் அலைவதென்ன....!
மாமன் மகன் என்னை கான
துடிப்பதென்ன....!

கம்பீர உடல் அமைப்பு கொண்டு
மாவீரன் மீசை உண்டு நீமிர்ந்து
நிற்கும் என் தேகம் உன்னை தேடி
அலைவதென்ன...!

உண்மையாக நீ இருந்தும்
உன் உசுருக்குள்ளே நான் இருந்தும்
சேதி ஒன்னு சொல்லலியே...
நாம் சேர்ந்து வாழ நேரம் கூடலியே....!

காத்திருக்கேன் கண்மணியே ....
காதலை காப்பாற்ற துடித்திருக்கேன்...
வாலிபம் முடியும் முன்னே




வாழ்க்கையை
தொடரலாமே....!

வசந்த கொடி
ஏற்றலாமே...!!

**பொன்.கருணா**
நவி மும்பை

---



நான் உன்னை
அழைக்கவில்லை
கல்லூரி நட்பென
பழகித் திரிந்தேன்

ஆசையுடன் கனவில்
பேசி மகிழ்ந்தேன்

எனக்கெனப் பிறந்தவள்
என்று நினைத்தேன்

காதல்பேச்சில்
மயங்கித் தவித்தேன்

சிறைப்பட்ட நெஞ்சம்
தணலாய் கொதிக்க

வாடும் பயிராய்
துவண்டு போனேன்

தண்ணீர் விட்டால்
அணைந்து விடுமா

வாழ்வைவீணடித்து
வாழ வழியின்றி

கானல்நீரை கண்டு
கரைந்து மடிகிறேன்.

கடலலையாக மோதி
காணாமல் போனது

மௌனத்தில் முடிந்தது
இனிமை நினைவுகள்.

**தாராமதன்**

---

## குங்குமம்

குங்குமச் சிவப்பு நெற்றியில்
ஒளிரும் அழகே தனி.
நம்பிக்கையின் சின்னமாய்
மனதில் மலரும்.
பெண்மையின்
பெருமையை மெதுவாய்
சொல்லி
ஒரு வித மணம் வீசும்.
சந்தோஷமும் சக்தியும்
சேர்ந்து மின்னி
பெண்மைக்கு
அழகு சேர்க்கும்.
கலாச்சாரத்தின் சின்னமாய்
காலம், காலமாகத் தொடர்ந்து
விளங்குவது குங்குமம்.
பாரம்பரியத்தின் பாதையில்
பெண்ணின் சுமங்கலி



வாழ்க்கைக்கு
இலக்கணமாய் பல
வண்ணத்தில் மிளிர்வது
குங்குமம்.

**உ.மு.ந.ராசன்கலாமணி**
கோயம்புத்தூர்.

---



## பூமித்தாய்

நாத்துகளை சுமந்து நடந்து
வந்தோமே.. வயலும் உழுது
வசமா இருக்குதே..

இடுப்பில் தூக்கி சொருகிய
சேலையோடு..
குனிந்து நாற்றுகள்
வரிசையாய் நட்டோமே..

ஒரு வயலில் விதைத்த
நெல்மணிகள்.. விளைந்து
நாற்றாகி அடுத்த வயலில்..

நட்டு வளர்ந்து
நெல்லுமணிகளை சுமந்தே
வனப்பான அழகோடு
செழிப்பாதான் காற்றிலாடுமே..

கதிர் முற்ற நெல்லின்
பாரத்தில்..
தலை சாய்ந்து படுக்குமே..

கதிரறுத்து போரடித்து காய
வைப்போமே..
நெல்மணிகளை மூட்டையாக
சேமித்து வைப்போமே..

**உமாதேவி சேகர்**
பியூட்டிஷியன்
தஞ்சை






## கப்பல் விடுவோமா!

கப்பல் விடுவோம்!
காகிதக் கப்பல் விடுவோம்!
மழையினில் நனைந்தேனும்
கப்பல் விடுவோம்.!
இப் பொழுதும் மறக்காமல்
அந்தநாள் ஞாபகத்தில்
கப்பல் விடுவோம்.!

தெருவினில் இறங்கி நாம்
விடுவோமா? திரும்புமோ
அந்தநாட்கள்நினைப்போமா?
கத்திக் கப்பல் செய்து
நாம் விடுவோமா..?
கன்னித்தமிழ்ப் பாட்டுப்பாடி
விடுவோமா!

அல்லிமலர் பூத்திருந்த
குளத்தினிலே.. அன்றிருந்த
மழலைப் பருவத்திலே..
கவலைகள் ஏதுமின்றி
கப்பல் விடுத்தோம்!
கனவுகள் வாழ்கவென்று
கப்பல் விடுத்தோம்!

சுரம்வரும் அப்பா அம்மா
அடிக்கயிலும்.. சுகமாக
ஏற்றிருந்த
காலம் அது.!
வரம் தரும்
இளமையின்
கோலம் அது..
வரும் மழை..
கப்பல் ஒன்று
விடுவோமா!



**வே.கல்யாண்குமார்.**




## பெருங் கருணை...

கொடும் பசியில் ஆளாய்
பறக்கும்...காக்கை..குருவி..
கொக்கு...வாத்துக்களுக்கு..

சிதறிய
நெல்மணிகளை
விட்டு
விட்டுத் தான்
செல்கிறது...
அறுவடை
முடிந்த...
நெற்வயல்




**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



## உழவே உயிர்

வானம் பார்த்த பூமி
உழவே நம் உயிர் சாமி
காலை பொழுதில்
கலப்பை சுமந்து சகதியில்
கால் வைத்து ஏர் முனையில்
பயிர் விதைத்து மழையிலும்
வெயிலிலும் உழைத்து
குனிந்து விதையிட்டு
யாரிடமும் குனியாத
நெஞ்சத்தோடு பசியோடு
துடிக்கும் உயிர்களுக்கு
பசுமை நிறத்தோடு
பாசமிகு உணவளித்து
உழவே உயிரென்று
உழைக்கும் உழவன் மகன்
கண்ணீராய் தண்ணீர்
பாய்ச்சி வாடாத மனதோடு
பயிர் காத்து உழவே நம்
உயிர் என்று எட்டாத
வானிற்கும் உணவளிக்கும்
உழவன் மகன் உழவே உயிர்
என்று நினைக்கும் உத்தமன்
நம் தமிழன் வாழ்க தமிழ்

**பூ. அடைக்கலம்**
பெருமாள் பட்டி



## பேரறிஞர் அண்ணா!

நேரிசை வெண்பா!
பேரறிஞர் அண்ணா
பெருமையுடையோரே
சீரறிஞர் அண்ணா
சீர்மையாம்.. கூரறிஞர்
தேரறிஞர் அண்ணாவே
தேர்ந்த முதலமைச்சர்
பாரறிஞர்தானவர் பாங்கு!

கடமையுடன் கண்ணியம்
கட்டுப்பாட்டோடே
உடைமையாய்க்கொண்ட
உழைப்பர்..தடையாம்
மடமையை நீக்கியே
மாண்பாக்கி அன்றே
இடுக்கண்ணை நீக்கினாரே!

பெரியாரின் சீடராய்ப்பீடுற்றார்
அன்றே அரிதான
ஆர்ப்பாட்டம் இல்லாத்...
திருப்பத்தை ஆட்சியில்
கண்டார் அழகாக பேரறிஞர்
மாட்சியைப்போற்று மகிழ்ந்து!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## நிறம் நிரந்தரமில்லை

உடலுள் ஓடும்
குருதியின் வண்ணம்
வெளியில் தெரியாது

உடுத்தும் ஆடையின்
வண்ணம் உள்ளே புகாது

வெண்மைக்குள்
ஏழு வண்ணமுண்டு
வானவில்லாய் மாறி
கண்கள் கண்டதுண்டு

ஒத்த வண்ணங்கள்
பலவுண்டு ஒன்று பலவாகி
மாற்றம் பெற்றதுண்டு

விழியில் பட்டது
மனதில் நுழையாது
மனதில் கண்டது
விழியறியாது

ஒரு வண்ணம் மறு வண்ணம்
ஏற்கும் தூரிகை பட்டு
அழகாகும்

நிரந்தரமில்லா வாழ்வில்
நிறங்கள் மட்டும்
நிலைக்குமோ?

சுவற்றில் மாறிய வண்ணம்
வீட்டை அழகாக்கும்
ஓவியத்தில் மாறிய வண்ணம்
காட்சியை அழகாக்கும்

பட்ட மரம் துளிர்த்து
பச்சை வண்ணம் மாற
பார்க்கும் கண்கள்
விருந்தாகும்


வானில் மாறிய நீல வண்ணம்
மேகம் தாங்கி மழையாகும்

வண்ணம் மாறும்
பச்சோந்தியும் வகையில்
ஒன்றாய் விலங்காகும்

எண்ணம் மாறும்
மனிதர் இங்கே இயல்பாய்
வாழும் முறை கண்டோம்

குணத்தை மாற்றும்
மனிதரும் கொண்டு சேர்ப்பர்
துயரத்தை

வாழ்வின் மாற்றம்
இயல்பாகும் புரிந்து
கொண்டால் மகிழ்வாகும்



நிறங்கள்
என்றும்
நிரந்தரமல்ல
நிலைத்த
குணமே
நிம்மதியாகும்.

**தமிழ்நிலா**



## பேரறிஞர் அண்ணா

பேறிஞர் பட்டத்திற்கு முற்றிலும் பொருத்தமானவர்
பெயருக்கு அறிஞராக இருந்தவர் அல்ல அவர்
பெயரால் மட்டுமல்ல அறிவிலும் முதிர்ந்தவர்
பெயருக்கு முதல்வரல்ல அளப்பரிய சாதனை புரிந்தவர்
பெரியாரின் கொள்கைகளை நாட்டில் நடைமுறைப்படுத்தியவர்
பெரியாரை மட்டுமே நிரந்தர தலைவராக ஏற்றவர்
கருத்து சொல்வதில் மேல்நாட்டவரை வென்றவர்
கருத்து வேறுபட்ட போதும் பெரியாரைப் போற்றியவர்
அழகு தமிழிலும் அந்நிய ஆங்கிலத்திலும் புலமை பெற்றவர்
அற்புதமாக உரையாற்றி அனைவரின் உள்ளம் கவர்ந்தவர்
கடமை கண்ணியம் கட்டுப்பாடு கற்றுத் தந்தவர்
கடமையை கண்ணியமாகச் செய்து கட்டுப்பாடு காத்தவர்
காஞ்சியில் மறந்து காஞ்சிக்கு பெருமை சேர்ந்தவர்
கஞ்சிக்கு வழிசெய்து ஏழைகளைச் சிரிக்க வைத்தவர்
குற்றால அருவியென இலக்கிய உரை நிகழ்த்தியவர்
குன்றத்து விளக்கென அறிவால் அகிலம் ஒளிர்ந்தவர்
கட்டுரை,கதை கவிதை திரைக்கதை வசனம் புதினம் தந்தவர்
கட்டுக்கடங்கா கற்கண்டு இலக்கியம் படைத்தவர்
அடுக்கு மொழி பேச்சில் அழகு முத்திரை பதித்தவர்
அனைவருக்கும் மேடை பேச்சிற்கு ஆசானாக அமைந்தவர்
உருவத்தில் குள்ளமானாலும் உள்ளத்தால் உயர்ந்தவர்
ஒய்வின்றி உழைத்து அழியாப் புகழைச் சேர்த்தவர்
உலகின் இரண்டாவது பெரிய கடற்கரை மெரினா
உலகின் முதலாவது பெரிய பேறிஞர் அண்ணா

பகுத்தறிவுச் சிந்தனையை மென்மையாக விதைத்தவர்
பண்பாட்டுக் கருத்துக்களை மேன்மையாக விளக்கியவர்
பத்தரை நித்திரை முத்திரை என உரைத்தவர்
பேச்சில் அடுக்கு மொழியை அள்ளி வீசியவர்
மூக்கிற்கு பொடிப் போடும் பழக்கம் உள்ளவர்
மூக்கில் விரல் வைக்கும் வண்ணம் பேசிடும் வல்லவர்
மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கு மணமுண்டு சொல்லியவர்
மாற்றாரை மதிக்கும் உயர்ந்த குணம் உடையவர்
எதுகை மோனை இயைபு எனத் தெளித்தவர்
எதையும் தாங்கும் இரும்பு இதயம் பெற்றவர்
சொக்கத்தங்கம் போன்ற உள்ளம் கொண்டவர்
சொக்க வைக்கும் வண்ணம் பேசிடும் நல்லவர்
தமிழ் இன உணர்வுச் சுடர் ஏற்றி வைத்தவர்
தமிழ் மொழிக்கு அரியணை தந்து உயர்த்தியவர்
தமிழக வரலாற்றில் தனக்கென உயர்ந்த இடம் பெற்றவர்
தமிழக முதல்வர்களில் முதல்வராக நிலைத்து நின்றவர்
பெரியாரின் சீடர் என்பதை என்றும் மறக்காதவர்
பெரியாருக்குக் காணிக்கை என் ஆட்சி என்றவர்
மெரினா கடற்கரைக்கு பெருமை சேர்த்தார் அண்ணா
மெரினாவில் உறங்குவதால் புகழ் பெற்றது மெரினா.



**கவிஞர் இரா. இரவி,** மதுரை



### வரிசை

உன்னைப் பற்றி
ஒரு காதல் கவிதை எழுத
நினைத்து விட்டாலே போதும்
வார்த்தைகள் வந்து
வரிசை கட்டி நிற்கின்றன!

### உலா

நீ என்னை முறைத்துப்
பார்க்கும் போது(ம்) கூட
எனக்குள் என்னமாய்
உலா வருகின்றன
இந்தக் கவிதைகள்!

### நலம்

அள்ளி அணைத்து
நலம் விசாரிக்கிறாய்!
என்னை வாடாமல்
வைத்திருப்பது உன்
அன்பு ஒன்றுதான் என்று
தெரிந்து வைத்திருக்கும் நீ!

### வீச்சு

உன் விழி வீச்சில் விழுகிறேன்
நான்! எழுந்தாடுகிறது
இந்தக் கா த ல்!

### கோலம்

வாசலைச்சுத்தம் செய்து
தண்ணீர் தெளிக்கிறாய்!
உன் அழகில் கோலம்
போட்டுக் கொண்டது
என் மனசு!

### அதிசயம்

நீ ரோசாப்பூ நிற அழகி
என்றாலும் உனக்கு மல்லிகை
மனசு! இப்பொழுது சொல்!
பூக்களுக்கு நான்
மயங்குவதில்
என்ன அதிசயம் இருக்கிறது?!

### கடமை

நீ ஒவ்வொரு முறை
என்னைக்கடந்து செல்லும்
போதும் முறைத்துக்
கொண்டேதான் செல்கிறாய்!
ஆனால் அப்பொழுதும் கூடக்
கா த ல் எழுதும்
கடமையிலிருந்து
தவறுவதேயில்லை உன்
கண்கள்!

### வேலை

என் கவிதைகளில்
எப்படியாவது இடம் பெற்று
விடுவதே உன் காதலுக்கு
வேலையாகப் போயிற்று!

### வந்தனம்

சிணுங்கினாலும்
முரண்டு பிடித்தாலும்
ஊடலைக் கைப்பற்றினாலும்
சினத்தையே குத்தகைக்கு
எடுத்தாலும்(கூட) நீ
காதலுக்கு வந்தனம்
சொல்லும் அழகு
ஒன்றிற்காகவே உன்னை
உயிராக நேசிக்கிறேன்!

### ஊஞ்சல்

உன் கூந்தலில்
தொங்கும் பூச்சரத்தை
ரசிக்கும் போதெல்லாம்
ஊஞ்சலாடுகிறது
என் மனம்!

### சிறகு

இதழ்கள் விரித்து
அழகாய் சிரிக்கிறாய்!
என் இதயம் இறக்கை
கட்டிக் கொள்கிறது!

### திறமை


நீ என்னுடன் இல்லாத
நேரங்களிலும் கூட என்னைக்
கைப்பற்றித்தக்க வைத்துக்
கொள்கிறது உன் காதல்!

### மனம்



சந்தித்து
விட்டுப்
புறப்படத்
தயாராகிறாய்!
உன்னைத்
தொடரத்
தொடங்குகிறது
என் மனம்!

**முத்து ஆனந்த்** வேலூர்



## அவள்

பேணுவது உனக்கு என்றால்
சிரமம்
எனக்கும்தான்.
அத்தனை
அழகையும்
வடிக்க
வேண்டுமே
வார்த்தைகளில்
சரியாக!



**கே. பி. ஜனார்த்தனன்**

## "வியர்வைக்கு விலையா?"

குறை கூலி கொடுத்து
உயிரை வாடகைக்கு
எடுக்கும் தொழில் முறை
என்பது அழகுபடுத்தப்பட்ட
கொலை ஒப்பந்தம்!

எலும்பு தேய இயந்திரத்தை
ஓட்டும் தொழிலாளி,
ஆனால் முதலாளி
கண்களுக்கு என்பு தோல்
போர்த்திய எந்திரம்!

வியர்வை துளிகள்
லாபக் கணக்கின் மை!
அந்த மையால்
எழுதப்படுகிறது
அடுத்த தலைமுறைக்கான
அடக்குமுறை!

பசி வந்தால் "சந்தை
நிலவரம்" சரியில்லை
என்பாய்! நோய் வந்தால்
"கம்பெனி விதி" காட்டுவாய்;
சாவு வந்தால்? "மாற்றுப்
பணியாளர்" என்பதே மாற்று!

பாதுகாப்பு இல்லா
பணிமனைகள்...
உத்திரவாதம் இல்லா
உத்தியோகங்கள்...
இவையே தொழிலாளி
வாழ்க்கையைத்
துரத்தும் துரோகங்கள்!

மறக்க வேண்டாம்...
அடக்கப்பட்ட கோபம்
அழுகி மறையாது...
உழைப்பின் புரட்சியாய்
ஓர் நாள் வெடிக்கும்!

அன்று குறை
கூலி கொடுத்த
கணக்குகளெல்லாம்
நியாயம் கேட்கும்..
தீர்ப்புக்கள்
திருத்தப்படும்
தொழிலாளி
கையால்!



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



எழுத்துக்களைச்
சொற்களாக்கி
விடுகிறது
உன் நினைவு..
வார்த்தைகளை
வரவொட்டாமல்
செய்கிறது
உன் காட்சி !



**ரிஷபன்**

## மனிதம்

மண் தோன்றியபோதே
மனிதமும் தோன்றியது.
மக்கள் மனவயலில்
மரமாய் வேர் ஊன்றியது.

சங்க காலம் முதல்
எங்க காலம் வரை
மனிதத்தாலே உலகம்
சுற்றுகிறது. உயிர் அன்பைப்
பற்றுகிறது.

அனைத்திலும் சிறந்தது
உயிர்ம நேயம்.மற்றதெல்லாம்
மறைகின்ற மாயம்.

அன்பில் இல்லை
உயர்திணை அஃறிணை.
அகிலம் முழுமைக்கும்
அதுவே துணை.

தேடிவந்த புலவனுக்குப்
புரவலன் பொருள் தந்தான்.
வாடி வந்த விருந்தினனுக்கு
வள்ளல் இறைவனாய்
வந்தான்.

இருக்கும் பொருளைப்
பிறர்க்குக் கொடுப்பதில்
இன்பம். இல்லாதோரிடம்
விலகும் வறுமைத் துன்பம்.

வாடிய பயிரைக் கண்டு
வாடியதும் நேயம்.
வள்ளல் பாரி தேரைத்தந்ததும்
நம் தமிழ்த் தேயம்.

போரை நிறுத்த அதியனுக்கு
ஔவை தூதுசென்றாள்.
பேச்சுத் திறனாலும்
நேயத்தாலும்
தொண்டைமானை
வென்றாள்.

பசியால் இருப்பவரின்
பிணிபோக்கினர் அன்று.
அவ்வறம் இன்றும்
தொடர்தல் நன்று.

மனித நேயத்தில்
மாணவ நேயமும் அடங்கும்.
கல்விக்காக உதவுதலில்
இது தொடங்கும்.

மடிக்கணினியும்
மிதிவண்டியும் மாணவருக்கு
அரசு வழங்கும். நாளைய
உலகு நம்பிக்கையாக
மாணவருக்கு விளங்கும்.

இறப்பின் விளிம்பிலும்
உறுப்பினைக் கொடைதருவது
நவீன மனிதநேயம்.
நாளும் நன்மை பாயும்.

உணவு உடை உறையுள்
இம்மூன்றும் அடிப்படைத்
தேவை. இன்முகத்துடன்
தருவது இனியவர்களின்
சேவை.

விபத்தில் விழுந்தவருக்கு
விரைந்து தருகிறார் இரத்தம்.
சாதி இனம் பாராது
சமத்துவம் நிறைகிறது
நித்தம்.

முகவரி கேட்பவரிடம்
முகம் கோணாது
இடம்
சுட்டுவதும்
நேயம்.
மனிதம்
நிரப்புவோம்.
மகிழ்ச்சி
பரப்புவோம்!



**மு.மகேந்திர பாபு,** மதுரை.

கடந்து போகும் உலகமே
நம்மை வெறுத்தாலும்
ஊரே பகையானாலும்

வினை வந்து சூழ்ந்தாலும்
வீண் பழிகள் நேர்ந்தாலும்


நட்பே துரோகம் ஆனாலும்
நடு முதுகில் குத்தினாலும்

எதை நாம் பெற்றாலும்
எதை நாம் இழந்தாலும்
இதுவே இறுதியானது அல்ல
என்பதை மட்டும்
நம்புவோம்

"எதுவும் கடந்து
போகும் "



**ம. இந்திராணி**
திருச்சி



## மின்மினிப்பூச்சிகள்

நட்சத்திரங்களுக்குச்
சிறகுகள்
முளைத்துக்கொண்டதோ
தெரியவில்லை
உங்களின் அழகை
அடையாளப்படுத்தியதற்கு
இரவுக்கு நன்றி சொல்ல
வந்தீர்களோ?

திரியில்லாமல் ஏற்றி
வைக்கப்பட்ட சின்ன சின்ன
தீபங்களே! ஜீவனின் சுடர்
உங்களிடம் தான்
பிரகாசிக்கிறது !
பகலில் தொலைத்ததை
இரவில் தேடுகிறீர்களோ?

பகலில் பூக்களின்
புன்னகையைப்பரிசீலித்த
பகலவன் உங்களை
நிராகரித்ததால்
இரவோடு கைகுலுக்க
வந்தீர்களோ?

அணி திரண்டு வாருங்கள்
ஆயிரம் ஆயிரமாய்
இங்கே ஏழைகளின்
குடிசைகளில் திருமண
வைபவங்கள் இவர்களின்
இல்லங்களில்
நீங்கள்
ஜொலிக்கும்
போது
வண்ணமின்
விளக்குகள்
எதற்கு?



**கவிஞர் த.அனந்தராமன்**
துறையூர்



## விளங்கிடுவார் வில்லின் அம்பாய்

***அரசியலில் அதிசயம்தான் அறிஞர்
அண்ணா
***அறிவாற்றல் மிகுந்தவர்தான் எங்கள்
அண்ணா
விரல்வித்தைத் தமிழாலே விந்தை செய்தார்
***வீச்சுமிக்க படைப்புகளால் புகழை
எய்தார்
குரலெடுத்துப் பேசுகின்ற பேச்சோ தேனாம்
***கூறுகின்ற கருத்துக்கு நிகர்தான்
வானாம்
தரமான அரசியலால் மனங்கள் வென்றார்
***தமிழகத்தின் ஒப்பில்லாத் தலைவர் அண்ணா

விரிவானச் சிந்தனையின் விடியல் அண்ணா
***விதைபோலே விழுந்தவர்தான் எங்கள் அண்ணா
பெரியாரின் சித்தாந்தம் பெரிதாய்க் கொண்டார்
***பெரும்புரட்சி செய்தன்றோ மாற்றம் கண்டார்
சரியானப் பாதையினைக் காட்ட வந்தார்
***சலிக்காத உழைப்பாலே வளர்ச்சி தந்தார்
சரியாமல் மாநிலத்தின் மானம் காத்தார்
***சத்தியத்தின் வழிகளிலே உயர்வை வார்த்தார்

மாற்றாரும் மதிக்கின்ற மாண்பைச் சொன்னார்
***மக்களாட்சி மகத்துவத்தின் மகிமைச் சொன்னார்
ஏற்றதொரு வாழ்விற்கு எளிமை சேர்த்தார்
***ஏழையரின் சிரிப்பிலன்றோ இறைவன்
பார்த்தார்
நேற்றாகி இன்றாகி என்று மானார்
***நேர்மைக்கும் நீர்மைக்கும் சான்றாய் ஆனார்
வீற்றிருப்பார் இதயத்தில் என்றும் அன்பாய்
விளங்கிடுவார் குறிக்கோளாய் வில்லின் அம்பாய்



**கவிஞர் மு.வா.பாலாஜி,** ஒசூர்

RG
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருட்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
* Plots
* Flats
* House
* Villa
* Bungalows
* Farm Land
* Ware Houses
* Factory Sites
* Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005

Just499
Pick Any Website Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the LEADS GENERATION FACTORY
For Your REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY AT ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Rs 8000 - Rs 15000 per month
Ananda Bhaskar
9337501889
7789941009

WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990

WANTED MALE/FEMALE
SALES ASSISTANT
PREFERABLE IN & AROUND ALANDUR
9962258000
Since 1953 SLJ Sri Lakshmi Jewellery
ALANDUR, CHENNAI - 16.

WANTED
EXECUTIVES
Age Limit 40 Years
For Chennai, Tiruvallur, Chengalpattu
Attractive Salary Package, PF, ESI & Bonus with Allowances
999 BRAND
+91 893 999 7476
Email: 999lungies@kasz.in

WANTED
MARKETING HEAD REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998

REQUIRED
Bank & Finance
LOAN CONSULTANCY
TELECALLER (F)
Age Below 30 | Fresh/Exp 2Yrs
Qual: +2 or Any Degree
Sal: 12 to 18K + Inc
West CIT Nagar, T.Nagar-35.
ct: 97907 88886

WANTED
Experienced candidate for Office Manager position.
Good salary offered.
Contact: 87544 55567
Email: requires2025@gmail.com


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


WE'RE HIRING!
A Passionate Content Creator
94386 10756


CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS



சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள்!
அஜந்தா பாக்குடன் உங்கள் தீபாவளியை கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 63804 53463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
ARG
We Build Your
DREAM HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your Website/App need at one place
Small Business website
E - commerce Website
Corporate Website
Enterprise website
Mobile App Development
contact us at
9337501889


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


999 SITE
ARE YOU
LOOKING FOR JOB
JOB
Websites
CONTACT/WHATSAPP-7789951009


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும்
ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
உள்ளூர் செய்திகள் முதல்
வெளிநாட்டு செய்திகள் வரை
துல்லியமாக தரும்
ஒரே நாளிதழ்
ஆனந்த பாஸ்கர்
www.anandabhaskar.com
தினம் தோறும்
உள்ளூர், உலக செய்திகள் வரை
தரும் தரமான
நாளிதழ்
பேப்பர்பாய்
www.paperboy.biz


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com







**SATHLOKHAR**
SYNERGYS E&C GLOBAL LIMITED
Enduring Relationships
EPC & Infra Turnkey Contractors
CIVIL | PEB | MEP | INTERIORS | SOLAR
NSE Listed Company

We are looking for enthusiastic and self driven Engineers to join our growing team.

**Vacancies**
Civil | PEB | MEP Engineers

**Qualification**
Diploma or BE in Civil, Mechanical & EEE, Any degree / +2 passed

**Experience**
only 0 to 3 years

**Apply Now**
hr@sathlokhar.com
Contact: 98408 96529

Build your career with a company committed to construction engineering excellence.





**WANTED**

**Job 1-SALES ENGINEER**
Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu

**Job 1-SALES ENGINEER**
Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu

**ALP AEROFLEX INDIA PVT. LTD.**
Contact details for Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com










தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE




**UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD**

உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்

அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்


5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971





# பல்சுவை களஞ்சியம்




## சிவ அம்சம் பொருந்திய அனுமன்...



அனுமார் மிக சிறந்த ராம பக்தர் என்பது உலகறிந்த விஷயம். ஆனால் அவரை சிவ அம்சம் பொருந்தியவர் என்று சிலர் கூறுவதற்கு காரணம் இருக்கிறது....

வைஷ்ணவ சம்பிரதாயத்தில் கருடாழ்வாரை பெரிய திருவடி என்று அழைப்பார்கள். அதைப் போலவே ஆஞ்சநேயருக்கும் சிறிய திருவடி என்ற சிறப்பு பட்டம் உண்டு.

ராம அவதாரத்தில் பகவானுக்கு தொண்டு செய்து தாசானுதாசனாக வாழ்ந்ததனால் இந்த சிறப்பை அனுமன் பெறுகிறார்.

அத்தகைய அனுமன் சிவ அம்சம் பொருந்தியவர் என்பது அதியசயமான உண்மை யாகும். திரேதா யுகத்தில் குஞ்சரன் என்ற மகா சிவபக்தன் ஒருவன் வாழ்ந்தான். அவனுக்கு வெகுநாட்களாக குழந்தைகள் இல்லை. குழந்தை வரம் வேண்டி அதுவும் ஆண் குழந்தை வேண்டுமென்று சிவ பெருமானை நோக்கி தவம் மேற்கொண்டான்.

குஞ்சரனின் தவத்தை மெச்சிய கைலாச நாதன் அவன் முன்னால் தோன்றி உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். தனக்கு அழகான ஆண்குழந்தை வேண்டுமென்று அவன் சொன்னான்.

அதற்கு சிவபெருமான் உனது கர்மப்படி ஆண்குழந்தை பெறுகின்ற பாக்கியம் உனக்கில்லை. ஆனால் மகாபதிவிரதையாக ஒரு மகளை பெறுவாய். அவள் மூலம் என் அம்சத்தில் உனக்கொரு பேரன் பிறப்பான் என்று வரம் கொடுத்தாராம்.

குஞ்சரன் மிகவும் சந்தோஷப்பட்டான். குழந்தை இல்லையே என்று வருந்துவதை விட பிள்ளை இல்லா குறை தீர்க்க பெண் குழந்தையாவது பிறக்கட்டுமென்று தவத்தை முடித்து வீட்டுக்கு போனான். அவனுக்கு சில நாளில் அஞ்சனா என்ற அழகான மகள் பிறந்தாள். 'கன்னிபருவம்' எய்திய அஞ்சனா தேவி கேசரி என்ற வானர வீரனை காந்தர்வ முறையில் மணம் முடித்தாள். ஒருமுறை அஞ்சனா தேவி முன் குறத்தி வடிவாக வந்த தர்ம தேவதை திருவேங்கட மலைக்கு சென்று தவம் செய், அதன் பயனாக தேஜசும் வீரியமும் நிறைந்த மகன் பிறப்பான் என்று சொன்னாள். அஞ்சனா தேவியும் திருமலை சென்று தனது தவத்தை துவங்கினாள். பக்தி சிரத்தையோடு அவள் செய்த தவம் வாயு பகவானுக்கு மிகவும் பிடித்துவிட்டது. அவள் தவத்திற்கு தன்னால் முடிந்த உதவி செய்யவேண்டும் என்று விரும்பி தினசரி ஒரு பழத்தை அவள் அறியாமல் அவள் முன்னால் வைத்துவிட்டுப் போனான்.

ஒருநாள் சிவபூஜைக்காக வைத்திருந்த பழம் ஒன்றை எடுத்து அவள் இருந்த இடத்தில் வைத்து விட்டான். கண்விழித்து பார்த்த அஞ்சானா தேவி தன் முன்னால் இருந்த பழத்தை வணங்கி சாப்பிட்டாள். அப்போதே அவள் கர்பவதி ஆனாள். சிவனுக்கான பழம் என்பதனால் சிவ அம்சத்தோடும், வாயு பகவான் அதை கொடுத்ததினால் வாயு புத்திரனாகவும் அஞ்சனா தேவிக்கு பிறந்த அனுமான் கருதபடுகிறார்.

எனவே ஆஞ்சநேயர் சைவ வைஷ்ணவ ஒற்றுமை சின்னம் என்றே கருதத்தக்கவர் ஆவார். அவரை பக்தியோடு வணங்கினால் பக்தர்கள் வேண்டி விரும்பி கேட்கும் நியாயமான கோரிக்கைகள் எதை வேண்டும் என்றாலும் நிறை வேற்றி வைப்பார்.
அஞ்ஜநா நந்தனம் வீரம் ஜானகீ சோ'கநாசனம்
கபீச'மக்ஷ ஹந்தாரம் வந்தே லங்கா பயங்கரம்

ஜெய ராம் ஜெய ராம்.. ஜெய ஜெய சீதாராம்.

# மீம்ஸ்




"Recentஆ வெய்ட் குறைஞ்சுருப்பீங்களே தோழி.."

"ஏன் அப்படி கேட்குறீங்க?"

"1 மாசமா என் mind ல ஓடிட்டே இருக்கீங்களே.. அதான்.."😉🚶



## "நாம் ஏன் பெருமாளை 'நாராயணா' என்று அழைக்கிறோம்?"



இது ஒரு சாதாரண பெயர் இல்லை...
இது ஒரு மோக்ஷ நாமம்
— நம்மை இரட்சிக்கும் பரம சப்தம்!
விஷ்ணு புராணத்தில் சொல்கிறது:
› "நாராயணா" எனும் நாமத்தை ஒருமுறை கூட உச்சரித்தால், அதுவே பாபங்களை களையக் கூடியது!
இந்த நாமத்தில் இரு முக்கியமான அர்த்தங்கள் இருக்கின்றன:
நாரா = அனைத்து உயிர்களும் (நாமெல்லாம்)
அயண = இருக்கை, அடைக்கலம்


அதாவது, நாராயணன் என்பது: எல்லா உயிர்களுக்கும் ஆதாரமானவர்! நாமெல்லாம் சேர்ந்திருக்கும் இடம் அவர்தான்!

இந்த நாமம், நாம் யார்? எங்கு சேர்ந்திருக்க வேண்டும்? என்பதை நினைவூட்டுகிறது.
அதனால் தான்:
ஆழ்வார்கள் "நாராயணா" என்று அழைத்தார்கள்
தேவர்கள் கூட இந்த நாமத்தை ஜபிக்கிறார்கள்
பரமபதத்தை விரும்பும் யோகிகள் இந்த நாமத்தில் தியானிக்கிறார்கள்
இன்றே முயற்சி செய்யுங்கள்...
"நாராயணா... நாராயணா... நாராயணா..."
என்று மனதுடன் 12 முறை சொல்லிப் பாருங்கள்.
உங்கள் மனதில் அமைதி மலரும்... ஒரு விசித்திர சக்தி உங்களைத் தொட்டுச் செல்லும்!



# விடுகதை

| | |
|---|---|
| ஊரெல்லாம் சுத்துவான், ஆனால் வீட்டிற்குள் வரமாட்டான். அவன் யார்? | செருப்பு |
| தண்ணியில்லாத காட்டிலே அலைந்து தவிக்கும் அழகி. அவள் யார்? | ஒட்டகம் |
| ஊசி நுழையாத கிணற்றிலே ஒரு படி தண்ணீர்? | தேங்காய் |
| பாலாற்றின் நடுவே கறுப்பு மீன் தெரியுது அது என்ன? | கண்கள் |
| முதலெழுத்து தமிழின் அடுத்த எழுத்து கடை மூன்று சேர்ந்தால் ஒரு எண்ணிக்கை மொத்தத்தில் இது வருமுன் எச்சரிக்கை தேவை? | ஆபத்து |
| மண்ணுகுளே கிடப்பான் மங்களகரமானவன் அவன் யார்? | மஞ்சள் |



# ஜோக்ஸ்

"தலைவர் பலே கில்லாடின்னு எப்படி சொல்றே?'

"பின்னே அடிக்கடி ரெய்டு வந்த ஆபிஸரை தனக்கு சம்பந்தி ஆக்கிட்டாரே....."
##################################################

"தலைவர் தன் வாயாலயே கெடுத்துக்கிட்டாரா. எப்படி?"

"ரெய்டுல பிடிப்பட்ட லிஸ்டை காட்டின அதிகாரிங்க கிட்டே ஈசிஆர் ல உள்ள ரிசார்ட், கார்டன் எல்லாம் இதுல காணோமேன்னு கேட்டு இருக்கார்..."
##################################################



"தலைவரே உங்களுக்கு சிலை வைக்கலாம்னு இருக்கோம்....."
"உயிரோட இருக்குறவங்களுக்கு சிலை வைக்க கூடாதய்யா...."
"நீங்க தானே சொன்னீங்க.. நடைபிணமா வாழுறேன்னு...."

##################################

"கட்சியிலே சேர வந்த பெண்கள் தலைவரை போட்டு அடிச்சாங்க...?"

"பின்னே...என் இத்தனை வருச சர்விஸ்ல இப்படிப்பட்ட பிகர்களை பாத்ததில்லைன்னு ஜொள்ளு விட்டா சும்மா விடுவாங்களா...?"
##################################################

"கட்சிக்காக தொண்டர்களிடம் எதுவும் வாங்கியதில்லைன்னு தலைவர் அடிக்கடி சொல்றாரே..."

"ஆமாம்...வாங்குவது எல்லாம் அவர் குடும்பத்துக்காக தானே..."
##################################################

"தலைவரே...கட்சிக்கு ஒரு வாரிசு வந்துட்டு....."
"என்னய்யா சொல்றே?"
"உங்களுக்கு கொள்ளு பேரன் பிறந்திருக்கான்...."
##################################################

"நம்ம கட்சி தான் சுத்தமான கட்சின்னு தலைவர் அடிக்கடி சொல்றாரே...?"
"எதிர்கட்சிகாரங்க கழுவி கழுவி ஊத்துறதை தான் நாசுக்கா சொல்றார்....."
##################################################

"தலைவர் நாட்டுபற்று மிக்கவர்னு எப்படி சொல்றே...?"

"நாட்டு சரக்கு, நாட்டு கோழி, நாட்டுகட்டை இதுதான் அவருக்கு ரொம்ப பிடிக்கும்...! "
##################################################

# வாங்க சம்பாதிக்கலாம்



## வங்கியில் அதிகாரி பணி



எஸ். பி.ஐ.,-யில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
சர்க்கிள் ஆபிசர் பிரிவில் பெங்களூரு, கோல்கட்டா, லக்னோ தலா 200, காந்திநகர் 194, சென்னை 165 உட்பட மொத்தம் 2050 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பட்டப்படிப்பு
வயது: 21-30 (31.12.2025ன் படி)
அனுபவம்: 2 ஆண்டு பணி
தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, நேர்முகத்தேர்வு.
தேர்வு மையம்: சென்னை,கோவை, மதுரை உட்பட 14 இடங்கள்.
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம் : ரூ. 750. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 18.2.2026
விவரங்களுக்கு: sbi.bank.in

## தமிழக தபால் நிலையத்தில் 2019 காலியிடங்கள்



ஜி.டி.எஸ்., எனும் கிராம தபால் பணியாளர் (கிளை போஸ்ட் மாஸ்டர், உதவி போஸ்ட் மாஸ்டர்) பிரிவில் சென்னை 18, செங்கல்பட்டு 60, கடலூர் 56, கோவை 30, மதுரை 47, திருநெல்வேலி 50 உட்பட மொத்தம் 2019 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பத்தாம் வகுப்பு
வயது: 18-40 (16.2.2026ன் படி)
தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ.100 பெண்கள், எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 16.2.2026
விவரங்களுக்கு: app.indiapos t. gov.in/gdscandidate

## இயற்பியல் மையத்தில் வேலை



தேசிய இயற்பியல் மையத்தில் (என். பி.எல்.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
'டெக்னிக்கல் அசிஸ்டென்ட்' பிரிவில் மொத்தம் 18 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: டிப்ளமோ/பி.எஸ்சி., (இயற்பியல், வேதியியல்)
வயது: 18-28 (27.2.2026ன் படி)


தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு டிரேடு தேர்வு, எழுத்துத்தேர்வு
விண்ணப்பிக்கும் முறை: இணைய தளத்தில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
Recruitment & Assessment Section, CSIR- National Physical Laboratory, Dr. K.S.Krishnan Marg, New Delhi -- 110 012.
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 500. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 27.2.2026
விவரங்களுக்கு: nplindia.in

## ஐ.டி.ஐ., முடித்தவருக்கு வெடிமருந்து ஆலையில் வேலை




பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் நீலகிரி அருவங்காடு வெடிமருந்து தொழிற்சாலையில் அறிவிப்பு வெளியாகியுள்ளது.
சி.பி.டபிள்யு., பிரிவில் மொத்தம் 50 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: ஐ.டி.ஐ.,
வயது: 18-40 (10.2.2026ன் படி)
தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு, டிரேடு தேர்வு.
பணிக்காலம்: 4 வருடம்
விண்ணப்பிக்கும் முறை: இணைய தளத்தில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
The Chief General Manager, Cordite Factory, Aruvankadu, The Nilgiris District - 643 202
கடைசிநாள்: 10.2.2026
விவரங்களுக்கு: ddpdoo. gov.in

## அழைக்கிறது உயிரியல் மையம்



மத்திய அரசின் கீழ் செயல்படும் ஐதராபாத்தில் உள்ள 'செல்லுலர் & மூலக்கூறு உயிரியல் மையத்தில்' காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
'டெக்னீசியன்' பிரிவில் மொத்தம் 50 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பத்தாம் வகுப்பு/ ஐ.டி.ஐ.,
வயது: 18-28 (23.2.2026ன் படி)
தேர்ச்சி முறை: டிரேடு தேர்வு, எழுத்துத்தேர்வு.
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைனில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
The Section Officer (Recruitment Section), CSIR- Centre for Cellular and Molecular Biology, Uppal Road, Habsiguda, Hyderabad - 500 007, Telangana
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 500. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 23.2.2026
விவரங்களுக்கு: ccmb.res.in

## இஸ்ரோவில் விஞ்ஞானி வாய்ப்பு



இஸ்ரோ - ஸ்பேஸ் அப்ளிகேசன் சென்டரில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
'சயின்டிஸ்ட் இன்ஜினியர்' பிரிவில் இ.சி.இ., 14, கம்ப்யூட்டர் சயின்ஸ் 8, சிவில் 7, அக்ரிகல்சர் 6, ஓசோனோகிராபி 8 உட்பட மொத்தம் 49 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: எம்.எஸ்சி., / எம்.இ., / எம்.டெக்.,
வயது: 18-30 (12.2.2026ன் படி)
தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, நேர்முகத்தேர்வு.
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 750 பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 750
கடைசிநாள்: 12.2.2026
விவரங்களுக்கு: sac.gov.in

# பங்குச்சந்தை சரிவுடன் வர்த்தகம்! ஐடி, ரியல் எஸ்டேட் பங்குகள் சரிவு

பங்குச் சந்தைகள் நேற்று உயர்வுடன் வர்க்கமான நிலையில் இன்று(பிப். 4) சரிவுடன் வர்த்தகமாகி வருகின்றன.
மும்பை பங்குச் சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் இன்று காலை 83,252.06 என்ற புள்ளிகளில் தொடங்கிய நிலையில் காலை 11.20 மணியளவில் சென்செக்ஸ் 157.31 புள்ளிகள் குறைந்து 83,581.82 புள்ளிகளில் வர்த்தகமாகிறது.
அதேபோல தேசிய பங்குச் சந்தை குறியீட்டு எண் நிஃப்டி 21.30 புள்ளிகள் குறைந்து 25,706.25 புள்ளிகளில் வர்த்தகமாகி வருகிறது.
சென்செக்ஸில் இன்ஃபோசிஸ், எச்சிஎல் டெக், டிசிஎஸ், டெக் மஹிந்திரா, பஜாஜ் ஃபைனான்ஸ், பஜாஜ் ஃபின்சர்வ், எடர்னல் ஆகியவை பெரும் சரிவைச் சந்தித்தன. அதேநேரத்தில் எம்&எம், டாடா ஸ்டீல், பவர் கிரிட், ஐடிசி, என்டிபிசி, ஆர்ஜஎல், ஐசிஐசிஐ வங்கி, மாருதி சுசுகி, பார்தி ஏர்டெல் ஆகியவை அதிக லாபம் ஈட்டிய நிறுவனங்களாக உள்ளன.
நிஃப்டி மிட்கேப் குறியீடு 0.04 சதவீதமும் நிஃப்டி ஸ்மால்கேப் குறியீடு 0.58 சதவீதமும் அதிகரித்தது.
நிஃப்டியில் பெர்சிஸ்டன்ட் சிஸ்டம்ஸ், எல்டிஐ மைண்ட்ரீ, இன்ஃபோசிஸ், எச்சிஎல் டெக், டிசிஎஸ், எம்ஃபாசிஸ், டெக் எம் ஆகிய நிறுவனங்களின் சரிவால் நிஃப்டி ஐ.டி குறியீடு 6 சதவீதம் வரை சரிந்தது. அது தவிர, நிஃப்டி ரியல் எஸ்டேட் 0.8 சதவீதம் சரிந்து வர்த்தகமாகி வருகிறது.
அதேநேரத்தில் நிஃப்டி ஆட்டோ, மெட்டல் குறியீடுகள் தலா 1 சதவீதத்திற்கும் மேல் லாபம் ஈட்டின, தனியார் வங்கி குறியீடு 0.5 சதவீதம் உயர்ந்தது.
மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட நாளான பிப். 1 பங்குச்சந்தைகள் சரிவைச் சந்தித்த நிலையில் இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தால் நேற்று நல்ல லாபத்துடன் நிறைவு பெற்றன. தொடர்ந்து இன்று பங்குச்சந்தைகள் சற்று சரிவுடன் வர்த்தகமாகி வருகின்றன.



சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை புதன்கிழமை சவரனுக்கு ரூ. 5,040 உயர்ந்து விற்பனையாகிறது. கடந்த சில நாள்களாக சவரனுக்கு ரூ. 20,000-க்கும் அதிகமாக சரிவைச் சந்தித்து வந்த தங்கம் விலை, இந்தியா - அமெரிக்கா இடையேயான ஒப்பந்த அறிவிப்பு வெளியான நிலையில் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.
வாரத்தின் முதல்நாளான திங்கள் கிழமை தங்கம் விலையில் பெரியளவில் மாற்றமின்றி காணப்பட்ட நிலையில், நேற்று ஒரே நாளில் ரூ. 2,560 உயர்ந்தது. இன்று தங்கம் விலை மீண்டும் குறையும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், கிராமுக்கு ரூ. 630 அதிகரித்து ஒரு கிராம் ரூ. 14,900-க்கும் ஒரு சவரனுக்கு ரூ. 5,040 அதிகரித்து ஒரு சவரன் ரூ. 1,19,200-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.
முதல்முறையாக கடந்த டிசம்பர் மாதம் 15 ஆம் தேதி தங்கம் விலை ரூ.1 லட்சத்தை கடந்தது. அதன் பின்னர், சற்று குறைந்து தங்கம் விலையில் ஏற்ற, இறக்கங்கள் காணப்பட்டன. இந்த ஆண்டு தொடக்கம் முதலேயே தங்கம் விலை உச்சம் தொட்டு வருகிறது.






இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## விழுப்புரம் மாவட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா



விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் சிப்காட் மருந்தியல் பூங்காஅருகே நடைபெற்ற அரசு விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு உங்களிடம் ஸ்டாலின் பத்தாயிரம் முகாம்களில் பெறப்பட்ட மனுக்கள் மீது தீர்வு காணப்பட்ட பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார். இந்நிகழ்வில் செஞ்சி, மேல்மலையனூர், வல்லம் உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் உற்சாக வரவேற்ப்பு அளித்தனர். **அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## முளைப்பாரி, தீர்த்தக்குடம் ஊர்வலம்



கோவை காசி நஞ்சேகவுண்டன்புதூர் மாரியம்மன் கோவில் திருக்குட நன்னீராட்டு விழாவில் முளைப்பாரி, தீர்த்தக்குடம் ஊர்வலம் நடந்தது.

## மருதமலை முருகன் கோவில் தேர் திருவிழா



மருதமலை முருகன் கோவில் தேர் திருவிழாவில் அமைச்சர் சேகர்பாபு பங்கேற்றார்.

## நலத்திட்ட உதவி அமைச்சர் அன்பரசன் வழங்கினார்



செங்கல்பட்டு மாவட்டம், மறைமலை நகரில் நடந்த விழாவில் நலத்திட்ட உதவிகளை நேற்று அமைச்சர் அன்பரசன் வழங்கினார். கலெக்டர் சினேகா, எம்.எல். ஏக்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி, மாவட்ட வருவாய் அலுவலர் மா.கணேஷ் குமார், செங்கல்பட்டு சார் ஆட்சியர் மாலதி ஹெலன், , சார் ஆட்சியர் (பயிற்சி) நமச்சிவாயம், தனித்துணை ஆட்சியர் பரிமளா, மற்றும் பலர் பங்கேற்றனர்.

## துரைவைகோ கோரிக்கை மனு



மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை திருச்சி மதிமுக எம்.பி. துரைவைகோ சந்தித்து தொகுதி கோரிக்கை மனுக்களை அளித்தார்.

## அமைதி ஊர்வலம்



தூத்துக்குடியில் அண்ணா நினைவு தினத்தை முன்னிட்டு அமைச்சர் கீதாஜீவன் தலைமையில் நேற்று அமைதி ஊர்வலம் நடந்தது.

## காங்கிரசார் ஊர்வலம்



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தை மாற்றமின்றி தொடர வலியுறுத்தி நாகையில் மாவட்ட தலைவர் விவேக் தலைமையில் காங்கிரசார் ஊர்வலம் சென்றனர்.

## பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி



பெரம்பலூரில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை நேற்று அமைச்சர் சிவசங்கர் வழங்கினார். உடன் கலெக்டர் மிருணாளினி உள்ளார்.

## ஏட்டு டேவிட் ஜானுக்கு பாராட்டு



தேசிய தடகள போட்டியில் வெற்றிபெற்ற ஏட்டு டேவிட் ஜானுக்கு, குமரி மாவட்ட எஸ்.பி. ஸ்டாலின் பாராட்டு தெரிவித்தார்.

## விழிப்புணர்வு பேரணி



உலக கேன்சர் தினத்தை முன்னிட்டு நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி நுண்ணுயிரியல் துறை சார்பில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை மேயர் மகேஷ் துவக்கி வைத்தார்.

## நலத்திட்ட உதவி



குன்னூரில் 454 பயனாளிகளுக்கு ரூ.79 லட்சத்து 89 ஆயிரத்து 440 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அரசு கொறடா ராமசந்திரன் வழங்கினார். உடன் கலெக்டர் லட்சுமி பவ்யா உள்ளார்.



தூத்துக்குடி மாவட்டத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட பயனாளிகளுக்கு கலெக்டர் இளம்பகவத் தலைமையில் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் கீதாஜீவன் வழங்கினார்.

## அன்னதானம்



கடலூர் மாவட்டம் புவனகிரி ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் பூரம் நட்சத்திரத்தை முன்னிட்டு 500 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. ஆர்ய வைஸ்ய சமாஜம் புவனகிரி. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலாஸ்ரீதர் திருவண்ணாமலை**

## மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்திய ஸ்கூட்டர்



திருநெல்வேலியில் மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்திய ஸ்கூட்டர்களை சபாநாயகர் அப்பாவு நேற்று வழங்கினார்.உ டன் கலெக்டர் சுகுமார் உள்ளார்.

## ஈரோடு மாநகராட்சியில் தார் சாலைபணி



ஈரோடு மாநகராட்சியில் தார் சாலைபணிகளை அமைச்சர் முத்துசாமி துவக்கி வைத்தார். கலெக்டர் கந்தசாமி, அந்தியூர் பெரியசாமி எம்.பி.உடன் உள்ளனர்.

## நேர்காணல்



பாமக சார்பில் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களுடன் கட்சியின் நிறுவனர் ராமதாஸ் நேர்காணல் நடத்தினார்.

## உதவித்தொகைக்கான ஆணை



நாகர்கோவிலில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ்விண்ணப்பித்த பயனாளிகளுக்கு கலெக்டர் அழகுமீனா, சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உதவித்தொகைக்கான ஆணைகளை வழங்கினார்.உடன் மாநில உணவு ஆணையத் தலைவர் சுரேஷ்ராஜன், மேயர் மகேஷ், டிஆர்ஓ பூங்கோதை, துணை மேயர் லதா உள்ளனர்.

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு அடிக்கல்



அருப்புக்கோட்டை துலுக்கபட்டி ஊராட்சி அஞ்சம்பட்டி கிராமத்தில் புதிதாகக் கட்டப்பட உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு அடிக்கல் நாட்டி பணிகளை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் துவக்கி வைத்தார்.

## 2-வது நாளாக சாலை மறியல் போராட்டம்



மதுரையில் நேற்று 2-வது நாளாக சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்கள் 120 பேரை போலீசார் கைது செய்தனர்.

## காங்கிரசார் ஆர்ப்பாட்டம்




மக்களவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டது, தமிழக எம்பிக்கள் உட்பட 8 பேர் தற்காலிக நீக்கம் கண்டித்து திண்டுக்கல்லில் நேற்று காங்கிரசார் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## மாணவர் கார்த்திக் விக்னேஷூக்கு பரிசு



தென்னிந்திய அளவிலான கராத்தே போட்டியில் வெற்றி பெற்ற கோவில்பட்டி நாடார் காமராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவர் கார்த்திக் விக்னேஷூக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

## விவசாயிளுக்கு நிவாரணம்



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வறட்சியால் மகசூல் பாதிக்கப்பட்ட 4126 மா விவசாயிளுக்கு ரூ.8 கோடியே 97 லட்சத்து 91 ஆயிரத்து 132 மதிப்பிலான நிவாரணத்தை அமைச்சர் சக்கரபாணி வழங்கினார். அருகில் கலெக்டர் தினேஷ் குமார், கோபிநாத் எம்.பி.,, மதியழகன் எம்எல்ஏ உள்ளனர்.

## குழந்தை வேலப்பர் கோயில் தேரோட்ட விழா கொடியேற்றம்



கொடைக்கானல் அருகே பூம்பாறை குழந்தை வேலப்பர் கோயில் தேரோட்ட விழா கொடியேற்றம் நேற்று நடந்தது.

ரவுசு மணி

அறிவுரை கேட்டு திருந்தும் நபராக இருக்க வேண்டுமே ஒழிய அடிபட்டு திருந்தும் நபராக இருக்க கூடாது



ராஜகோபாலன்.J
பெங்களூரு

## சவுதி அரேபியா ஜித்தா புறநகர் பாலைவனத்தில் உணவின்றி தவித்த தமிழர்கள் மற்றும் மலையாளிகளுக்கு உணவு பொருட்கள் விநியோகம் செய்த இந்தியன்ஸ் வெல்ஃபேர் ஃபோரம்

**சவுதி அரேபியா, பிப்.05:**

*சவுதி அரேபியாஜித்தா புறநகர் பகுதியான அல்கும்ராவில் தமிழ்நாடு மற்றும் கேரளாவை சேர்ந்த 14 சகோதர சமுதாயத்தை சேர்ந்த சகோதரர்கள் உண்ண உணவின்றி 5 முதல் 7 மாத சம்பளமின்றி சிறை போன்ற ஒரு முகாமில் தவித்துக் கொண்டிருப்பதாக IWF தொண்டரணி செயலாளர் மங்களக்குடி தாஹா ரசூலுக்கு தகவல் கிடைத்தது.*

*உடனடியாக ஜித்தா மண்டல தலைவர் கீழை இர்ஃபான் மற்றும் நிர்வாகிகளின் ஆலோசனையின் பேரில் இருவர் மட்டும் இந்திய தூதரகத்தில் நடந்த ஓபன் ஹவுஸில் தமது புகாரை பதிவு செய்தார்கள்.*

*இதற்கான வாகன வசதி, உணவு, தூதரக வழிகாட்டல் ஆகியவற்றை IWF நிர்வாகிகள் பனங்காட்டூர் அப்துல் ஹலீம், நெல்லிக்குப்பம் அசரப் ஆகியோர் செய்தனர்.*



*மேலும் பாதிக்கப் பட்டவர்களுக்கு 15 நாட்களுக்கு தேவையான உணவு மற்றும் மளிகை பொருட்களை ஒரு சகோதரிடம் பெற்று கடந்த 30-1-26 நள்ளிரவு மங்களக்குடி தாஹா ரசூல் அவர்கள் இடத்திற்கு சென்று ஒப்படைத்தார்.*

*மேலும் கடந்த 1-2-26 அன்று IWF நிர்வாகிகள் கீழை இர்ஃபான், அப்துல் மஜீத், சையது இஸ்மாயில், அப்துல் ஹலீம், தாஹா ரசூல் ஆகியோர் சம்பந்தப்பட்டவர்களை நேரில் சென்று சந்தித்து விவரங்களை கேட்டறிந்து சட்ட ஆலோசனைகளை வழங்கி ஆறுதல் சொன்னார்கள் இதற்கான புகார் மற்றும் தூதரக வேலைகளை முடித்துக் கொடுத்து அவர்களை ஊருக்கு அனுப்பும் முயற்சி நடந்து கொண்டு இருக்கிறது. என்றும் சமுதாய பணியில்,*

*இந்தியன்ஸ் வெல்ஃபேர் ஃபோரம் (IWF)- தமுமுகவின் அயலக அணி, ஜித்தா மேற்கு மண்டலம், சவூதி அரேபியா.*

# சுற்றுலா: நாகப்பட்டினத்தில் சுற்றி பார்க்க வேண்டிய 7 முக்கிய இடங்கள்!



தமிழ்நாட்டில், நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்துள்ள இந்நகரம், சோழர்களின் பழமையான துறைமுக நகரமாகும். நாகப்பட்டினத்தை 'நாவல்பட்டினம்' என்றும் அழைப்பார்கள். 'நாவல்' என்றால் கப்பல் என்று பொருள். இங்கு மீன்பிடி தொழிலே பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாக விளங்குகிறது. நாகப்பட்டினத்தின் அருகில் இருக்கும் விமான நிலையம், ஜப்னா விமான நிலையமாகும். நாகப்பட்டினத்தில் நுழைந்ததுமே வங்காள விரிகுடா கடற்கரை நம்மை வரவேற்கிறது. எனவே நாகப்பட்டினத்தை கண்டிப்பாக சுற்றி பார்க்க வேண்டிய சுற்றுலாப்பயண இடங்களின் வரிசையில் வைத்து கொள்வது சிறந்ததாகும். இன்று நாகப்பட்டினத்தில் சுற்றிப்பாக்க வேண்டிய சுற்றுலாத் தலங்களைப் பற்றி காணலாம்.

1. காயாரோகணசுவாமி கோவில்

நாகப்பட்டினத்தில் அமைந்துள்ளது. சிவபெருமானுக்காக கட்டப்பட்ட இக்கோவிலில் காயாரோகணா சுவாமியும், நீலயத்தாக்சியும் அருள்பாலிக்கிறார்கள். இக்கோவிலை திராவிட கட்டிடக்கலை முறைப்படி கட்டியுள்ளார்கள். இங்கே பிரதோஷ பூஜை மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இக்கோவில் 6ஆம் நூற்றாண்டிலிருந்தே இருக்கிறது. நாயன்மார்களான அப்பர், சுந்தரர், சம்மந்தர் ஆகியோரால் இக்கோவில் புகழ்ந்து பாடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

2. சௌந்தரராஜ பெருமாள் கோவில்

சௌந்தரராஜ பெருமாள் கோவில் 2000 வருடம் பழமையான கோவிலாகும். இக்கோவில் நாகப்பட்டினத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற பெருமாளுக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட ஆன்மீக தளமாகும். இக்கோவிலை சோழர்கள் கட்டியதாகவும் பின்பு தஞ்சாவூர் நாயக்கர்களால் பராமரிக்கப்பட்டது என்றும் கூறப்படுகிறது. பழைய தமிழ் இலக்கிய நூல்களிலும் இக்கோவில் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

3. நாகூர் தர்கா

நாகப்பட்டினத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது நாகூர் தர்கா. இஸ்லாமியர்களின் மிகவும் பிரசித்திபெற்ற ஆன்மீகத் தலமாகும். இந்த தர்கா 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுப்பி முனிவரான சாகுல் ஹமீத் அவர்களின் கல்லறையின் மீதே கட்டப்பட்டிருக்கிறது. இங்கே இந்து முஸ்லிம் பாகுபாடின்றி தர்காவிற்கு வந்து வழிப்பட்டு செல்வது வழக்கம்.

4. வைத்தீஸ்வரன் கோவில்

வைத்தீஸ்வரன் கோவில் நவக்கிரக கோவில்களுள் ஒன்றாகும். நவகிரகங்களில் ஒன்றான செவ்வாய்யோடு தொடர்புடையது. இக்கோவிலை 11 ஆம் நூற்றாண்டில் சோழர்கள் கட்டினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. வைதீஸ்வரன் கோவில் நாடி ஜோசியத்திற்கு மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இங்கே சிவப்பெருமான் வைத்தீஸ்வரனாய் காட்சியளிக்கிறார். எப்பேர்ப்பட்ட நோயும் இங்கு வந்து வழிப்பட்டால் நீங்கிவிடும் என்பது நம்பிக்கை.

5. நெல்லுக்கடை மாரியம்மன் கோவில்

நாகப்பட்டினத்தில் நெல்லுக்கடை மாரியம்மன் கோவில் என்றால் மிகவும் பிரபலமாகும். இங்கே மாரியம்மன் பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். இவர் மிகவும் சக்தி வாய்ந்தவர் என்று மக்களால் நம்பப்படுகிறது. நெல்லுக்கடை மாரி அல்லது சமயபுரத்தால் என்றும் அழைக்கப்படுகிறார். நெல்லுக்கடை மாரியம்மன் குழந்தை வரம், பாதுகாப்பு, செல்வத்தை அருளுவாள் என்று பக்தர்கள் நம்புகிறார்கள்.

6. பூம்புகார் கடற்கரை

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள பூம்புகார் நகரத்தில் அமைந்துள்ள இயற்கையான மற்றும் பழமையான கடற்கரையே பூம்புகார் கடற்கரையாகும். பூம்புகார் கடற்கரை காவேரி ஆறிலிருந்து ஆரம்பித்து 3கிலோ மீட்டர் நெய்தவாசல் வரை நீண்டு செல்கிறது. சமீபமாக கருங்கற்களை கடற்கரையோரம் போட்டு வைத்தனர் மண் அரிப்பை தடுப்பதற்காக என்பது குறிப்பிடத்தக்கது. பூம்புகார் கடற்கரை தமிழக வரலாற்றில் முக்கிய இடம் பிடித்த கடற்கரையாகும். சித்ரா பௌர்ணமியை முக்கியமாக இங்கே கொண்டாடப்படுகிறது.

7. வேளாங்கண்ணி மாதா கோவில்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்துள்ள வேளாங்கண்ணி மாதா கோவில் கிறிஸ்தவர்கள் மட்டுமில்லாமல் எல்லா மத நம்பிக்கை கொண்ட மக்களும் வந்து வழிப்படக்கூடிய இடமாகவே உள்ளது. இங்கே ஆரோக்கிய அன்னையே பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

இந்த இடத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து வாட்டிகனில் இருக்கும் போப் ஆண்டவர் வேளாங்கண்ணியை புனித நகரம் என்று குறிப்பிட்டுள்ளார்.

நாகப்பட்டினத்தில் பிரபலமான பல இடங்கள் இருக்கின்றது. அதில் முக்கியமான 7 இடங்களை பற்றி தெரிந்துகொண்டோம். நாகப்பட்டினம் சுற்றுலாத்தலமாக மட்டுமில்லாமல் எல்லா மதத்தினரும் வந்து செல்லும் ஆன்மீகத்தலமாக இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## வேலைவாய்ப்பு கார்னர்

### பிஎஸ்என்எல் நிறுவனத்தில் 120 மூத்த நிர்வாகப் பயிற்சிப் பணியிடங்கள்!

மத்திய தகவல் தொடர்புத் துறை அமைச்சகத்தின்கீழ் செயல்பட்டு வரும் பிஎஸ்என்எல் நிறுவனத்தில் நிரப்பப்பட உள்ள 120 மூத்த நிர்வாகப் பயிற்சிப் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு தகுதியானவர்களிடம் இருந்து வரும் 7 ஆம் தேதிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விளம்பர எண். BSNLCO-11/12(11)/1/2025-RECTT-CO-Part (1)

பணி மற்றும் காலியிடங்கள் விவரம்:

பணி: Senior Executive Trainee (DR) Telecom

காலியிடங்கள்: 95

தகுதி: பொறியியல் துறையில் மின்னணுவியல் மற்றும் தொலைத்தொடர்பு, மின்னணுவியல், கணினி அறிவியல், தகவல் தொழில்நுட்பம், மின்சாரவியல் போன்ற பிரிவுகளில் ஏதாவதொன்றில் குறைந்தபட்சம் 60 சதவீத மதிப்பெண்களுடன் இளங்கலைப் பட்டம், தொழில்நுட்ப இளங்கலைப் பட்டம் அல்லது அதற்கு இணையான துறையில் பொறியியல் பட்டப்படிப்பு பெற்றிருக்க வேண்டும். சம்பளம்: மாதம் ரூ.24,900 - 50,500

பணி: Senior Executive Trainee (DR) Finance

காலியிடங்கள்: 25

தகுதி: பட்டயக் கணக்காளர் (சிஏ), செலவு மற்றும் மேலாண்மைக் கணக்கியல் (சிஎம்ஏ) முடித்திருக்க வேண்டும். வயதுவரம்பு: 7.3.2026 தேதியின்படி 21 முதல் 30 வயதிற்குள் இருக்க வேண்டும். சம்பளம்: மாதம் ரூ.24,900 - 50,500 ஆன்லைன் எழுத்துத் தேர்வு மற்றும் சான்றிதழ்கள் சரிபார்ப்பு அடிப்படையில் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர். எஸ்சி, எஸ்டி, மாற்றுத்திறனாளி பிரிவினர் ரூ.1,250, இதர அனைத்து பிரிவினரும் ரூ.2,500 செலுத்த வேண்டும். கட்டணத்தை ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை: https://bsnl.co.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். ஆன்லைன் எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள்: 29.3.2026 ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 7.3.2026

## வாளையாறு அருகே ரெயில் மோதி குட்டி யானை பலி



**பாலக்காடு, பிப்.5:**

கேரளம் மாநிலம், பாலக்காடு மாவட்டம், வாளையாறு வட்டப்பாறை வனப்பகுதியில் இன்று அதிகாலை 4.30 மணியளவில் யானைக் கூட்டம் தண்டவாளத்தைக் கடக்க முயன்ற போது, அதிலிருந்த மூன்றரை வயது மதிக்கத்தக்க ஆண் குட்டி யானை மீது அந்த வழியாக வந்த யஸ்வந்த்பூர் ரெயில் என்ஜின் மோதியதில் சம்பவ இடத்திலேயே குட்டி யானை பலியானது.

யானைகள் ரெயில் மோதி உயிரிழப்பதைத் தடுப்பதற்காக இந்தப் பகுதியில் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பக் கேமராக்கள் பொருத்தப்பட்ட பிறகு நடைபெற்ற முதல் விபத்து இதுவாகும். இந்த சம்பவம் குறித்து ரயில்வே அதிகாரிகள் கூறுகையில், வனப்பகுதியில் ரயில் மணிக்கு 45 கிலோமீட்டர் வேகத்திலேயே இயக்கப்பட்டது. தண்டவாளம் வளைவான பகுதியில் இருந்ததால் யானை கடப்பதை ஓட்டுநரால் முன்கூட்டியே கவனிக்க முடியவில்லை என்று தெரிவித்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த கேரள வனத்துறையினர் யானையின் உடலைக் கைப்பற்றி, உடல்கூறாய்வு பரிசோதனை மேற்கொண்டு விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த பகுதியில் யானைகள் நடமாட்டம் அதிகம் இருப்பதால், ரயில்களைக் கூடுதல் எச்சரிக்கையுடன் இயக்க வேண்டும் என இயற்கை ஆர்வலர்கள் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர்.


## ஒரே ஆண்டில் பீகாரில் 2.83 லட்சம் நாய்க்கடி சம்பவங்கள்

**பாட்னா, பிப்.5:**

பீகார் சட்டசபையில் அம்மாநில பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த 2024-2025 நிதியாண்டில், பீகார் முழுவதும் 2 லட்சத்து 83 ஆயிரத்து 274 நாய்க்கடி சம்பவங்கள் நடந்தன. இது, அதற்கு முந்தைய ஆண்டை விட சுமார் 39 ஆயிரம் அதிகம். இதன்மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 776 பேர் நாய்க்கடிக்கு உள்ளாவது தெளிவாகிறது. அதிகபட்ச மாக பாட்னா மாவட்டத்தில் 29 ஆயிரத்து 280 பேர் நாய்க்கடியால் பாதிக்கப்பட்டனர். 2வது பெரிய நோயாக தீவிர சுவாசத்தொற்றால் 31 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர். பாம்புக்கடியால் 138 பேர் பலியானார்கள் என ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை தரமான சிகிச்சை அளிப்பதில் முத்திரை பதித்துள்ளது: முதல்வர்



**சென்னை, பிப்.5:**

*அரசு மருத்துவமனைகளை நாடி வரும் ஏழை - எளிய மக்களின் எண்ணிக்கை நான்கரை ஆண்டுகளில் பன்மடங்கு அதிகரித்திருப்பது, மருத்துவக் கட்டமைப்பு, டாக்டர்கள் மீதான நம்பிக்கையைக் காட்டுகிறது என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.*

*கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:*

*கல்விக்கும் மருத்துவ சேவைக்கும் ஒதுக்கும் நிதி, செலவு அல்ல; வருங்காலச் சமுதாயத்துக்கான முதலீடு!*

*நம் திராவிட மாடலின் இருகண்களாய் விளங்கும் இத்துறைகளில் நாட்டுக்கே முன்னோடியான பல திட்டங்களை, பல கோடி மக்கள் பயனடையச் சிறப்புற நிறைவேற்றி வருகிறோம்.*

*இந்த வகையில், நாம் உருவாக்கிய கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை, அரிய அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக நடத்தி ஏழை, எளிய மக்களுக்குத் தரமான சிகிச்சை தருவதில் முத்திரை பதித்துள்ளது.*


*சிறிய நகரங்களிலும்கூட சிக்கலான அரசு மருத்துவமனைகளில் சவாலான அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டு உயிர் காக்கும் உயரிய பணியை, அர்ப்பணிப்பு மிகுந்த மருத்துவக் குழுவினர் செய்து வருவது நாளும் செய்திகளில் இடம்பெறுவது பெருமிதத்தை அளிக்கிறது!*

*அரசு மருத்துவமனைகளை நாடி வரும் ஏழை - எளிய மக்களின் எண்ணிக்கை கடந்த நான்கரை ஆண்டுகளில் பன்மடங்கு அதிகரித்து இருப்பது, அரசின் மருத்துவக் கட்டமைப்பின் மீதும் - மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப்பணியாளர்களின் திறமை மற்றும் அக்கறையின் மீதும் மக்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையைக் காட்டுகிறது.*

*மக்கள் தொண்டைத் தொய்வின்றித் தொடர்வோம்!*

*இவ்வாறு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.*

## சென்னையில் இருந்து மதுரை, திருச்சிக்கு சிறிய ரக விமான சேவை மீண்டும் தொடக்கம்




**சென்னை, பிப்.5:**

*சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து திருச்சி மற்றும் மதுரை இடையே இண்டிகோ ஏர்லைன்ஸ் நிறுவனம் ஏ.டி.ஆர். சிறிய ரக விமானங்களை இயக்கி வந்தது. திருச்சிக்கு சென்னையில் இருந்து 6 விமானங்களும், திருச்சியிலிருந்து சென்னைக்கு 6 விமானங்களும் என மொத்தம் 12 சேவைகள் செயல்பட்டன.*

*அதேபோல், சென்னையில் இருந்து மதுரைக்கு 8 விமானங்களும், மதுரையிலிருந்து சென்னைக்கு 8 விமானங்களும் என 16 ஏ.டி. ஆர். விமானங்கள் இயக்கப்பட்டு வந்தன. இந்த நிலையில், கடந்த டிசம்பர் 15-ந்தேதி முதல் திருச்சி மற்றும் மதுரைக்கு இயக்கப்பட்ட சிறிய ரக ஏ.டி.ஆர். விமான சேவைகளை இண்டிகோ நிறுவனம் ரத்து செய்து, அதற்கு பதிலாக பெரிய ரக ஏ20என் விமானங்களை இயக்கத் தொடங்கியது.*

*இந்த விமானங்களில் ஒரே நேரத்தில் 180 முதல் 184 பயணிகள் வரை பயணிக்க முடியும். ஆனால், இதனால் சென்னையிலிருந்து திருச்சிக்கு மற்றும் திருச்சியிலிருந்து சென்னைக்கு தலா 2 விமானங்களும், சென்னையிலிருந்து மதுரைக்கு மற்றும் மதுரையிலிருந்து சென்னைக்குதலா 3 விமானங்களும் மட்டுமே இயக்கப்பட்டன.*

*இந்த மாற்றத்தால் பண்டிகை, விடுமுறை காலங்களில் பயணிகள் கடும் அவதியடைந்தனர். இதனைத் தொடர்ந்து, மதுரைக்கு மீண்டும் சிறிய ரக விமானங்களை இயக்க இண்டிகோ முடிவு செய்தது. அதன்படி சென்னையில் இருந்து மதுரைக்கு 8 விமானங்களும், மதுரையிலிருந்து சென்னைக்கு 8 விமானங்களும் இயக்கப்படுகின்றன. மேலும், திருச்சிக்கு சென்னையில் இருந்து காலை 9.10 மணிக்கும், மாலை 4.30 மணிக்கும் இரண்டு பெரிய ரக விமானங்கள் இயக்கப்பட்டு வரும் நிலையில், பிற்பகல் 1.35 மணிக்கு கூடுதலாக ஒரு சிறிய ரக விமானம் இயக்கப்படுகிறது. இதனால் சென்னை-திருச்சி இடையிலான விமான சேவைகள் 6-ஆக உயர்ந்துள்ளன.*

## மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரெப்கோ நுண்கடன் நிறுவனம் ரூ.50 லட்சம் உதவித் தொகை

**கும்பகோணம், பிப்.5:**

ரெப்கோ வங்கியின் துணை நிறுவனமான ரெப்கோ நுண்கடன் நிறுவனம் கும்பகோணம் மாநகரில் அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய வளாகத்தைக் கட்டியுள்ளது. இதை ரெப்கோ வீட்டு வசதி நிறுவனத்தின் தலைவரும், ரெப்கோ வங்கிமற்றும் ரெப்கோ நுண்கடன் நிறுவனத்தின் இயக்குநருமாகிய சி. தங்கராஜு குத்து விளக்கேற்றி, பெயர் பலகையினை திறந்து வைத்தார். மேலும் ரூ. 50 லட்சம் மதிப்பீட்டிலான நுண்கடன் உதவிகளை மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஏ.ஜி.வெங்கடாசலம், இயக்குநர் எஸ்.ரத்தினசுந்தரம் வாழ்த்துரை வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் நிறுவனத்தின் துணைப் பொது மேலாளர் பிகேபி.பாலமுருகன் வரவேற்புரையாற்றினார். விழா ஏற்பாடுகளை உதவி பொது மேலாளர் ஆர். சீனிவாசன், துணைப் பொது மேலாளர் எஸ்.விமலுடன் இணைந்து மண்டல மேலாளர் ஜி.முரளிதரன், கோட்டமேலாளர்கள் பி.பாரதிராஜா, எஸ்.செல்வமுருகன், ஜே.தங்கம், முதன்மை மேலாளர் எஸ்.பழனிஆறுமுகம் மற்றும் துணை மேலாளர் ஆர்.நரேஷ், எஸ்.ஜீவானந்தம் செய்திருந்தனர்.

கிளை மேலாளர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

## கன்னியாகுமரிக்கு 3 நவீன புதிய பயணிகள் படகுகள்: அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு

**சென்னை, பிப்.5:**

*கன்னியாகுமரியில் படகு சவாரி வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் 3 நவீன புதிய பயணிகள் படகுகள் தயாராகி வருகிறது. அதை கொள்முதல் செய்து இயக்குவதற்கு, அமைச்சர் எ.வ.வேலு, கோவா கப்பல் கட்டும் தளத்திற்குச் சென்று, படகுகள் கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்தார்.*

*'முக்கடல் சங்கமிக்கும் குமரிமுனையில் இருந்து திருவள்ளுவர் சிலையை பார்ப்பதற்குச் சுற்றுலாப் பயணிகள் எளிதாக சென்றடையும் வகையில், படகு சவாரி வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் 3 புதிய பயணிகள் படகுகள் வாங்கப்படும்' என்று கன்னியாகுமரியில் நடந்த திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா நிகழ்ச்சியின்போது, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் நிதியில் 3 புதிய பயணிகள் படகுகள் வாங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, கோவாவில் உள்ள கப்பல் கட்டும் தளத்தில் இதற்கான கட்டுமானப் பணிகள் நடந்து வருகிறது. இந்த நிலையில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, கோவா கப்பல் கட்டும் தளத்திற்கு சென்று அங்கு நடந்து வரும் படகு கட்டுமானப் பணிகளை களஆய்வு செய்தார். அதன்படி, முதலாவதாக, பெருந்தலைவர் காமராஜர் பெயரிடப்பட்ட பயணிகள் படகு கட்டுமானப் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது. விரைவில் இதற்கான வெள்ளோட்டம் மற்றும் சோதனை ஓட்டம் நடைபெற இருக்கிறது. இம்மாத இறுதிக்குள் கன்னியாகுமரி துறைமுகத்தில், தமிழ்நாடு கடல்சார் வாரியத்திடம் பெருந்தலைவர் காமராஜர் பெயரிட்ட முதல் பயணியர் படகு ஒப்படைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளது.*

*மீதமுள்ள 'மார்சல் நேசமணி', 'ஜி.யு.போப்' ஆகிய 2 படகு கட்டுமானப் பணிகளை விரைவில் நிறைவு செய்து தருமாறு கட்டுமான நிறுவன அலுவலர்களிடம் அமைச்சர் எ.வ.வேலு அறிவுறுத்தினார். இந்த களஆய்வின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறைச் செயலாளர் இரா.செல்வராஜ், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் முதன்மைச் செயலாளர் ந.வெங்கடேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.*

# அடிப்படை ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளது; சபாநாயகருக்கு ராகுல் காந்தி பரபரப்பு கடிதம்



**புதுடெல்லி, பிப்.5:**

நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் மத்திய பட்ஜெட்டை கடந்த 1-ந்தேதி தாக்கல் செய்தார். தொடர்ந்து நேற்று முன்தினம் முதல் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெற்று வருகிறது. அப்போது ராணுவ முன்னாள் தலைமை தளபதி எம்.எம்.நரவனே எழுதி வெளிவராத புத்தகத்தின் கட்டுரையை மேற்கோள் காட்டி மக்களவையில் எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி பேசியதால் சபையில் கடும் அமளி ஏற்பட்டது.

இதனால் நாள் முழுவதும் சபை தள்ளி வைக்கப்பட்டது. இதை தொடர்ந்து ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் விவாதம் மக்களவையில் இன்று 2-வது நாளாக நடைபெற்றது. சபை கூடியதும் விவாதத்தில் பங்கேற்று பேசிய ராகுல் காந்தி, "சீன ஆக்கிரமிப்பு தொடர்பாக ராணுவ முன்னாள் தளபதி தெரிவித்த கருத்துகளை தெரிவிக்க முடியாமல் நான் தடுக்கப்பட்டேன். நரவனேவின் சுயசரிதை தொடர்பான அந்த கட்டுரையில் என்ன கூறப்பட்டுள்ளது என்பதை நான் உறுதிப்படுத்தி உள்ளேன். அது பாதுகாப்பு தொடர்பானது" என கூறினார்.

ராகுல் காந்தியின் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்த நாடாளுமன்ற விவகாரத்துறை மந்திரி கிரண் ரிஜிஜு, சபாநாயகரின் அனுமதி பெற்று ராகுல் காந்தி இது குறித்து பேச வேண்டும் என வலியுறுத்தினார். அதற்கு ராகுல் காந்தி, "நான் இந்தியாவின் எதிர்க்கட்சி தலைவர். யாருடைய அனுமதியும் எனக்கு தேவை இல்லை" என்றார். அதற்கு கிரண் ரிஜிஜு, "யாராக இருந்தாலும் சபாநாயகரிடம் அனுமதி பெற்றே பேசுகிறார்கள். சபாநாயகரின் அனுமதி இன்றி யாரும் பேசுவது இல்லை" என குறிப்பிட்டார்.

இந்த நிலையில், இவ்விவகாரம் தொடர்பாக சபாநாயகருக்கு ராகுல் காந்தி கடிதம் எழுதியுள்ளார். இது தொடர்பாக ராகுல் காந்தி தனது கடிதத்தில் கூறியிருப்பதாவது:- ஆளும் கட்சி கூறியதற்காக எதிர்க்கட்சி தலைவர் பேசுவதை தடுக்கும் சூழல் உருவாகியுள்ளது. பாதுகாப்பு தொடர்பான விவகாரங்களை நான் பேசக்கூடாது என்பதற்காக திட்டமிட்டு எதிர்க்கின்றனர். நான் இன்று அவையில் பேசும் போது, நான் சுட்டிக்காட்டி பேச இருந்த இதழ் கட்டுரையின் உண்மைத்தன்மையை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தினார். மரபுகளை மீறும் செயல் நீண்ட காலமாக உள்ள மரபு மற்றும் இதற்கு முந்தைய சபாநாயகர்கள் கடைபிடித்த விதிகள் என்னவென்றால், ஒரு அவையில் ஒரு ஆவணத்தைக் குறிப்பிட விரும்பும் உறுப்பினரே, அதைச் சரிபார்த்து, அதில் உள்ள கருத்துகளுக்கு பொறுப்பேற்க வேண்டும். இந்த நடைமுறையை நான் முறையாகப் பின்பற்றினேன்.

இந்த அடிப்படை ஜனநாயக உரிமைகளை மறுப்பது முன்னெப்போதும் இல்லாத ஒரு சூழலை உருவாக்கியுள்ளது. நாடாளுமன்ற வரலாற்றில் முதல் முறையாக அரசின் உத்தரவுக்கு இணங்கி, எதிர்க்கட்சி தலைவரை உரையாற்ற விடாமல் தடுக்கப்படுவதற்கு சபாநாயகர் நிர்பந்திக்கப்பட்டுள்ளார்" என்று தெரிவித்தார்.

# க்ரைம் கார்னர்

## கார் கண்ணாடிகளை உடைத்த ரஷ்ய சுற்றுலாப் பயணி: மதுரை போலீஸார் தீவிர விசாரணை

**மதுரை, பிப்.5:**

மதுரை: மதுரை அண்ணா பேருந்து நிலையம் அருகே சாலையில் அரைகுறை ஆடையுடன் ஒருவர் கையில் கத்தி, கற்களுடன் சுற்றித்திரிந்தார். அவர் திடீரென சாலையோரத்தில் நிறுத்தி இருந்த கார்கள் மீது கற்களை வீசி கண்ணாடிகளை உடைத்தார்.

வெளிநாட்டுக்கார தோற்றத்தில் இருந்த அவரது செயலைத் தடுக்க அப்பகுதியினர் முற்பட்டனர். ஆனால், தான் வைத்திருந்த கத்தியைக் காட்டி மிரட்டியதால் பொது மக்கள் அலறியடித்து ஓடினர். இதுகுறித்து தகவலறிந்த அண்ணா நகர் போலீஸார் அங்கு சென்று, அவரைப் பிடிக்க முயன்றனர். அப்போது, அரைகுறை ஆடையுடன் சுற்றிய அந்நபர் போலீஸாரிடமும் கத்தியைக் காட்டி மிரட்டினார். ஒரு வழியாக அவரை சுற்றி வளைத்துப் பிடித்த போலீஸார், அவரிடம் இருந்த கத்தியை பறித்தனர்.

பின்னர் அவர் மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் வைத்திருந்த பையில் சோதனையிட்டபோது, அவரது பாஸ்போர்ட் சிக்கியது.

அவர் ரஷ்ய நாட்டைச் சேர்ந்த ரிச்சர்ட் (51) என்பதும், சுற்றுலா விசாவில் மதுரை வந்திருப்பதும் தெரியவந்தது. மது போதையில் அவ்வாறு செய்தாரா அல்லது மனநிலை பாதிக்கப்பட்டவரா என்பது குறித்து அண்ணா நகர் போலீஸார் விசாரிக்கின்றனர்.

## உண்டியல் காணிக்கை எண்ணும்போது ராமநாத சுவாமி கோயிலில் பணம் திருடிய பெண் கைது

**ராமேசுவரம், பிப்.5:**

ராமேசுவரம் ராமநாத சுவாமி கோயிலில் உண்டியல் காணிக்கை எண்ணும் பணி நேற்று முன்தினம் நடைபெற்றது. திருச்சி மாவட்டம் துறையூரைச் சேர்ந்த பிரபாவதி (40) உண்டியல் காணிக்கை எண்ணும் பணியில் தன்னார்வலராகப் பங்கேற்றார். அவரது நடவடிக்கையில் சந்தேகமடைந்த கோயில் ஊழியர்கள், அவரை கோயில் அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று சோதனை செய்தனர். அப்போது, பிரபாவதி ரூ.1 லட்சத்தை திருடியது தெரியவந்தது. இதுகுறித்து கோயில் இணை ஆணையர் செல்லதுரை ராமேசுவரம் காவல் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில், பிரபாவதி கைது செய்யப்பட்டார்.

## சென்னையில் 2 நாட்களில் போதைப் பொருள் விற்பனை செய்த, கடத்திய 105 பேர் கைது

**சென்னை, பிப்.5:**

சென்னையில் நடைபெற்ற 2 நாள் சிறப்பு தணிக்கையில் போதைப் பொருள் விற்பனை மற்றும் கடத்தலில் ஈடுபட்ட 105 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னையில் போதைப் பொருள் கடத்தல், பதுக்கல் மற்றும் விற்பனையை முற்றிலும் தடுக்க போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு போலீஸார், காவல் நிலைய போலீஸாருடன் ஒருங்கிணைந்து, 2 நாட்கள் சிறப்பு தணிக்கையை மேற்கொண்டனர். இந்த தணிக்கை கடந்த 31, 1 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. அதன்படி, சென்னையில் உள்ள 12 காவல் மாவட்ட போலீஸாரும் அவர்கள் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் போதைப் பொருட்களுக்கு எதிரான கண்காணிப்பை முடுக்கிவிட்டனர். இதில் சட்ட விரோதமாக கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் வைத்திருந்தது மற்றும் விற்பனை செய்தது தொடர்பாக 57 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 105 பேர் கைது செய்யப்பட்டனர். இதில் 46 கஞ்சா வழக்குகள், 11 மாத்திரை வழக்குகள் அடங்கும். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 26 கிலோ கஞ்சா, போதைப் பொருளாக பயன்படுத்த மறைத்து வைத்திருந்த 1,888 வலி நிவாரண மாத்திரைகள் மற்றும் 4 மோட்டார்சைக்கிள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. போதை மற்றும் புகையிலை பொருட்களை கடத்தி வருபவர்கள், பதுக்கி வைப்பவர்கள் மற்றும் விற்பனை செய்பவர்களை கைது செய்ய, வாகனத் தணிக்கைகள், தீவிர ரோந்து பணிகள் மற்றும் சிறப்பு அதிரடி தணிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. இதுபோன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சென்னை காவல் ஆணையர் அருண் எச்சரித்துள்ளார்.

# விளையாட்டு செய்திகள்

## சிஎஸ்கே திருவள்ளூர் டிசிஏ இன்டர் காலேஜ் டி20 போட்டி: கோஜன் எஸ்பிடி அணி அபார வெற்றி

**திருவள்ளூர், பிப்.5:**

சிஎஸ்.கேதிருவள்ளூர் மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும் இன்டர் காலேஜ் டி20 கிரிக்கெட் போட்டி 202526 இரண்டாம் சுற்றுப் போட்டிகள் பரபரப்பாக நடைபெற்றன.

ஸ்ரீஹர் கல்லூரி அணி 20 ஓவர்களில் 196 ரன்கள் (8 விக்கெட்) குவித்தது. பி. பிரணவ் 76 ரன்கள் எடுத்து அணியின் ரன்னை உயர்த்தினார். 2வது களம் இறங்கிய நாசரேத் கல்லூரி 10.3 ஓவர்களில் 43 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. ஜெயா ஆர்ட்ஸ் கல்லூரி 20 ஓவர்களில் 150/4 ரன்கள் எடுத்தது. எம். மோகித் சிங் 55 ரன்கள் (நாட் அவுட்) எடுத்தார். வேல்டெக் ஆர்.எஸ். ஆர்ட்ஸ் அணி 40 ரன்களுக்கு சுருண்டது. மார்கிரிகோரியஸ் கல்லூரி 181/3 ரன்கள் குவித்தது. எம்.டி. ஆர்யன் சாஜித் 67 ரன்கள் (நாட் அவுட்) விளாசினார். ஜி.ஆர்.டி. ஐ.இ.டி அணி 116/7 ரன்கள் மட்டுமே எடுத்தது. மற்றொரு போட்டியில் முதலில் பேட்டிங் செய்த கிறிஸ்ட் ஆர்ட்ஸ் அணி, 13.2 ஓவர்களில் 50 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இந்து கல்லூரி அணியின் யேசுராஜ் சிறப்பாக பந்து வீசி 3 விக்கெட்டுகளை 6 ரன்களுக்கு கைப்பற்றினார். தொடர்ந்து பேட்டிங் செய்த இந்து கல்லூரி, எந்த விக்கெட்டையும் இழக்காமல் 5.4 ஓவர்களில் 51 ரன்கள் எடுத்து இலக்கை எளிதாக எட்டியது. சிவனேசன் 25 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் அணியின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றினார். மற்றொரு ஒருதலைப்பட்சமான போட்டியில், எல்என்ஜி அரசு கல்லூரி அணி 11.5 ஓவர்களில் 66 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. கோஜன் எஸ்பிடி அணியின் முகமது தன்வீர் அபாரமாக பந்து வீசி 5 விக்கெட்டுகளை 24 ரன்களுக்கு கைப்பற்றினார். அவருக்கு துணையாக கிஷோர் குமார் 3 விக்கெட்டுகளை 5 ரன்களுக்கு வீழ்த்தினார். இதனைத் தொடர்ந்து பேட்டிங் செய்த கோஜன் எஸ்பிடி அணி, 6.5 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு 69 ரன்கள் எடுத்து இலக்கை எளிதாக கடந்தது. இதன்மூலம் கோஜன்எஸ்பிடி அணி சுலபமான வெற்றியை பதிவு செய்தது.

## உலகத் தரவரிசை: ஜோகோவிச், ரைபகினா முன்னேற்றம்

**மெல்பர்ன், பிப்.5:**

ஆடவர் ஒற்றையர் பிரிவில் சாம்பியனான ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ் நம்பர் 1 வீரராகத் தொடர்கிறார். அரையிறுதியில் தோல்வி கண்ட இத்தாலியின் யானிக் சின்னரும் 2-ஆவது இடத்தை தக்கவைத்துக் கொண்டார்.

இறுதிச்சுற்று வரை வந்த செர்பிய நட்சத்திரம் நோவக் ஜோகோவிச், ஓரிடம் முன்னேறி 3-ஆவது இடத்தைப் பிடித்திருக்கிறார். அந்த இடத்திலிருந்த ஜெர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரெவ் 4-ஆவது இடத்துக்கு சறுக்கினார். அதேபோல் மகளிர் ஒற்றையர் பிரிவில், இறுதிச்சுற்றில் தோல்வி கண்டபோதும் பெலாரஸின் அரினா சபலென்கா முதலிடத்திலேயே தொடர்கிறார். காலிறுதியில் வீழ்ந்த போதிலும், போலந்தின் இகா ஸ்வியாடெக் 2-ஆவது இடத்தில் அப்படியே நீடிக்கிறார். ஆஸ்திரேலிய ஓபனில் முதல் முறையாக சாம்பியனாகியிருக்கும் கஜகஸ்தானின் எலனா ரைபகினா, 2 இடங்கள் முன்னேற்றம் கண்டு 3-ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். அந்த இடத்திலிருந்த அமெரிக்காவின் கோகோ கெ்ஃப் 5-ஆவது இடத்துக்கு சறுக்கியுள்ளார்.

# தவெக சார்பில் பிப்.6 முதல் விருப்ப மனு விநியோகம்!



**சென்னை, பிப்.5:**

தமிழக வெற்றிக் கழகம் சார்பில் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட விரும்புபவர்களுக்கு பிப்ரவரி 6-ஆம் தேதி முதல் விருப்ப மனு விநியோகம் செய்யப்படவுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் என்.ஆனந்த் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கையாகத் திகழும் தமிழக வெற்றிக் கழகம், அவர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான நல்லாட்சியை வழங்கும் நோக்கில் விஜய் தலைமையில் தீவிரமாகக் களமாடி வருகிறது.

இந்தக் களத்தில் தேர்தல் அரசியல் என்பது, மிகவும் அத்தியாவசியமான ஒன்று. ஆட்சி அதிகாரம் நம் கையில் இருந்தால் மட்டுமே தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை முழுவதுமாக நிறைவேற்ற முடியும். தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல முடியும்.

அந்த வகையில், வருகின்ற சட்டமன்றத் தேர்தலை நாம் எழுச்சியுடன் சந்திக்கின்றோம். தமிழகத்தின் 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் நம் வெற்றித் தலைவரின் ஆசி பெற்ற வேட்பாளராகப் போட்டியிட விரும்பும் கட்சி உறுப்பினர்கள் தங்களின் விருப்ப மனுக்களை அளிக்கலாம்.

இதற்கான விருப்ப மனுக்கள், வரும் 06.02.2026 வெள்ளிக்கிழமை முதல் 14.02.2026 சனிக்கிழமை வரை தவெக தலைமை நிலையச் செயலகத்தில் வழங்கப்படுகின்றன. பிப்ரவரி 6-ஆம் தேதி அன்று நண்பகல் 12 மணி முதல், விருப்ப மனுக்களைப் பெறலாம்.

இதர நாள்களில் காலை 10.00 மணி முதல், மாலை 06.00 மணி வரை விருப்ப மனுக்களைப் பெறலாம். விருப்பம் உள்ளவர்கள் அவற்றைப் பெற்று, அதில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் முழுமையாகப் பூர்த்தி செய்து, உரிய ஆவணங்களுடன் ஒப்படைக்க வேண்டும்' எனத் தெரிவித்துள்ளார்.

# மக்களவை ஒத்திவைப்பு! நாடாளுமன்றத்தில் எம்பிக்கள் போராட்டம்!




**புதுடெல்லி, பிப்.5:**

மக்களவையில் எதிர்க்கட்சிகளின் எம்பிக்கள் அமளியில் ஈடுபட்ட நிலையில், பகல் 1 மணிவரை ஒத்திவைக்கப்படுவதாக அவைத் தலைவர் அறிவித்துள்ளார். ல் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியை பேச அனுமதிக்காததற்கு எதிர்ப்பு தெரிவித்து செவ்வாய்க்கிழமை அமளியில் ஈடுபட்ட எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 8 எம்பிக்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர். இந்த நிலையில், எதிர்க்கட்சி எம்பிக்களின் இடைநீக்கத்துக்கு கண்டனம் தெரிவித்து நேற்று காலை மக்களவை கூடியவுடன் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து அவை நடவடிக்கைகளை பகல் 12 மணிவரை ஒத்திவைப்பதாக அவைத் தலைவர் ஓம் பிர்லா அறிவித்தார். இதனிடையே, நாடாளுமன்றத்துக்கு வளாகத்தில் இடைநீக்கம் செய்யப்பட்ட தமிழக எம்பிக்கள் மாணிக்கம் தாகூர், சு.வெங்கடேசன் உள்ளிட்ட 8 பேரும், பிரதமர் மோடி சமரசத்துக்கு உள்ளாகிவிட்டார் என்ற பதாகையுடன் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

# உப்பு அதிகமானால் ஆபத்து: அமைச்சர் நட்டா எச்சரிக்கை

**புதுடெல்லி, பிப்.5:**

மாநிலங்களவையில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு, மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜே.பி.நட்டா அளித்த பதிலில் கூறியிருப்பதாவது:

உணவில் உப்பு அதிகமாக சேர்த்துக் கொள்வதால் உயர் ரத்த அழுத்தம், இதயம் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படுவதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சில் கண்டறிந்துள்ளது.

இதையடுத்து 'சரியான உணவை உண்பது' என்ற இயக்கத்தை தேசிய அளவில் முன்னெடுத்துள்ளோம்.

இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர ஆணையத்தின் மூலம் இந்தத் திட்டம் அமல்படுத்தப்படுகிறது.

இதன் மூலம் அதிக உப்பை தவிர்ப்பது, சத்தான உணவு உண்பதை வழக்கமாக்குவது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவது போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தினசரி உணவில் படிப்படியாக உப்பு, சர்க்கரை, கொழுப்பு நிறைந்த உணவை குறைப்பது போன்றவை குறித்து ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# வணிகச் செய்திகள்

## ரூபாயின் மதிப்பு 11 காசுகள் சரிந்து ரூ. 90.43 ஆக நிறைவு!

**சென்னை, பிப்.5:**

இந்தியா-அமெரிக்க வர்த்தக ஒப்பந்த அறிவிப்பைத் தொடர்ந்துநேற்றையவர்த்தகத்தில்ஏற்பட்ட பெரும்ஏற்றத்திற்குப் பிறகு, நிறுவனங்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் டாலரை வாங்கியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், இந்திய ரூபாயின் மதிப்பு 11 காசுகள் சரிந்து ரூ.90.43ஆக முடிவடைந்தன. வங்கிகளுக்கு இடையேயான அந்நியச் செலாவணிச் சந்தையில், இந்திய ரூபாய் மதிப்பு ரூ.90.35 என்ற அளவில் வர்த்தகத்தைத் தொடங்கி, தொடக்கத்தில் உயர்ந்து ரூ.90.26 ஆகவும், பிறகு சரிந்து ரூ.90.54 ஆக வர்த்தகமானது. இறுதியில், ரூபாய் முந்தைய நாள் முடிவடைந்த நிலையிலிருந்து 11 காசுகள் சரிந்து ரூ.90.43 என்ற அளவில் நிலைபெற்றது.

## பங்குச் சந்தை உயர்வுடன் நிறைவு!

**மும்பை, பிப்.5:**

தகவல் தொழில்நுட்பத் துறையின் முன்னணிப் பங்குகளில் ஏற்பட்ட கடும் சரிவு, சந்தைகளின் உயர்வைத் தடுத்ததால், சென்செக்ஸ் மற்றும் நிஃப்டி குறியீடுகள் சற்றே உயர்ந்தன. வர்த்தக நேரத்தின் போது, சென்செக்ஸ் அதிகபட்சமாக 83,947.53 புள்ளிகளுடனும் பிறகு குறைந்தபட்சமாக 83,119.95 புள்ளிகளையும் தொட்டு, 827.58 புள்ளிகள் வரை ஏற்ற இறக்கத்துடன் காணப்பட்டது.

வர்த்தக முடிவில், சென்செக்ஸ் 78.56 புள்ளிகள் உயர்ந்து 83,817.69 புள்ளிகளாகவும், நிஃப்டி 48.45 புள்ளிகள் உயர்ந்து 25,776 புள்ளிகளாக நிலைப்பெற்றது.

# மதுரை, திருவனந்தபுரத்தில் தண்டவாள பராமரிப்பு பணி: தென்மாவட்ட ரெயில்கள் மாற்றுப்பாதையில் இயக்கம்



**மதுரை, பிப்.5:**

தென்னக ரெயில்வேக்கு உட்பட்ட மதுரை மற்றும் திருவனந்தபுரம் ரெயில்வே கோட்டங்களில் தண்டவாள பராமரிப்பு பணிகள் நடந்து வருகின்றன. இதற்காக அந்த பாதையில் இயக்கப்படும் தென்மாவட்ட ரெயில்களின் போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, குருவாயூர்-சென்னை எக்ஸ்பிரஸ் ரெயில் (வ.எண்.16128) வருகிற 11-ந் தேதி, 13, 14-ந் தேதி, 16-ந் தேதி, 18, 19-ந் தேதி, 21-ந் தேதி, 23-ந் தேதி முதல் 28-ந் தேதி வரை, அடுத்த மாதம் 3-ந் தேதி ஆகிய நாட்களில் எர்ணாகுளம், ஆலப்புழை வழியாக செல்வதற்கு பதிலாக கோட்டயம், செங்கனச்சேரி, திருவல்லா, செங்கனூர் வழியாக மாற்றுப்பாதையில் இயக்கப்படும்.

மறுமார்க்கத்தில், சென்னை-குருவாயூர் எக்ஸ்பிரஸ் ரெயில் (வ.எண்.16127) நாளை (வியாழக்கிழமை), வருகிற 7-ந் தேதி, 12-ந் தேதி, 17-ந் தேதிகளில் சுமார் ஒரு மணிநேரம் தாமதமாக இயக்கப்படும்.

நாகர்கோவில்-மும்பை எக்ஸ்பிரஸ் ரெயில் (வ.எண்.16352) நாளை, 8-ந் தேதி, 12-ந் தேதி, 15-ந் தேதி, 19-ந் தேதி, 22-ந் தேதி மற்றும் 26-ந் தேதிகளில் விருதுநகரில் இருந்து அருப்புக்கோட்டை, மானாமதுரை, காரைக்குடி வழியாக திருச்சி செல்லும்.

கன்னியாகுமரி-ஹவுரா வாராந்திர எக்ஸ்பிரஸ் ரெயில் (வ.எண்.12666) வருகிற 7-ந் தேதி, 14-ந் தேதி, 21-ந் தேதி மற்றும் 28-ந் தேதிகளில் விருதுநகரில் இருந்து மானாமதுரை, காரைக்குடி வழியாக திருச்சி செல்லும். குருவாயூர்-சென்னை எக்ஸ்பிரஸ் ரெயில் (வ.எண்.16128) நாளை, 5-ந் தேதி முதல் 8-ந் தேதி வரை, 11-ந் தேதி முதல் 15-ந் தேதி வரை, 18-ந் தேதி முதல் 22-ந் தேதி வரை, 25-ந் தேதி முதல் 28-ந் தேதி வரை விருதுநகரில் இருந்து மதுரைக்கு பதிலாக மானாமதுரை, காரைக்குடி வழியாக திருச்சி செல்லும். கன்னியாகுமரி-ஐதராபாத் வாராந்திர சிறப்பு ரெயில் (வ.எண்.07229) வருகிற 6-ந் தேதி, 13-ந் தேதி, 20-ந் தேதி மற்றும் 27-ந் தேதிகளில் விருதுநகரில இருந்து மானாமதுரை, காரைக்குடி வழியாக திருச்சி செல்லும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊராட்சி தலைவர் பதவிக்கு போட்டியிட மகளை கொன்ற தந்தை கைது - மகாராஷ்டிர அதிர்ச்சி



**ஹைதராபாத், பிப்.5:**

தெலங்கானா மாநிலம், நிஜாமாபாத் மாவட்டம், ஏஆர்பி கேம்ப் கால்வாயில் கடந்த ஜனவரி 29ம் தேதி அடையாளம் தெரியாத 6 வயது சிறுமியின் உடல் கரை ஒதுங்கியது. எடபல்லி போலீஸார் அந்த சிறுமியின் உடலை கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காக நிஜாமாபாத் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அதன் பின்னர், அந்த சிறுமியின் புகைப்படத்தை பல ஊர்களுக்கு அனுப்பியதோடு, பல ஊர்களில், காவல் நிலையங்களில் போஸ்டர் அடித்தும் ஒட்டினர். இந்நிலையில், கடந்த 2 நாட்களுக்கு முன்னர், எடபல்லி போலீஸ் நிலையத்தில் கான்ஸ்டபிளாக பணியாற்றும் சுதீர் என்பவருக்கு, மகாராஷ்டிராவில் உள்ள அவரது உறவினர்கள் போன் செய்தனர். அப்போது அவர்கள், இறந்து போன சிறுமியின் விவரங்களை எடுத்துக் கூறினார். இதனை தொடர்ந்து நிஜாமாபாத் போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை தொடங்கினர்.

அந்த விசாரணையில் பல திடுக்கிடும் உண்மைகள் வெளி வந்துள்ளன. மகாராஷ்டிர மாநிலத்தில் சமீபத்தில் உள்ளாட்சி தேர்தல் நடந்து முடிந்தது. இதில் கேரூர் பகுதியை சேர்ந்த பாண்டுரங்கா என்பவரும் ஊராட்சி மன்ற தலைவராக போட்டியிட ஆசைப்பட்டார். ஆனால், அவருக்கு 2 மகள்கள், ஒரு மகன் உள்ளது. 3 பிள்ளைகளின் தகப்பன் என்பதால் தேர்தல் விதிமுறைகளின்படி போட்டியிட முடியாது என தானே தீர்மானம் செய்து, மூத்த மகளான பிராச்சியை (6) கொலை செய்து விடுவது என தீர்மானித்தார். அதன்படி, கடந்த மாதம் மகள் பிராச்சியை தனது பைக்கில் உட்கார வைத்துக் கொண்டு, சுமார் 60 கி.மீ. தூரத்தில் உள்ள தெலங்கானா மாநிலம், நிஜாமாபாத் மாவட்டத்துக்கு வந்தார். அங்கு ஏஆர்பி கேம்ப் கால்வாயில் மகளை அடித்து தூக்கி போட்டுவிட்டு அதே பைக்கில் மீண்டும் தனது ஊருக்கு சென்று விட்டார்.

காயம் காரணமாக பிராச்சி கால்வாயில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தார்.

அவரது சடலம் சமீபத்தில் கரை ஒதுங்கியது. இதையடுத்து பிராச்சியின் தந்தை பாண்டுரங்காவை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

## இந்தியாவில் 2025-ல் 19 விமான விபத்துகள்: மத்திய அரசு தகவல்

**புதுடெல்லி, பிப்.5:**

நாடாளுமன்ற மேலவையில் கேள்வி ஒன்றிற்கு மத்திய விமான போக்குவரத்து துறை இணை மந்திரி முரளிதர் மொஹல் அளித்துள்ள எழுத்துப்பூர்வ பதிலில், நாட்டில் 2025-ம் ஆண்டில் 19 விமான விபத்துகள் மற்றும் தீவிர சம்பவங்கள் நடந்துள்ளன.

இதுதொடர்பாக விமான விபத்து புலனாய்வு வாரியம் விசாரித்து வருகிறது. அதில், ஒரு தீவிர சம்பவம் பற்றிய விசாரணை நிறைவடைந்து உள்ளது என தெரிவிக்கப்பட்டு உள்ளது. அதன் அறிக்கை விமான விபத்து புலனாய்வு வாரியத்தின் வலைதளத்தில் வெளியிடப்பட்டு உள்ளது. மற்ற விமான விபத்துகள் மற்றும் தீவிர சம்பவங்கள் பற்றி தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வருகின்றது என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மராட்டியத்தில் உள்ளாட்சி தேர்தலை முன்னிட்டு பிரசாரம் செய்வதற்காக துணை முதல்-மந்திரி அஜித் பவார், சிறிய ரக சார்ட்டர்டு விமானத்தில் கடந்த 28-ந்தேதி காலை புறப்பட்டு சென்றார். விமானம் பாராமதி நகரில் ஓடுதளத்தில் காலை 8.48 மணியளவில் தரையிறங்கியபோது திடீரென விபத்தில் சிக்கியது.

இதில், விமானம் தீப்பிடித்து எரிந்தது. இந்த துயர சம்பவத்தில் சிக்கி, அஜித் பவார் மற்றும் அவருடன் ஒன்றாக பயணித்த பாதுகாப்பு அதிகாரி, 2 விமானிகள் மற்றும் விமான ஊழியர் ஒருவர் என மொத்தம் 5 பேரும் பலியானார்கள். அவருடைய மறைவுக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு, பிரதமர் மோடி, மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா உள்பட பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களும் இரங்கல் தெரிவித்தனர்.

## 24 மணி நேரத்தில் 4,000 ‘இ-சைக்கிள்’ விநியோகம்: கின்னஸ் சாதனை படைத்த ஆந்திர முதல்வர்

**திருப்பதி, பிப்.5:**

முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் குப்பம் தொகுதியில் கிராமங்களில் பணியாற்றும் அரசுப் பணியாளர்கள், பெண்கள், மாணவர்களுக்கு இ-சைக்கிள்கள் (மோட்டார் பொருத்தப்பட்ட மிதிவண்டி) வழங்கும் திட்டத்தை ஆந்திர மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. கான்பூர் ஐஐடி-யுடன் இணைந்து இந்த சைக்கிள் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் உள்ள பேட்டரியை சூரிய சக்தி மூலம் ‘சார்ஜ்’ செய்து கொள்ள முடியும். ‘சூப்பர் சைக்கிள்’ என்று பெயரிடப்பட்டுள்ள இத்திட்டத்தில் கடந்த சில நாள்களுக்கு முன்பு குப்பம் தொகுதிக்குள்பட்ட பகுதியில் இ-சைக்கிள்களை ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு விநியோகித்தார். அப்போது, ஜனவரி 31-ஆம் தேதி ஒரே நாளில் மட்டும் 3,742 இ-சைக்கிள்களை அவர் பயனாளர்களுக்கு வழங்கினார். இதன்மூலம் ஒரே நாளில் சுமார் 4,000 பேருக்கு இ-சைக்கிள் வழங்கியவர் என்று அவர் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்தார்.

மொத்தம் 5,555 இ-சைக்கிள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. மகளிர் சுயஉதவிக் குழுவினர், அங்கன்வாடி ஊழியர்கள், ஆஷா திட்டப் பணியாளர்கள், கிராம நிர்வாக ஊழியர்கள், மாணவர்களுக்கு இத்திட்டத்தில் இ-சைக்கிள் வழங்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய சந்திரபாபு நாயுடு, ‘இந்த சூப்பர் சைக்கிள்கள் பொருளாதார சுதந்திரத்தையும், தன்னம்பிக்கையையும் அதிகரிக்கும். இதில் எந்தச் செலவும் இல்லாமல் பேட்டரியை சார்ஜ் செய்து கொள்ளும் வசதி உள்ளது. சிவபுரம் பகுதியில் சுமார் 3 கி.மீ.தொலைவுக்கு சந்திரபாபு நாயுடு தலைமையில் இ-சைக்கிள் பேரணியும் நடைபெற்றது.

## வெளிநாடுகளில் இருந்து எவ்வளவு தங்கம் வரி இல்லாமல் கொண்டு வரலாம்? புதிய விதிகள் அமல்




**புதுடெல்லி, பிப்.5:**

வெளிநாடுகளில் இருந்து இந்தியா வருகை தரும் இந்திய குடிமக்கள் விமானங்களிலோ, கப்பல்களிலோ விலைமதிப்புமிக்க பொருட்களை எடுத்து வந்தால் அதற்கு சுங்க வரி செலுத்துவது கட்டாயம் ஆகும். எனினும், குறிப்பிட்ட அளவு மதிப்பு வரையிலான பொருட்களுக்கோ தங்க ஆபரணங்களுக்கோ வரி விதிக்கப்படாது. அதாவது தற்போது வரை ரூ.50 ஆயிரம் மதிப்புள்ள தங்க நகைகளை பயணிகள் தங்கள் உடைமைகளில் கொண்டு வரலாம். அதற்கு எந்த வரியும் கிடையாது. இந்த லக்கேஜ் விதிகளில் புதிய மாற்றத்தை கொண்டு வந்துள்ளது. மாற்றப்பட்ட இந்த புதிய விதி பிப்ரவரி 2 முதல் அமலுக்கு வந்துள்ளது.

இந்த புதிய விதிகளின்படி இந்தியாவில் வசிப்பவர்கள் அல்லது இந்திய சுற்றுலாப் பயணிகள் அல்லது சுற்றுலா விசா இன்றி பிற விசாவில் வரும் வெளிநாட்டவர்கள் ரூ.75 ஆயிரம் மதிப்புள்ள பொருட்களை சுங்க கட்டணம் இன்றி எடுத்து வரலாம். வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் என்றால் ரூ.25 ஆயிரம் மதிப்புள்ள பொருட்கள் வரை வரியின்றி எடுத்து வரலாம். உடைமை விதிகள் 2016ல் மத்திய நேரடி வரிகள் வாரியம் திருத்தம் கொண்டு வந்துள்ளது. இந்த புதிய திருத்தப்பட்ட விதிகள்தான் நேற்றுமுன்தினம் முதல் அமலுக்கு வந்துள்ளன. இந்திய குடிமக்களாக இருந்து வெளிநாட்டில் ஓராண்டுக்கு மேல் வசிப்பவராக இருந்தால், 40 கிராம் வரையிலான தங்கத்தை வரியின்றி எடுத்து வர அனுமதி அளிக்கப்படும். ஆண் என்றால் 20 கிராம் வரை நகைகளுக்கு சுங்க வரி விலக்கு அளிக்கப்படும் என்று மத்திய நேரடி வரிகள் வாரியம் தெரிவித்துள்ளது.

## எரிபொருள் ஸ்விட்சில் மீண்டும் பிரச்சினை: போயிங் 787 விமானங்களை ஆய்வு செய்கிறது ஏர் இந்தியா




**புதுடெல்லி, பிப்.5:**

ஏர் இந்தியா நிறுவனம் தனது போயிங் 787 ட்ரீம் லைனர் விமானங்களின் எரிபொருள் கட்டுப்பாட்டு ஸ்விட்சுகளை தீவிர சோதனைக்கு உட்படுத்தி வருகிறது. அகமதாபாத் விமான விபத்துக்கு பிறகு இரண்டாவது முறையாக இந்த சோதனை மேற்கொள்ளப்படுகிறது.

கடந்த 2025 ஜூன் 12-ம் தேதி குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இருந்து லண்டன் நோக்கி புறப்பட்ட ஏர் இந்தியா போயிங் விமானம் அடுத்த சில நிமிடங்களில் விபத்துக்குள்ளானது. இதில் 260-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து தொடர்பான முதற்கட்ட விசாரணையில், அந்த விமானத்தின் எரிபொருள் கட்டுப்பாட்டு சுவிட்ச் (எப்சிஎஸ்) அணைக்கப்பட்ட நிலையில் இருந்ததும் இதனால் எரிபொருள் சப்ளை நின்றதுமே விபத்துக்கு காரணம் என தெரியவந்தது.

இதையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏர் இந்தியா நிறுவனம் தனது அனைத்து போயிங் 787 விமானங்களின் எரிபொருள் கட்டுப்பாட்டு ஸ்விட்சுகளை தீவிர சோதனைக்கு உட்படுத்தியது. இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை ஏர் இந்தியா நிறுவனத்தின் போயிங் 787 டிரீம் லைனர் விமானம் (ஏஐ-123) லண்டனில் பெங்களூரு வந்தது. இதன் பிறகு விமான இன்ஜினை மீண்டும் ‘ஸ்டார்ட்’ செய்தபோது எரிபொருள் கட்டுப்பாட்டு ஸ்விட்ச் தானாகவே 2 முறை ‘Run’ நிலையில் இருந்து ‘Cut-off’ நிலைக்கு மாறியது. இதையடுத்து ஸ்விட்ச் செயல்பாட்டில் கோளாறு இருப்பதாக விமானி புகார் அளித்ததை தொடர்ந்து அந்த விமானம் தற்காலிகமாக பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்டது.

இந்நிலையில் ஏர் இந்தியா நிறுவனம் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் தனது அனைத்து போயிங் 787 மற்றும் 737 விமானங்களின் எரிபொருள் கட்டுப்பாட்டு ஸ்விட்சுகளை தீவிர சோதனைக்கு உட்படுத்தி வருகிறது.

மேலும் இந்த விவகாரத்தை விமான உற்பத்தி நிறுவனமான போயிங் நிறுவனத்திடம் ஏர் இந்தியா நிறுவனம் கொண்டு சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மணிப்பூர் முதல்வராகும் யும்நாம் கெம்சந்த்? முடிவுக்கு வருகிறது குடியரசுத் தலைவர் ஆட்சி



**புதுடெல்லி, பிப்.5:**

மணிப்பூர் பாஜக சட்டப்பேரவைக்குழு தலைவராக யும்நாம் கெம்சந்த் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதன்மூலம், அந்த மாநிலத்தின் புதிய முதல்வராக அவர் பதவியேற்கவும், குடியரசுத் தலைவர் ஆட்சி முடிவுக்கு வந்து புதிய அரசு அமையவும் வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

மணிப்பூரில் மைதேயி, குகி சமூகத்தினர் இடையிலான மோதல் காரணமாக 2 ஆண்டுகளுக்கும் மேலாக வன்முறை நிலவியது. இதில் சுமார் 260 பேர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்தனர். இந்த வன்முறை காரணமாக கடந்த ஆண்டு பிப்.9-ஆம் தேதி மாநில முதல்வர் பதவியை பிரேன் சிங் ராஜிநாமா செய்தார். இதைத் தொடர்ந்து, அந்த ஆண்டு ஆகஸ்ட் வரை 6 மாதங்களுக்கு குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது. பின்னர், மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்ட குடியரசுத் தலைவர் ஆட்சி, வரும் பிப்.12-ஆம் தேதியுடன் நிறைவடைய உள்ளது.

இந்நிலையில், புது தில்லியில் உள்ள பாஜக தலைமையகத்தில் மணிப்பூர் பாஜக எம்எல்ஏக்களின் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அந்த மாநில முன்னாள் முதல்வர் பிரேன் சிங், சட்டப்பேரவைத் தலைவர் சத்யபிரதா சிங், பாஜக மாநிலத் தலைவர் சாரதா தேவி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இதில் மணிப்பூர் பாஜக சட்டப்பேரவைக் குழுத் தலைவராக மைதேயி சமூகத்தைச் சேர்ந்த மாநில முன்னாள் அமைச்சர் யும்நாம் கெம்சந்த் தேர்வு செய்யப்பட்டார். சட்டப்பேரவைக்குழுதலைவராகத் தேர்வு செய்யப்பட்டதன் மூலம், மணிப்பூரின் புதிய முதல்வராக அவர் பதவியேற்க வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

துணை முதல்வர் நெம்சா கிப்ஜென்?: மணிப்பூர் துணை முதல்வராக குகி சமூகத்தைச் சேர்ந்த பாஜக முன்னாள் பெண் அமைச்சர் நெம்சா கிப்ஜென் தேர்வு செய்யப்பட வாய்ப்புள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

## செல்போன் எண்ணை ‘பிளாக்’ செய்த காதலன்.. ஆத்திரத்தில் குத்திக் கொன்ற கொடூரம்

**சத்தீஸ்கர், பிப்.5:**

சத்தீஸ்கரில் 22 வயது இளம்பெண், தனது செல்போன் எண்ணை பிளாக் செய்த காதலனை வீடு தேடி சென்று மார்பில் கத்தியால் குத்தி கொன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

நீண்ட காலமாக காதலித்து வந்த இருவருக்கும் இடையே சமீப காலமாக கருத்து வேறுபாடு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதனையடுத்து, காதலன் தனது செல்போன் எண்ணை பிளாக் செய்ததாக தெரிகிறது.

இதனால் மன உளைச்சலுக்கும் கடும் கோபத்திற்கும் உள்ளான காதலி, காதலன் தன்னை விட்டு வேறு பெண்ணுடன் பழகுவதாக கருதி இத்தகைய கொடூர செயலில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த சம்பவம் குறித்து தகவல் போலீசார், வழக்குப்பதிவு செய்து அப்பெண்ணை கைது செய்துள்ளனர். விசாரணை நடந்து வருகிறது. இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## இந்தியா - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக விவாதிக்கக் கோரி திமுக எம்.பி.க்கள் நோட்டீஸ்

**புதுடெல்லி, பிப்.5:**

நாடாளுமன்றபட்ஜெட் கூட்டத்தொடர் கடந்த மாதம் 28-ந்தேதிஜனாதிபதிஉரையுடன்தொடங்கியது. இதையடுத்து கடந்த 1-ந் தேதி 2026-27-ம் நிதியாண்டுக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. நேற்று முன்தினத்தில் இருந்து ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதானவிவாதம்நடந்துவருகிறது. இந்தநிலையில்,இந்தியா - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக விவாதிக்க கோரி திமுக எம்.பி.க்கள் நோட்டீஸ் வழங்கி உள்ளனர். மக்களவையில் டி.ஆர்.பாலு மற்றும் மாநிலங்களவையில் திருச்சி சிவா ஆகியோர் நோட்டீஸ் வழங்கி உள்ளனர். இதனிடையே நேற்று சீனா ஊடுருவல் பற்றி பேச அனுமதி மறுத்ததால் மக்களவையில் அத்துமீறியதாக தமிழக எம்.பி.க்கள் உள்பட 8 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டனர். அவர்கள் கூட்டத்தொடர் முழுவதும் பங்கேற்க தடை விதிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## மும்பை விமான நிலையத்தில் 2 விமானங்கள் உரசல்; பெரும் விபத்து தவிர்ப்பு

**மும்பை, பிப்.5:**

மராட்டிய மாநிலம் மும்பை விமான நிலையத்தில் இருந்து கோவைக்கு நேற்று முன்தினம் இரவு ஏர் இந்தியா விமானம் புறப்பட தயாரானது. விமானத்தில் பயணிகள் அனைவரும் ஏறியதை தொடர்ந்து விமானம் புறப்பட ஓடுதளத்திற்கு சென்றுகொண்டிருந்தது.

அப்போது, ஐதராபாத்தில் இருந்து மும்பை வந்த இண்டிகோ விமானம் ஓடுதளத்தில் இருந்து விமானத்தை நிறுத்தும் பகுதிக்கு சென்றுகொண்டிருந்தது. அப்போது, இரு விமானங்களின் இறக்கைகளும் உரசின. இதில், விமானங்களின் இறக்கைகள் சேதமடைந்தன. இந்த சம்பவத்தால் விமான நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது. இந்த சம்பவத்தில் இரு விமானங்களில் இருந்த பயணிகள் யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

## மூணாறில் இருந்து திருவனந்தபுரம், கோழிக்கோடுக்கு புதிய பஸ் சேவை




**மூணாறு, பிப்.5:**

சர்வதேச சுற்றுலா தலமாக மூணாறு விளங்குகிறது. கேரள மாநிலத்தில் பல்வேறு ஊர்களில் இருந்தும், வெளிமாநிலங்களில் இருந்தும் தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் மூணாறுக்கு வருகை தருகின்றனர். இந்தநிலையில் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக மூணாறில் இருந்து திருவனந்தபுரம், கோழிக்கோடு ஆகிய நகரங்களுக்கு புதிய அரசு பஸ் சேவை நேற்று முதல் தொடங்கியுள்ளது. அதன்படி, மூணாறில் இருந்து அதிகாலை 3 மணிக்கு திருவனந்தபுரத்துக்கும், காலை 8.30 மணிக்கு கோழிக்கோடுக்கும் அரசு பஸ்கள் இயக்கப்படுகிறது. இதில், திருவனந்தபுரம் செல்லும் அரசு பஸ் கோட்டயம் வழியாக இயக்கப்படுகிறது. இந்த பஸ் இரவு 10.30 மணிக்கு மறுமார்க்கமாக திருவனந்தபுரத்தில் இருந்து மூணாறுக்கு புறப்படுகிறது. அதேபோல் கோழிக்கோடுவில் இருந்து காலை 8.30 மணிக்கு மூணாறுக்கு மற்றொரு பஸ் புறப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## திருமண தோஷ பரிகாரம்... பூஜை முடிந்ததும் காத்திருந்த அதிர்ச்சி

**புதுச்சேரி , பிப்.5:**

புதுச்சேரி அருகே திருமண தோஷம் நீங்க பரிகாரம் செய்வதாக கூறி, பெண்ணிடமிருந்து ஒரு சவரன் நகை மற்றும் 18ஆயிரத்து 600 ரூபாய் ரொக்க பணத்தை திருடி சென்றபோலிஜோசியர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டனர். கோமளவள்ளி என்பவரது வீட்டிற்கு சென்ற நெல்லையை சேர்ந்த சின்னராசு மற்றும் மிக்கில் சமையல் புளியில் நகைகளை வைத்துப் பூஜை செய்வது போல நாடகமாடி, நகை மற்றும் பணத்தை திருடிசென்றுள்ளனர். கோமளவள்ளி தரப்பில் அளிக்கப்பட்ட புகாரின்பேரில் வழக்குப்பதிவு செய்த போலீசார் சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் இருவரையும் கைது செய்து நகை மற்றும் பணத்தை பறிமுதல் செய்தனர்.

# நீ சிரித்து நான் பார்த்ததில்லை! எப்ஸ்டீன் பற்றி கேட்ட பெண் செய்தியாளருக்கு டிரம்ப் பதில்!




**வாஷிங்டன், பிப்.5:**

பாலியல் குற்றவாளியுடன் தொடர்புடைய முக்கியமான ஆவணங்களை, அமெரிக்க நீதித்துறை வெளியிட்டிருக்கும் நிலையில், அது பற்றி தனியார் செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த பெண் செய்தியாளர் கவலை தெரிவித்ததுடன், கேள்வி எழுப்பினார்.

அமெரிக்காவில் சிறுமிகளைக் கடத்தி பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய குற்றச்சாட்டில் கைதான பெரும் பணக்காரர் ஜெஃப்ரி எப்ஸ்டீன், சிறையிலேயே மரணமடைந்த நிலையில், அவரது வழக்கு விசாரணை ஆவணங்கள் வெளியாகியிருப்பது, பாலியல் துன்புறுத்தலால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியிருப்பதாகவும் அவர் கூறிப்பிட்டார். சாட்சியங்களின் நேர்காணல்கள் மறைக்கப்பட்டிருப்பதாக டிரம்ப் பதிலளித்ததற்கு, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்ற நினைக்கிறார்களே அது பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்று பெண் செய்தியாளர் கேள்வி எழுப்பினார். தொடர்ந்து எப்ஸ்டீன் பற்றிய கேள்விகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் பேசிய டிரம்ப், இது தவிர நாட்டு நலன் தொடர்பான கேள்விகளை எழுப்பலாம். நாட்டின் சுகாதாரத் துறை மற்றும் மக்களின் நலன் குறித்து பேசலாம் என்றார். இதனைக் கேட்டதும் பெண் செய்தியாளர் கேள்வி எழுப்ப எத்தனித்தபோது, நீங்கள் மிக மோசமான செய்தியாளர், உங்களைப் போன்றவர்களால்தான் உங்கள் செய்தி நிறுவனத்துக்கு நல்ல பெயர் கிடைக்கவில்லை. நீங்கள் சிரித்து நான் பார்த்ததில்லை என்றுதான் நினைக்கிறேன், கடந்த பத்து ஆண்டுகளில் ஒரு முறை கூட நீங்கள் சிரித்து உங்களை நான் பார்த்ததில்லை. நீங்கள் ஏன் சிரிக்க மாட்டீர்கள் என்றால், நீங்கள் உண்மையைப் பேசுவதில்லை என்று டிரம்ப் கூறினார்.

இந்த சம்பவம் குறித்து, தனியார் ஊடக நிறுவனம் விளக்கம் கொடுத்துள்ளது. தங்களது செய்தியாளர், ஒரு சிறப்பானவர், எப்போதும் உண்மையான ஆழமான செய்திகளை தொகுத்து வழங்குவார் என்று குறிப்பிட்டுள்ளது. செய்தியாளரின் கேள்விக்கு பதிலளிக்காமல், அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் டிரம்ப் பேசியது ஓவல் அலுவலகத்தில் செய்தியாளர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது.

# சீன அதிபருடன் ரஷிய அதிபர் புதின் உரையாடல்!



**மாஸ்கோ, பிப்.5:**

மேற்குலக நாடுகளின் தலைவர்கள் சமீபகாலமாக சீனாவுடனான உறவுகளை மேம்படுத்தும் முயற்சியாக அந்நாட்டு அதிபர் ஷி ஜிங்பிங்கை நேரில் சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், சீனா உடன் முக்கிய உறவுகளை மேம்படுத்துவதற்காக அதிபர் ஜிங்பிங்குடன் ரஷிய அதிபர் புதின் காணொலி மூலம் புதன்கிழமை (பிப். 4) உரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உக்ரைன் மீதான ரஷியாவின் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் சூழலில் இந்த உரையாடல் சர்வதேச அளவில் கவனம் பெற்றுள்ளது. இருப்பினும், இந்த உரையாடல் குறித்த முழுமையான தகவல் இதுவரை வெளியிடப்படவில்லை. கடந்த சில நாள்களுக்கு முன்பு சீனா சென்றிருந்த ரஷியாவின் பாதுகாப்பு ஆணையத்தின் செயலாளர் செர்ஜீ ஷோய்கு, அந்நாட்டு வெளியுறவு அமைச்சகத்தின் மூத்த அதிகாரி வாங் யீயை சந்தித்து உரையாடினார். ஏற்கெனவே, கனடா பிரதமர் மார்க் கார்னி மற்றும் பிரிட்டன் பிரதமர் கியெர் ஸ்டார்மர் ஆகியோர் சீனாவுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டு அதிபர் ஜிங்பிங்குடன் முக்கிய பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர். மேலும், வரும் நாள்களில் ஜெர்மனியின் தலைவரும் சீனாவுக்குச் செல்லத் திட்டமிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# காசாவில் இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் - 17 பாலஸ்தீனியர்கள் உயிரிழப்பு

**காசா, பிப்.5:**

காசாவில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பினர் இடையே 2 ஆண்டுகளாக நடந்து வந்த போரால் இதுவரை 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் 1 லட்சத்து 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்துள்ளனர். அதே சமயம், காசாவில் ஆயிரக்கணக்கான மக்கள் உணவு, இருப்பிடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இல்லாமல் திண்டாடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.



இதற்கிடையில் போர்நிறுத்தம் கொண்டு வருவது தொடர்பான சர்வதேச சமூகத்தின் அழுத்தத்திற்கு நடுவே, அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் 20 அம்ச திட்டத்தை ஏற்று, இஸ்ரேல்-ஹமாஸ் தரப்பினர் காசாவில் போர் நிறுத்தம் செய்ய ஒப்புக்கொண்டன.

பின்னர் டிரம்ப் தலைமையில் எகிப்தில் நடந்த அமைதி மாநாட்டில் முதற்கட்ட போர் நிறுத்த ஒப்பந்தமும் கையெழுத்தானது.

ஆனால் அதன் பிறகும் இஸ்ரேல் ராணுவத்தினர் காசாவில் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். கடந்த ஆண்டு அக்டோபர் 10-ந்தேதி போர்நிறுத்தம் அமலுக்கு வந்ததிலிருந்து, இஸ்ரேல் ராணுவத்தின் தாக்குதல்களில் இதுவரை 530-க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், காசாவில் இஸ்ரேல் ராணுவம் மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உள்பட 17 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்தனர். அதே சமயம், ஆயுதக்குழுவினர் நடத்திய துப்பாக்கி சூடு தாக்குதலில் இஸ்ரேல் ராணுவ வீரர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அரேபிய கடலில் பரபரப்பு: அமெரிக்கப் போர்க்கப்பலை நெருங்கிய ஈரான் ட்ரோன் சுட்டு வீழ்த்தப்பட்டது

**வாஷிங்டன், பிப்.5:**

அரபிக் கடலின் சர்வதேச கடல் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த அமெரிக்காவின் 'யுஎஸ்எஸ் ஆபிரகாம் லிங்கன்' விமானம் தாங்கிக் கப்பலை நோக்கி அச்சுறுத்தும் வகையில் வந்த ஈரானின் ஷாஹித்-139 ட்ரோனை அமெரிக்கப் படைகள் சுட்டு வீழ்த்தியுள்ளது. பலமுறை எச்சரித்தும் அந்த ட்ரோன் கப்பலை நோக்கி வேகமாக வந்ததால், தற்காப்பு நடவடிக்கையாக இந்த அதிரடி எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஈரான் எல்லையிலிருந்து சுமார் 800 கி.மீ தொலைவில் அமெரிக்கக் கப்பல் இருந்தபோது இந்த சம்பவம் நடைபெற்றது என்றும் கப்பலிலிருந்து ஏவப்பட்ட அதிநவீன எப்-35சி போர் விமானம், அந்த ட்ரோனை நடுவானிலேயே சுட்டு வீழ்த்தியது என்றும் இந்தச் சம்பவத்தில் அமெரிக்க வீரர்கள் எவருக்கும் காயமோ அல்லது உபகரணங்களுக்குச் சேதமோ ஏற்படவில்லை எனவும் பென்டகன் உறுதிப்படுத்தியுள்ளது.

# உறைய வைக்கும் பனி...மக்களை ஈர்க்கும் "ஐஸ் ப்ளோட்டிங்" விளையாட்டு

**மாஸ்கோ, பிப்.5:**

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் வெப்பநிலை மைனஸ் 20 டிகிரி செல்சியசுக்கு கீழ் சென்ற நிலையில், 'ஐஸ் ப்ளோட்டிங்' என்ற புதிய குளிர்கால விளையாட்டில் பலர் கலந்து கொண்டனர்.

சிவப்பு நிறத்தில் விண்வெளி உடை போல் தோற்றமளிக்கும் வெப்பத்தை தக்கவைக்கும் சிறப்பு உடைகள் அணிந்து, உறைபனிக்கு நடுவே நீர்நிலையில் மிதந்தனர்.



இந்த 'ஐஸ் ப்ளோட்டிங்' விளையாட்டில் 20 முதல் 40 நிமிடங்கள் வரை உறைய வைக்கும் நீரில் மிதக்கலாம்.

ஸ்காண்டிநேவியா மற்றும் வட ரஷ்யாவில் பிரபலமான இந்த விளையாட்டு, இந்த ஆண்டு மாஸ்கோ நகரில் முதல் முறையாக அறிமுகமாகியுள்ளது.

# அமெரிக்க வெளியுறவுத்துறை மந்திரியுடன் ஜெய்சங்கர் சந்திப்பு

**வாஷிங்டன், பிப்.5:**

3 நாட்கள் அரசு முறை பயணமாக மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் அமெரிக்கா சென்றுள்ளார். அவர் இன்று அமெரிக்க வெளியுறவுத்துறை மந்திரி மார்கோ ருபியோவை சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது வர்த்தகம், இருநாட்டு உறவு உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருவரும் ஆலோசனை நடத்தினர். குறிப்பாக, அரிய வகை கனிமங்கள் தொடர்பா இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.



இந்திய பொருட்கள் மீது விதிக்கப்பட்ட 50 சதவீத வரியை அமெரிக்கா 18 சதவீதமாக குறைத்தது.

அதேவேளை, குறிப்பிட்ட அமெரிக்க பொருட்கள் மீதான வரியை இந்தியா முழுமையாக ரத்து செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதேவேளை, இதுகுறித்து மத்திய அரசு அதிகாரப்பூர்வ தகவல் இதுவரை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரான் அதிகாரிகளுக்கு பிரிட்டன் தடை

**கீவ், பிப்.4:**

ஈரான் உள்துறை அமைச்சர் எஸ்கந்தர் மோ மெனி, இஸ்லாமிய புரட்சிகர காவல்படை தளபதி கள், அதிகாரிகள் என 10 நபர்கள் மற்றும் 1 நிறுவ னத்தின் மீது பிரிட்டன் அரசு தடை விதித்துள்ளது. பிரிட்டன் அரசு ஏற்கெனவே பல ஈரான் தலைவர்கள், அதிகாரிகள் மற்றும் நிறுவனங்கள் என 550-க்கும் மேற்பட்ட தடைகளை விதித்துள்ளது. இதில் இஸ்லாமிய புரட்சிகர காவல்படை (IRGC) முழுமையா கத் தடை செய்யப்பட்டுள்ளது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் சமீப நாட்களில் ஈரான் மீது தடை நடவடிக்கைகளை அதிகரித்து வரும் சூழலில் பிரிட்டனும் தடை விதித்துள்ளது.

# கச்சா எண்ணெய்: இந்தியா எதுவும் தெரிவிக்கவில்லை: ரஷ்யா தகவல்



இந்திய அரசு தங்களிடம் இருந்து கச்சா எண் ணெய் வாங்குவதைநிறுத்துவதுகுறித்துஇதுவரைஎதுவும்கூறவில்லை என்று ரஷ்ய அரசு தகவல் தெரிவித்துள்ளது. இந்தியா-அமெரிக்க ஒப் பந்த அறிவிப்பை வெளியிட்ட டிரம்ப் ரஷ்ய கச்சா எண்ணெய்யை வாங்குவதை நிறுத்துவதாக இந்தி யா தன்னிடம் கூறியுள்ளதாகவும் அறிவித்திருந் தார். இந்நிலையில் டிரம்ப் அறிவிப்புக்கு மாறாக ரஷ்ய, இந்தியா அவ்வாறு கூறவில்லை என தெரி வித்திருப்பது குறிப்பிடத்தக்கது. ரஷ்ய ஜனாதிபதி மாளிகை செய்தித்தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் இதனை கூறியுள்ளார்.

# ஈரான் அணுசக்தி விவகாரம் தொடர் பேச்சுவார்த்தை

ஈரான் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு லக நாடுகளுக்கு இடையே அணுசக்தி விவ காரத்தில் நீடித்து வரும் பதற்றத்தைத் தணிக்க, ரஷ்யா தொடர்ந்து முயற்சி செய்து வருவதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. ஈரான் மீது சில நாடுகளுக்கு உள்ள கவலைகளைப் போக்க ஈரா னிடம் இருக்கும் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை, ரஷ்யாவுக்கே கொண்டு வந்து சுத்திகரிக்கவோ அல்லது பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவோ தாங்கள் தயாராக இருக்கிறோம். இது தொடர்பாக ஈரான், அமெரிக்கா உள்ளிட்ட அனைத்து நாடுகளுடனும் நாங்கள் பேசி வருகிறோம் என ரஷ்யா தெரிவித்துள்ளது.

# காசாவில் படுகாயமடைந்தவர்களை ஏற்க ஐ.நா வேண்டுகோள்

காசா மற்றும் எகிப்திற்கு இடையிலான ர*பா எல்லை மீண்டும் திறக்கப் பட்டுள்ள நிலையில், காசாவிலிருந்து வரும் நோயாளிகளை அதிக நாடுகள் ஏற்க முன்வர வேண்டும் என்று ஐ.நா மனிதாபிமான அமைப்பு கள் கோரிக்கை விடுத்துள்ளன. இஸ்ரேல் ராணு வத்தின் குண்டு வீச்சு, நிவாரணப் பொருட்களுக் கான தடை ஆகியவற்றின் காரணமாக காசாவில் சிகிச்சை பெற முடியாமல், வெளியே அழைத்துச் செல்லப்பட வேண்டிய நிலையில் 4,000 குழந்தைகள் உட்பட 18,500-க்கும் மேற்பட்டநோயாளிகள் உள்ளனர்.

# காங்கோ சுரங்க விபத்து பலியானவர்களுக்கு அஞ்சலி



காங்கோவில் உள்ள டாண்டலியம் சுரங் கத்தில் கடந்த வாரம் ஏற்பட்ட நிலச்சரி வில் சிக்கி பெண்கள், குழந்தைகள், தொழிலாளர் கள் என 200 க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந் தனர். காணாமல் போன பலரின் நிலை இன்னும் தெரியவில்லை. இந்தத் துயர சம்பவத் தைத் தொடர்ந்து, உயிரிழந்தவர்களின் குடும்பத்தி னர் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர். இந்த சுரங்கத்தை ருவாண்டாவில் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டுள்ள எம்23 என்ற ஆயுதக்குழு கைப்பற்றி கனிமங்களை சுரண்டி விற்பனை செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

# ஜப்பானில் கடும் பனிப்பொழிவு: 35 ஆக உயர்ந்த பலி: 393 பேர் காயம்!

**பீஜிங், பிப்.5:**

ஜப்பானில் வரலாறு காணாத வகையில் கடும் பனிப்பொழிவு நிலவி வருவதால் நாடு முழுவதும் இதுவரை 35 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த இரண்டு வாரங்களாக வடக்கு ஜப்பானில் கடுமையான பனிப்பொழிவு நிலவி வருகின்றது. புதன்கிழமை நிலவரப்படி 15 மாகாணங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுமார் 6.5 அடி வரை பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. பனி தொடர்பான பல்வேறு சம்பவங்களில் தொடர்ந்து உயிரிழப்புகள் பதிவாகி வருகின்றது.

வடக்கு ஜப்பானின் நீகாட்டா மாகாணத்தில் 12 பேரும், உவோனுமா நகரில் வீட்டின் கூரை இடிந்து விழுந்து 50 வயதுடைய முதியவர் உள்பட இதுவரை 35 பேர் பலியாகியுள்ளனர். அங்குக் குடியிருப்புகள், அலுவலக கட்டடங்கள் என எங்கும் பனி சூழ்ந்து காணப்படுகிறது.

சீதோஷ்ண நிலை மோசமாகக் காணப்படும் அதே சூழலில் அங்கு மின்வெட்டும் நிலவுவதால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். வாகனங்கள் இயக்க முடியாத நிலையில் பலரும் நடந்தே செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.



மேலும், அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்காமல் போவதால் சிரமத்தையும் சந்தித்து வருகின்றனர். பள்ளிகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. பொது போக்குவரத்தும் முற்றிலும் தடைப்பட்டுள்ளது. கட்டடங்களின் மேற்கூரையின் படிந்திருக்கும் பனியை அகற்றும் பணியின்போதும், பனியில் புதைந்தும் இதுவரை 30 பேர் உயிரிழந்துள்ளனர், அதிக உயிரிழப்பானது அமோரி மாகாணத்தில் பதிவாகியுள்ளது.

நாடு முழுவதும் 393 பேர் காயமடைந்துள்ளனர். இதில் 126 பேர் பலத்த காயமடைந்துள்ளனர். அவர்களில் 42 பேர் நீகாட்டாவைச் சேர்ந்தவர்கள். பதினான்கு வீடுகள் சேதமடைந்துள்ளன, இதில் மூன்று நீகாட்டாவிலும், எட்டு அமோரி மாகாணத்திலும் பதிவாகியுள்ளது. தீ மற்றும் பேரிடர் மேலாண்மை முகமையின்படி, முந்தைய ஆண்டு குளிர்காலத்தின் ஆறு மாதங்களில் 68 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. வரும் வார இறுதியில் மேலும் பனிப்பொழிவு நிலவ வாய்ப்புள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது.